செம்மணி

நிலம் 1 துகள் 8 வள்ளுவர் ஆண்டு 2051 05 - 11 புரட்டாதி வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# அரசியல்வாதிகளையும் நம்பிக் கெட்டோம்

## வீடில்லாக் குடும்பத்தின் சோகக் கதை

- குமரன் -



"நான் மூண்டு வருசமா அவைக்காக வேலை செய்தனான் கடைசியில கிடைச்சது இந்த ஒரு ரீ-சேர்ட்தான்." தான் அணிந்திருந்த ரீ-சேர்ட்டை காட்டிக்கொண்டு சொல்கிறார் முயீபன்.

தான் யாரை நம்பினார், அவர்களை நம்பியதற்கு தனக்கு கிடைத்த பயன் என்ன என்று தனது குடும்பத்தின் நிலமையை சுட்டிக்காட்டிக்கொண்டே சோகத்துடன் கூறத் தொடங்குகிறார்...

"அளவெட்டி வடக்கு, பத்தானை.. இந்த இடம்தான் நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம், கலியாணமும் இஞ்சத்த ஆளை செய்தபடியால கடைசிவரைக்கும் இஞ்சையே இருக்கவேண்டியதாப் போய்ச்சுது.. 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து போனம்.. போய் அங்க, இஞ்ச எண்டு இருந்திட்டு 2004ஆம் ஆண்டு சொந்த இடத்துக்குப் போவம் எண்டுபோட்டு இஞ்சால வந்தம்.. இஞ்சால வந்ததுதான் வந்தம் வந்ததுக்குப் பிறகு நாங்கள் படுற கஸ்டம் கடவுளே எண்டு ஒருத்தரும் அனுபவிக்கக்கூடாது.."

"எங்கட பிள்ளையள்கூட வளர்ந்திட்டினம் ஆனால் எங்கட குடும்ப நிலைமைதான் இன்னும் வளரேல்ல.., குடும்பத்தில எங்கள் ரெண்டுபேரோட சேர்த்து (மனைவியையும் காட்டியபடி) மொத்தம் ஆறு பேர், ஆறு பேரிண்டை சாப்பாட்டுக்கும் என்னால செய்யக்கூடிய வேலையளைச் செய்து குடும்பத்திண்டை மூச்சைப் பிடிச்சு வச்சிருக்கன்.. உழைக்கிற காசு சாப்பாட்டுக்கே போறதால குடும்பத்துக்கு அத்தியாவசியமா தேவைப்படுற எந்தவொரு தேவையையும் என்னால பூர்த்திசெய்ய முடியேலாம கிடக்கு.."

கிட்டடியில்தான் அரைச் சுவர் வைத்து நிலம் இழுத்து மேலே தகரங்களால் கூரை போட்டதாக ஒரு கொட்டிலை தனது இல்லமாக்கியிருக்கிறார். அதற்கு முன்னர் இருந்ததெல்லாம் வெறும் ஓலைக் குடிசைதான். வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து சென்று பின்னர் திரும்பி வந்தவர்களுக்கு



மனித குலத்தின் மேம்பட்ட ஓர் அறிவாற்றல் யுகம் ஆரம்பிப்பதற்கான நுழைவாயில் தான் இந்த மூளைக்குள் சிப் தொழில் நுட்பம்.

ஆராயலாம் உள்ளே...




ஓவிய மேதை கவனம் பெறத் தவறிய கதை இது. காலம் சென்றுவிட்ட ஆசை இராசையா அனைவரினதும் ஆத்மாவில் நிலைத்தார்.



# செம்மண்

வாரப் பத்திரிகை

551 A, கஸ்தூரியரர் வீதி, யாழ்ப்பாணம்



மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com

தொடர்பு எண்: 021 492 7781



உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

**துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்**


## எப்போதுதான் புரிந்துகொள்வார்கள்?

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய முதல் உரையையொட்டிய சலனங்கள் தெற்கிலும் சமூக வலைத் தளங்களிலும் ஓய்ந்தபாடில்லை. "உலகில் உயிர் வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியுமாகிய எனது தாய் மொழியிலும் ஆரம்பித்து பின்னர் எல்லா மக்களையும் இணைக்கும் மொழியிலும் எனது வாழ்த்தினைக் கூறுகின்றேன்." என்றார் விக்னேஸ்வரன்.

அவரது இந்தக் கருத்தை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கவேண்டும் என்று உடனடியாகவே எதிர்ப்புக் குரல்கள் பதிவு செய்யப்பட்டன. ஆளும் ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சியிலிருந்து மட்டுமல்லாமல் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியிலிருந்தும்கூட கடுமையான எதிர்ப்பு நாடாளுமன்றத்திற்குள்ளேயே பதிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து விக்னேஸ்வரன் சிங்கள ஊடகங்களின் வெளிச்சத்துக்கு வந்தார். அவர் சிங்கள, பௌத்த மேலாதிக்க உணர்வோடு நடத்திய இந்த நேரடி மோதலின் விளைவாக அவரை சிங்கள எதிரியாக வகை மாதிரிப்படுத்திக் கொள்வதற்கான முனைப்புக்களோடு அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில்களைக் கொண்டு மேலும் சர்ச்சைகள் தெற்கில் தோற்றுவிக்கப்படுகின்றன.

விக்னேஸ்வரனைக் கைது செய்யவேண்டும் என்று வழக்குரைஞர் தர்சன வெரதுவேஜ் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமளவிற்கு இந்த விவகாரம் சென்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பின்னர் சிங்கள இனத்துக்கான ஒரு பொது எதிரியாக உருவகப்படுத்தக்கூடிய ஒருவரைத் தேடிவந்த சிங்கள, பௌத்த மேலாதிக்க சிந்தனை மைய ஊடகங்களுக்கு அவல் கிடைத்தது போலாகிவிட்டது.

இப்போது கேள்வியெல்லாம் இத்தகைய விவாதங்களால், அதாவது இந்த நாட்டின் பூர்வ குடிகள் அல்லது இந்த நாட்டின் முதல் மொழி என்ன என்பதைப் பற்றிய ஆய்வுகளால் இந்த நாட்டின் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு வந்துவிடுமா என்பதுதான்.

இலங்கையின் ஆதி வரலாறு, இனப் பரம்பல் குறித்து நேர்மையான ஆய்வுகளை முன்வைத்தவர்களாக மதிக்கப்படும் க.இந்திரபாலா மற்றும் பல நேர்மையான சிங்கள ஆய்வாளர்களின் கருத்துப்படி இலங்கையில் இன்று பேசப்படும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுமே வந்தேறு மொழிகள்தான். இங்கிருந்த ஆதிக் குடிகளின் மொழி என்ன என்பது பற்றிய தெளிவான முடிவு இல்லை என்றபோதும் அவர்கள் பேசியது தமிழோ சிங்களமோ அல்ல என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

இந்த வரலாற்று உண்மைகளைப் புறந்தள்ளிவிட்டு பூர்வ குடிகளாகிய தமிழர்கள் மற்றும் தமிழ் மொழிதான் இந்த நாட்டில் காலத்தால் முந்தியது என்று பெருமைப்பட்டுக்கொள்வதன் மூலம் நாம் என்ன தீர்வை எட்டிவிடப்போகின்றோம்? ஒருவேளை அந்தக் கூற்று உண்மையானதுதான் என்று வரலாற்று ஆய்வுகளின் மூலம் நாம் நிரூபித்தாலும் இன்று பெரும்பான்மையினமாக இருப்பர்கள் அதை ஏற்றுக்கொண்டு இந்த நாட்டைத் தமிழர்களிடம் ஒப்படைத்துவிடுவார்கள் என்று எண்ணுவதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?

அப்படிப்பட்ட நிலையில் எதற்காகத் தமிழ்த் தலைமைகள் இதுபோன்ற, அறிவியலில் இருந்து விலகிச் செல்லும் விவாதங்களில் தங்கள் நேரத்தையும் சக்தியையும் வீணடித்துக்கொண்டிருக்கின்றன? தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வ குடிகள் என்று நிரூபித்துவிடுவதால் மட்டும் இந்த நாட்டில் ஏதாவது மாறிவிடப்போகின்றதா?

எதிர்காலத்தில் தீர்வை எட்டுவதற்கான வழி வகை என்ன என்பதைப் பற்றிய தெளிவில்லாமல், அதீத பலம் பெற்றிருக்கும் ராஜபக்சக்களைச் சமாளிக்கும் பொறிமுறையை உருவாக்காமல் கடந்த காலங்களில் அர்த்தமற்று உழன்று கொண்டிருப்பதில் பயனேதும் இல்லை என்பதைத் தமிழ்த் தலைவர்கள் எப்போது புரிந்துகொள்ளப்போகிறார்கள்?



## அரசியல்வாதிகளையும்...

நிரந்தர வீடுகள் அரச உதவியில் கட்டிக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்க, இவர்களுக்கு மட்டும் அந்த உதவியைப் பெற எல்லாத் தகுதியும் இருந்தும் இதுவரையில் வீடு கிடைக்கவில்லை.

"மழைவந்தா வீட்டுக்குள்ள வெள்ளம் நிக்கும், பிள்ளையள் எல்லாரும் படிக்கினம். முதல் மூண்டு ஆம்பிளைப் பிள்ளையளும் **10**ஆம் ஆண்டு, **08**ஆம் ஆண்டு, **04**ஆம் ஆண்டு படிக்கினம். கடைசி பெம்பிளைப் பிள்ளை. முதலாம் ஆண்டு படிக்கிறா. நாங்கள் தான் படிக்கேல்ல பிள்ளையள் எண்டாலும் படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வரட்டும் எண்டா அதுகள் ஒழுங்கா படிக்கிறதுக்கு இடமும் இல்லை; கரண்டும் இல்லை..." தங்கள் நிலையை எண்ணி நொந்துகொள்கிறார் முயீபன்.

"ஒவ்வொரு நாளும் எப்ப பாம்புவரும் எப்ப பூச்சிவரும் எண்டு பாத்துப் பாத்துத் தான் இருக்கவேண்டிக்கிடக்குது.." என்று மூஜீபனின் மனைவி சுகிர்தா தன் பங்குக்கு தங்கள் சோகங்களைப் பகிர்ந்துகொள்கிறார். குறிக்கிட்ட முஜீபன் "இவ்வளவு காலமும் உழைச்சு மிச்சம் பிடிச்சதிலதான் வீட்டுக்குள்ள வெள்ளம் வருகுதெண்டு அரைவாசிக்கு கல்லுவச்சுக்கட்டினான் அதுக்கு மேல கிடந்த பழைய தகரம் கொஞ்சத்தை வச்சு சுத்தி தகரம் அடிச்சம்"

மழைக்கும் வெயிலுக்கும் ஒதுங்கக் கிடைத்திருக்கும் அந்த இடத்தைத் அவர் தயார்ப்படுத்திக் கொண்ட கதை அது. ஒரு நிரந்தர வீட்டுக்காக **16** வருடங்களாகக் காத்துக் கிடக்கின்றது இந்தக் குடும்பம். ஒரு வீடு அவர்களுக்கு அத்தியாவசியமாகவும் இருக்கின்றது.

கீழ் மட்ட மேல் மட்ட அதிகாரிகளின் செல்வாக்குள்ளவர்கள் சொந்த வீடு வைத்திருக்கும் போதே மீளக்குடியமர்ந்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக மற்றொரு வீட்டிற்கும் உதவியைப் பெறுகின்றபோதும், சொந்தத்தில் தாமாகவே நிரந்தரக் கல் வீடொன்றைக் கட்டிக்கொள்ளும் வசதி வாய்ப்புக்களைக் கொண்டவர்களுக்கு அரச வீட்டுத் திட்டத்தில் உதவி வழங்கப்படும் போது வீடு ஒன்று மிக மிக அவசியம் என்று அல்லாடும் இந்தக் குடும்பம் மட்டும் கவனிப்பாரின்றி அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் முயீபன் மட்டுமில்லை **16** குடும்பங்களின் நிலை இதுதான். அவர்களுக்கும் நிரந்தர வீடுகள் இல்லை. **30** வருடங்களாக இவர்களது பகுதிக்கு கிராம அலுவலராக ஒருவரே இருந்திருக்கிறார். இந்த மக்கள் படும் அவலம் அவருக்குத் தெரியாமலில்லை. ஆனாலும் இந்த மக்களுக்கு வீடுகள் கொடுக்கப்படவில்லை.


ஏன் என்பதற்கு அதிகாரிகள் வழக்கம் போலவே வறட்டுக் காரணங்கள் சொல்கிறார்கள். தேவையுள்ளவர்களுக்கு வீடுகளைக் கொடுக்க முடியாத இத்தகைய அதிகாரிகள் காரணங்களைச் சொல்லிக்கொண்டு பதவிகளில் இருப்பதால் என்ன பயன்?

இவர்கள் அதிகாரிகளால் மட்டுமல்ல அரசியல்வாதிகளாலும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். வலி. வடக்கு பிரதேச சபையின் அளவெட்டி வடக்கு வட்டார உறுப்பினர் விஜயராஜ் மட்டுமே சில தகரங்களை வாங்கிக் கொடுத்துள்ளார், அவரைத் தவிர வேறு எந்தவொரு அரசியல்வாதிகளும் உதவிகளைச் செய்யவில்லை. ஆனால், சட்டத்தை மீறி தேர்தலில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் லட்சங்களைக் கொட்டி சுவர்களை நாசமாக்கினார்கள்.

"இந்தா இப்பவாற வீட்டுத்திட்டத்தில போட்டுத்தாறன், அடுத்த வீட்டுத்திட்டத்தில உங்களுக்குத்தான் முன்னுரிமை, இந்த முறை தவறவிடப்படாது எண்டு சொல்லிச் சொல்லி நம்பவச்ச எங்கட ஜி.எஸ். இப்ப பென்சன் எடுத்துக் கொண்டு போய்ட்டார். அவர் மாடி வீடு கட்டி அவர் இருக்கிறார்."

"நான் மூண்டுவருசத்துக்கு மேலா அங்கஜன் இராமநாதனுக்கு வேலை செய்தனான். அவையள் எங்களுக்கு வீடு தாறம் எண்டு சொல்லிச்சினம். நம்பினம். உந்தக் காலி, கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் எண்டு எங்க கூட்டம் நடந்தாலும் ஆக்களை கூட்டிக்கொண்டு வரச் சொல்லுவினம். எல்லா இடமும் போவம். அப்பிடியாச்சும் வீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையாலதான். ஆனா இதுவரைக்கும் ஒரு தற்காலிக கொட்டில் கூடத் தரவில்லை. இங்க இருந்து **52** பேரை கூட்டிக்கொண்டு போனாங்க இவையிண்டை வாக்குறுதியை நம்பி, அங்க போய் **3** நாள் நிண்டு வந்தனாங்க இவ்வளவும் எங்களுக்கு வீடு வேணும் எண்டதுக்காக தான்." விசனப்படுகிறார் முயீபன்.

"ஒவ்வொருக்காலும் ஒவ்வொருத்தர் வருவினம் நீங்க எங்களுக்கு ஒட்டுப் போடுங்கோ நாங்க அது செய்யிறம் இது செய்யிறம் எண்டு, ஆனா எதுவும் செய்யிற பாடில்ல.. கொழும்புக்குப் போனதுக்கு



அங்கயன்ட ஆக்களால எனக்கு கிடைச்சதெண்டா நான் போட்டிருக்கிற இந்த ரீசேர்ட் தான்.. எங்கடை இடத்தில இருக்கிறா கல்யாணி எண்டு ஒராள் அவா அங்கயன்ட அப்பாவ கூட்டிக்கொண்டு வந்து இங்க மீற்றிங் எல்லாம் வச்சவ. அதுக்கும் ஆக்கள கூட்டிக்கொண்டு போனான். அவர் பார்த்துப் போட்டு இந்தா உங்களுக்கு கொட்டில் ஒண்டு போட பத்து சீமேந்தும் தகரமும் அனுப்பிவிடுறன் எண்டுபோட்டு போனவர்தான் இதுவரைக்கும் ஒண்டுமில்ல."

இந்தக் குடும்பங்களுக்கு அருகாமையிலேயே பல வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டு ஆட்கள் இல்லாமல் கிடக்கின்றன. உரியவர்கள் யாழ்ப்பாணத்திலோ வேறு இடங்களிலோ இருக்கிறார்கள். வீடுகள் ஆள்களின்றி பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. உண்மையில் மீளக்குடியமராமல் அப்படி நடிப்பவர்களுக்கு வீடுகள் கிட்டவும் உண்மையில் தேவையுள்ளவர்களுக்கு உதவிகள் கிடைக்காமலும் இருக்கத்தக்க பொறிமுறையைச் செயற்படுத்துவது அரச இயந்திரத்தின் தோல்விதானே! அப்படியென்றால் இங்குள்ள தமிழ் அதிகாரிகளின் நிர்வாகத் தோல்விதானே இது.

"எங்கடை பிள்ளையளாவது படிச்சு ஒரு நிலமைக்கு வரவேணும்.. அதுகள் படிக்குதுகள் எப்பிடியும் நல்ல நிலமைக்கு வருங்கள்... பிள்ளையள் படிக்கிற ரியூசனுக்குக் கூட காசுகட்ட எங்களிட்ட வசதி இல்ல. ரியூசன் சேர் காசுகட்டாட்டிலும் பிரச்சினை இல்லை முதல் வந்து படியுங்கோ எண்டு செல்லி வீட்ட வந்து கூட்டிக்கொண்டு போவினம்.." முயீபன் இன்னும் நம்பிக்கையைக் கைவிடவில்லை என்பதே அவரது பலம்.

"நான் பொறுப்பெடுத்து இப்ப ஒன்றரை வருடங்கள்தான் ஆகுது. அந்த மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவேண்டிய சேவைகள் தொடர்பில் நான் நன்கு தெரிந்து வைத்துள்ளேன். நான் பொறுப்பேற்றதன் பின்னர் **10** லட்சம் பெறுமதியான **6** வீடுகள் வந்தன, அவைகள் அனைத்தும் காணமல்போனோர் குடும்பம், விதவைகள் என முன்னுரிமைப்படுத்தி கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர் **6** லட்சம் ருபா பெறுமதியான வீடுகள் கொடுக்கப்பட இருந்தன எனினும் இவர்கள் அந்த வீட்டுத்திட்டத்தினை பெற்றால் இன்றைய பொருளாதார நடமுறைக்கு மேலும் கடன்காரர் ஆக வேண்டிவரும் என்று கூறி வேண்டாம் என்று விட்டனர். உண்மையும் அதுதான் அவர்களுடைய நிலமைக்கு அவர்கள் இந்த திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டால், இருக்கின்ற நிலமை இன்னும் மாறி அவர்கள் பரிதாப நிலைக்குத்தள்ளப்படுவார்கள். எனினும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களை கருத்தில் வைத்து இனிவரும் வீட்டுத்திட்டங்களில் முன்னுரிமை வழங்க வேண்டும்.." என்கிறார் அந்தப் பகுதிக்கான கிராம அலுவலராகத் தற்போது பணியாற்றுபவரான வலன்ரீனா.

# 20 மீண்டும் பின்னோக்கிய பயணம்!

■ ரி.பி.அன்ரன்

இலங்கை அரசமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள 20ஆவது திருத்தத்திற்கான வரைவு அரசிதழ் அறிவிப்பாக வியாழக்கிழமை வெளிவந்துவிட்டது. கொழும்பின் ஆட்சியாளர்களான ராஜபக்சக்கள் பொதுத் தேர்தலின் போது உறுதியளித்தபடி 19ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கும் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டனர்.

அதிகாரங்கள் அனைத்தும் ஒருவரிடமே குவிக்கப்பட்ட அதிபர் மைய ஆட்சியமைப்பில் இருந்து மக்களாட்சியை நோக்கி இலங்கையின் அரசமைப்பை, ஆட்சி முறைமையை நகர்த்திவரும் நோக்கில் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தில் இருந்து முற்றிலுமாக விலகி, 1978ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் ஜே.ஆர்.ஜெவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அதிகாரக் குவிப்பு ஆட்சிமுறையை மீண்டும் உருவாக்குவதற்கான முயற்சியே 20ஆவது திருத்தம் என்கிற கண்டனம், விமர்சனம் எதிர்த்தரப்பினரிடம் இருந்து உடனடியாகவே வந்துவிட்டது.

வெளியிடப்பட்டுள்ள திருத்த வரைபு மீது சமூகக் கருத்தாடல்களை நிகழ்த்துவதற்கு இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும். இந்தத் திருத்தத்தை விரும்பாதவர்கள், அது ஏற்கனவே இருக்கும் அரசமைப்பு விதிகளுக்கு முரணானது என்று கருதுபவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டால் அதன் தீர்ப்புக் கிடைத்த பின்னர் அல்லது எதிர்ப்பு ஏதுமில்லையெனில் இரு வாரங்களின் பின்னர் 20ஆவது திருத்தத்தைச் சட்டமாக்கிக் கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் முன்வைப்பார்கள்.

இந்தத் திருத்தத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), ஐக்கிய மக்கள் சக்தி போன்ற எதிர்க் கட்சிகள் உடனடியாகவே எதிர்ப்பை வெளியிட்டாலும் அதற்கெதிராக நீதிமன்றத்தை நாடப்போவதாக இதுவரையில் அறிவிக்கவில்லை. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் தெளிவான மூன்றிலிரண்டு ஆதரவைத் தக்க வைத்துள்ள ராஜபக்சக்கள் ஆட்சித் திருத்தத்தை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

## '20' இல் உள்ள முக்கிய அம்சங்கள்

அரசமைப்பின் 20ஆவது திருத்த வரைவுப்படி நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று ஓராண்டு முடிவடைந்த பின்னர் நடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.


19 ஆவது திருத்தத்தின்படி நான்கரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும். 19 வருவதற்கு முன்னர், நாடாளுமன்றம் பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அந்தக் காலப் பகுதி ஓராண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30ஆகவும் பிரதி மற்றும் துணை அமைச்சர்களின் எண்ணிக்கை 40ஆகவும் இருக்க வேண்டும் என்ற வரையறை நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமக்குத் தேவையான அளவு அமைச்சர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு நிறைவேற்று அதிகார அதிபருக்குக் கிட்டும்.

மகிந்த ராஜபக்சவின் பதவிக் காலத்தில் 80 வரையான அமைச்சர்கள் பதவியில் இருந்திருக்கிறார்கள். இதையடுத்தே 19ஆவது திருத்தத்தில் அமைச்சரவையின் அளவு வரையறை செய்யப்பட்டது.

தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களைப் பதவி நீக்குவதற்கும், எந்தவொரு அமைச்சையும் தனக்குக்கீழ் கொண்டுவருவதற்குமான அதிகாரமும் 20ஆவது திருத்தத்தின் மூலம் அதிபரின் கைகளைச் சென்றடையும். 19ஆவது திருத்தத்திற்கு முன்னரும் இதே நிலைமை காணப்பட்டது. 19 ஆவது திருத்தத்தில் அதிபர் தன்வசம் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் கொண்டிருக்கத் தடை விதிக்கப்பட்டது.



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

அதிபரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள், இரண்டு தடவைகள் மாத்திரமே அந்தப் பதவியை வகிக்கலாம் என்ற 19இன் ஏற்பாட்டில் மாற்றம் செய்யப் படவில்லை. ஆனால், அது தொடர்பான வாசகங்களில் மற்றொரு பதவிக்காலம் என்பது இரண்டாவது பதவிக்காலம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
அதிபர் பதவியில் இருக்கும்போது அவருக்கு எதிராக எந்தவொரு நீதி மன்றத்திலும் வழக்குத் தொடரவோ, தொடர்ந்த வழக்கை நடத்தவோ முடியாது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமுடியாது, தெரியாமல் போட்டியிட்டாலும் நாடாளுமன்றம் வரவு முடியாது என்ற நடைமுறையும் 20 ஊடாக நீக்கப்படவுள்ளது.

உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அரசமைப்பு பேரவை நீக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக நாடாளுமன்றப் பேரவை என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு பேரவையில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், மூன்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இடம்பெற வழிவகை செய்யப்பட்டிருந்தன. எனினும், நாடாளுமன்றப் பேரவையில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இடமில்லை.

நாடாளுமன்றப் பேரவையில் 5 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கலாம். தலைமை அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி ஆகியோர் அதில் இடம் பெற்றிருப்பர்.

அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 35 இலிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதிபரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள், இரண்டு தடவைகள் மாத்திரமே அந்தப் பதவியை வகிக்கலாம் என்ற 19இன் ஏற்பாட்டில் மாற்றம் செய்யப்படவில்லை. ஆனால், அது தொடர்பான வாசகங்களில் மற்றொரு பதவிக் காலம் என்பது இரண்டாவது பதவிக்காலம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதிபர் பதவியில் இருக்கும்போது அவருக்கு எதிராக எந்தவொரு நீதி மன்றத்திலும் வழக்குத் தொடரவோ, தொடர்ந்த வழக்கை நடத்தவோ முடியாது.

கணக்காய்வு சேவை ஆணைக் குழு, தேசிய பெறுமை ஆணைக் குழு ஆகிய இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்பட்டுள்ளன. காவல்துறை ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட மற்றைய ஆணைக்குழுக்கள் அப்படியே உள்ளன.

தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது. தலைவரையும் அவரே நியமிக்கலாம்.

முப்படைத் தளபதிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோரையும் அதிபரே நியமிப்பார்.

## எதிர்ப்புக்கள்

இந்தத் திருத்த வரைவு மீது நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போதுகூட தேவையான திருத்தங்களை மேற்கொள்ளலாம். தாம் நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியேயும் இந்தத் திருத்தத்திற்கு எதிராகப் போராடப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் அறிவித்துள்ளார்.

இந்தத் திருத்ததில் இடம்பெற்றிருக்கும் எந்தவொரு விடயத்திற்கும் மக்களின் கருத்துக் கணிப்பைப் பெறவேண்டிய தேவை இல்லை என்றும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மட்டுமே அதனை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் சட்டமா அதிபர் ஏற்கனவே அறிவித்திருப்பதால் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு ராஜபக்சக்களுக்கு பெரிய தடைகள் ஏதுமில்லை என்றே கருதப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் திருத்தம் நிறைவேறிய பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பம் இடும் தினத்தில் இருந்து அது சட்டமாக நடைமுறைக்கு வரும்.

இந்தத் திருத்தத்தின் மூலம் இலங்கை மக்களாட்சி முறையிலிருந்து பிற்போக்கான ஆட்சியை நோக்கிச் செல்வதாக விமர்சித்துள்ள ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க, இந்தத் திருத்தத்தை எதிர்ப்பதாகவும் அறிவித்தார்.

"அதிகாரங்கள் அனைத்தையும் ஒருவரிடம் ஒப்படைத்து மக்களாட்சியிலிருந்து பிற்போக்கான ஆட்சியை நோக்கி ஆட்சியாளர்கள் செல்கிறார்கள்" என்றார் அவர்.

அதிபருக்குத் தேவையானவர்கள், இணக்கமானவர்கள் மட்டுமே இனி சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படுவார்கள், அதன் மூலம் ஆட்சியாளர்களுக்கு இணக்கமான ஆணைக்குழுக்களே எதிர்காலத்தில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

பசில் ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிவிடுவதிலும் பார்க்க இலங்கையின் அரசமைப்பை மாற்றிவிடுவது சிறந்தது என்று எண்ணியதால், இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களும் நாடாளுமன்றத்திற்குச் செல்ல முடியும் என்கிற திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றும் அனுர தெரிவித்தார்.

இந்தத் திருத்தத்திற்கு ஆட்சிக்குள் இருந்தும் எதிர்ப்பு வந்துள்ளமை கவனத்திற்குரியது. இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கிராமிய கலை மற்றும் கலாசார அலுவல்கள் துணை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக ஆட்சியாளர்கள் எடுத்திருக்கும் தீர்மானம் தவறானது என்றார் அவர்.

இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களை உயர் பதவிகளில் வைத்தால் என்ன நடக்கும் என்பதை மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் அர்ஜுன மகேந்திரனைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

1978ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ச எதிர்த்த, ஜே.ஆர்.ஜெவர்த்தன அறிமுகப்படுத்திய அரசமைப்பின் கூறுகளைக்கொண்ட வலுவான நிறைவேற்றதிகாரப் பதவியையே இப்போது 20ஆவது திருத்தம் என்கிற பெயரில் அறிமுகம் செய்கின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

20ஐ நிறைவேற்ற முன்னர் அது பற்றிப் பெருமளவில் கலந்துரையாட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் சபாநாயகர் கரு. ஜெயசூரிய தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தின் மூலம் ராஜபக்சக்கள் அதிபரிடம் குவித்த அதிகாரங்களைப் பறித்தெடுத்து அவற்றை நாடாளுமன்றத்திற்கும் பாரப்படுத்தும் வகையில்தான் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டிருந்தது. இப்போது அந்த 19ஆவது திருத்தத்தை அகற்றி மீண்டும் 18ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது போன்றதே 20ஆவது திருத்தம்.

மொத்தத்தில் இலங்கை மீண்டும் பின்னோக்கிச் செல்லத் தொடங்கியிருக்கின்றது என்பதற்கான சான்றுகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. ராஜபக்சக்கள் நாட்டின் ஒரே குடும்ப அதிகார மையமாக எழுச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதுடன் அவர்கள் இந்த நாட்டைத் தமது உடமையாக்கிக் கொள்வார்கள் என்பது வெளிப்படையாகிறது. ■

காயா



# ஆசை இராசையா ஓர் ஓவியக் கற்கை நெறி!

அது கடும் கோடை காலம். சுதுமலை அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள அந்தச் சிறிய குளத்தைச் சூழ்ந்துகொண்டு நின்ற இளம் மாணவர்கள் தமது வரைதல் பலகைகளை ஆங்காங்கே பொருத்தி, அந்தத் தரைக் காட்சியை வரைவதற்குத் தயாரானார்கள். அவர்களோடு கூட நின்ற ஆசான் மாணவர்களை வழிப்படுத்தினார். மாணவர்கள் தமக்குப் பிடித்தமான நிலைகளில் நின்று வரைய ஆரம்பித்தார்கள். ஆசானும் தான் தேர்ந்தெடுத்த இடத்தில் தனது வரைதல் சட்டத்தைப் பூட்டி வரைய ஆரம்பித்தார். நேரம் செல்லச் செல்ல வெயில் உச்சி ஏறியது. சுட்டெரித்தது. அவர்களை வாட்டியெடுத்தது. ஆங்காங்கே கிடைத்த நிழல்களுக்குள் ஒதுங்கிய மாணவர்கள் சற்றுக் காலாறிக் காலாறித் தமது வரைதலைத் தொடந்தனர். பெண் மாணவர்கள் சிலர் குடை பிடித்தபடி நின்று வரைந்தனர். அவர்களின் வயது முதிர்ந்த அந்த ஆசான் அந்த உச்சி வெயிலுக்குள் சர்வ சாதாரணமாக நின்றுகொண்டு தனது வரைதலைத் தொடர்ந்தார். சிறிய ஓய்வைக்கூட அவர் தேடவில்லை. வெயிலைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. துடிப்பு மிக்க இளம் மாணவர்கள் வெயிலால் வாடி வதங்கியிருக்க, அவர் சிறிதும் சலனமில்லாமல் வரைந்து கொண்டேயிருந்தார். பெரிய தொரு ஆலம் விருட்சத்தை முதன்மைப்படுத்திய அவரது ஓவியம் முடிவில் உயிர் கொண்டெழுந்தது. அதைவிடவும் பெரு விருட்சமாக மிளிர்ந்தார் ஆசை இராசையா என்கிற அந்த ஆசான். யாழ்ப்பாணமிருந்து மருதனார் மடத்திலுள்ள நுண்கலைக் கல்லூரிக்கு அவர் சைக்கிளில் சாதரணமாக வந்துபோவதும் மறக்கவியலாத பல ஞாபகங்களைத் தட்டியெழுப்புகின்றன.

ஓவியத் துறையில் திறமையுள்ள மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய யாழ்ப்பாணத்து ஓவியர் ஆசை இராசையா. விருதுகள் பெறுவது குறித்து அதிகம் அக்கறைப்பட்டிருக்காவிடினும், கலாபூசணம் ஆளுநர் விருது உட்படப் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். ஓவியம் வரைதலையே தனது வாழ்வாகக் கொண்டிருந்தவர். ஓவிய ஆசிரியராகக் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்த சமயம் - 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு ஆசிரியத் தொழிலை இழந்து ஓய்வூதியத்துக்காக அவர் ஏறி இறங்காத இடமிருந்திருக்கவில்லை. முழு நேர ஓவியராக மிளிர்ந்த அவருக்கு யாழ்ப்பாணச் சமூகமாகட்டும், யாழ்ப்பாணக் கல்விச் சமூகமாகட்டும் உரிய மதிப்பை வழங்கியதா? அவரது வளர்ச்சிக்கு உதவியதா? அவரது கலை வாழ்வுக்கு ஊக்கமளித்ததா? அல்லது அவரது ஆளுமையை - திறமையைப் ப்யன்படுத்திக் கொண்டார்களா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினால், திருப்தி தராத பதில்களே கிடைக்கும். அரச கட்டமைப்பால் ஓய்வூதியத்துக்கு அலைக்கழிக்கப்பட்டார். வருகைதரு விரிவுரையாளராக அவர் சில பருவ காலங்களில் மாத்திரம் பல் கலைக் கழகங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டார். தனக்கென ஓர் ஓவிய முறைமையையும் - அதில் உச்சமும் தொட்டு நின்ற தனித் திறமையாளரான அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சமூகம் அவரைச் சரிவரவோ திருப்தியாகவோ பயன்படுத்தியிருக்கவில்லை என்பது பெரும் குறை. மேலைத்தேச ஓவிய முறைமைகளையும், வரலாற்றுக் கோட்பாடுகளையும், அவை சார்ந்த கலை முறைமைகளிலும், அவற்றை அறிவதிலும், ஒப்புவிப்பதிலும் அக்கறை காட்டியிருந்த சமூகம் பெரும் பாடப் பரப்பாகவிருந்த அந்த ஆளுமையாளரைக் கற்கத் தவறியது கவலைக்குரியதே.




பல ஓவிய மரபுப் பண்புகளை, வர்ணப் பிரயோகங்களை, வரைதல் நுட்பங்களை, அவற்றில் இழையோடுகின்ற உள்ளுணர்வுக் கதைகளை, அவரது அனுபவப் பகிர்தலை ஓரளவுக்காவது முழுமையாக உள்வாங்கியவர்களாக அவருடன் நெருங்கிக் கற்ற ஒரு சில மாணவர்கள் இருப்பது ஆறுதல். எது எப்படியோ ஒரு பெரும் ஓவிய விருட்சத்தை இந்தச் சமூகம் இழந்தாகிவிட்டது. தனது வாழ்வில் பல துன்பங்களுக்கு ஆட்பட்ட அவர் பலராலும் கற்கப்பட வேண்டிய பாடமாகிவிட்டார்.

() () ()

யாழ்ப்பாணத்து மண்ணை - மரபைச் சித்திரிக்கின்ற ஓவியங்கள் ஆசை இராசையாவினுடையவை. ஆனால், அவர் மேலைத்தேய ஓவியப் பண்புகள் - பாணிகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவற்றைப் புறமொதுக்கவில்லை. ஆனாலும் அவரது ஓவியத்தின் இருள் வர்ணத் தன்மையாகட்டும், கரும் பனையாகட்டும் எல்லாமே யாழ்ப்பாண மண்ணின் வாசனையை வீசி நிற்பவையே.

'புதுமையான சிந்தனையும் செயற்பாடும் படைப்பாற்றல் உள்ள கலைஞனிடம் இருக்க வேண்டிய முக்கிய குணாம்சம். புதுமையை நோக்கிய நகர்வு இல்லாவிட்டால் கலைஞன் என்று அழைக்கத் தகுதியற்றவனாகிவிடுகிறான். நவீன பாணியிலான ஓவியங்களைப் படைப்பதற்குக் கலைஞன் உந்தப்படுவது தவிர்க்க முடியாதது. அப்படிப்பட்ட படைப்புக்கள் வேண்டத்தக்கதாக நாம் கருத வேண்டிய அவசியமில்லை. அந்தப் படைப்பாளிகள் கையாளும் உத்திகளும் அதனூடக வெளியிடப்படும் திறமைகளும் இரசிக்கக் கூடியவை"

என்று தனது நேர்காணல் ஒன்றில் தெரிவித்த அவரது கூற்றிலிருந்து அவர் மேலைத்தேசப் பாணி மற்றும் நவீன ஓவியப் பாணிகளும் கொண்டாடப் படவேண்டியவை என்பதைச் சுட்டியிருந்தமை தெளிவாயிற்று. ஆனாலும் அந்த நிலையை எட்டுவதற்கு முன்பாக அனைவரும் அடிப்படையான கலைமுறைமைகளில் தேர்ச்சி கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிடத் தவறவில்லை, "தற்கால இளங்கலைஞர்களின் செயற்பாடுகளில் சில முரண்பாடுகள் இருக்கின்றன. கலைகளைப் பொறுத்தவரை அதன் அடிப்படைக் கற்றல் முக்கியமானது. உடற் கூற்றியலறிவோ பிற கட்டமைப்புக்களைப் பற்றிய தேர்ச்சி மிகவும் அவசியமானது. குறைந்தது மூன்று வருடங்களாவது தொடர்ந்து இவற்றைப் பரீட்சயப்படுத்திக் கொள்வதனூடாக அடிப்படை ஞானத்தைப் பெற வேண்டும். இவையே ஒரு கலைஞனுடைய அடித்தளம் இந்த அடிப்படை ஞானத்தைப் பெற்றவனே நவீன பாணி ஓவியப் படைப்பாளியாகத் தகுதியுடையவனாகின்றான்.



நம் மத்தியில் பேசப்படும் பல ஓவியர்களுடைய ஆரம்பகாலப் பயிற்சியை அவதானித்தால், உண்மை புரியும். பிக்காசோ, டாலி, மனே போன்ற பலரும் அந்த அடித்தளத்தி லிருந்தே தமது படைப்புக்களை ஆரோக்கிய மாகப் படைத்துள்ளார்கள் - என்றிருந்தார்.

என்னுடைய படைப்புக்களின் என் மண்ணும் மக்களும் பதியப்படுவது தவிர்க்க முடியாமல் போகிறது. ஆனாலும் அதுதான் என்னுடைய எல்லை என்று இல்லை. படைப்பாற்றல் என்பது எல்லாவற்றையும் தாண்டிப் பயணிப்பதுதான் கலைப்பயணத்தில் ஒரு எல்லையைத் தீர்மானிப்பதென்பது அர்த்தமற்றது. கலைஞன் ஒரு சூழ்நிலைக் கைதி. வாழும் சூழலிருந்துதான் அனேகமாக அவனுக்குரிய கருப்பொருட்கள் கிடைக்கின்றன. இந்த வகையில் என் படைப்புக்களில் இவை தாமகவே வந்து ஒட்டிக்கொள்கின்றன - என்று தன்னுடைய ஓவியங்களின் மண் - மரபு சார்ந்த விடயங்கள் அதிகமாகவுள்ளமை குறித்தும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.



ஜூலையில் வேலை இழந்த அனுபவம் என்னைவிட்டு விலகவில்லை. இவற்றை என் ஓவியங்களிலும் காணலாம் ஆனால் இந்தக் கசப்பான நிகழ்வுக்குப்பின் நான் சரியாகக் கஸ்ரப் பட்டிருக்கிறேன். அப்பொழுது திருமறைக் கலா மன்றத்தினரால் 'கலைமுகம்' என்ற சஞ்சிகை வெளிவந்துகொண்டிருந்தது. இடப்பெயர்ச்சிக்குப் பின்னர் சொந்த, இடத்துக்குத் திரும்பிய பின்னர் பலருடைய வீடுகள் தரை மட்டமாய் இருப்பதைப்பார்த்த வேதனை கலைமுகத்தில் வந்த ஓவியங்களிலொன்று நாலுபக்கமும் போர் மேகம் குவிந்து, இராணுவம் சூழப்பட்ட நிலையில்

(06ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளை அழகு தரும் மண்டைதீவு கண்ணாக் காடு



காயா

யாழ். குடாநாட்டுக்குக் கிழக்கேயுள்ள சப்த தீவுகளில் முதலில் அமைந்திருப்பது மண்டைதீவு. சிறிய தீவு அது. அதன் சனத்தொகையும் மற்றைய தீவுகளைவிடக் குறைவானதே. ஆனாலும் கண்டல் தாவரங்களை (கண்ணாக் காடுகள்) பெருமளவில் தன்னகத்தே கொண்டு கவனமீர்த்து நிற்கிறது மண்டைதீவு. மண்டைதீவை அண்மித்துள்ள சதுப்பு நிலப்பகுதியில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் சிறிய சிறிய புதர்கள் போன்று காட்சியளித்துக் கொண்டிருந்த கண்டல் தாவரங்கள் தற்போது அபரிமிதமான வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. அவற்றின் அழகும் கொள்ளை!

### கண்டல் காடுகளின் வளர்ச்சி

யாழ்ப்பாணத்திலிருந்து தீவுகளை நோக்கிச் செல்லும் முதன்மை வீதி மண்டைதீவுச் சந்தியில் இரண்டாகப் பிரிகிறது. மண்டைதீவுக்கு ஒரு வீதியும், ஊர்காவற்றுறை - குறிகாட்டுவான் நோக்கி மற்றைய வீதியும் செல்கின்றது. மண்டைதீவுச் சந்தியில் பிரிவடைந்த பின்னரான இரண்டு வீதிகளுக்கும் இடையே முக்கோண வடிவில் பரந்திருக்கின்ற சதுப்பு நிலத்தில்தான் அமைந்துள்ளது இந்தக் கண்டல்காடு. கடலோடோ, நீரோட்டங்களோடோ நேரடியாகத் தொடர்புபடாத வகையில் இரண்டு வீதிகளுக்கு இடையே அடங்கிவிடுகின்றது இந்தக் கடற்கரைப் பரப்பு.



வெள்ளப்பெருக்குக் காலங்களில் கிடைக்கின்ற கடல் நீரிலும், வற்றுக் காலங்களில் குறைந்தளவில் கிடைக்கின்ற நீரிலும், அந்தப் பகுதித் தட்ப வெப்ப நிலை மற்றும் சூழல் அமைவுக்கு ஏற்றவாறும் மெல்ல மெல்ல வளர்ந்து வந்த இந்தத் தாவரத் தொகுதி இன்றைக்கு இளமைப் பருவத்தில் கால் பதித்து நிற்கிறது என்றும் சொல்லலாம். சில வருடங்களுக்கு முன்னர் நீர் மட்டத்திலிருந்து இரண்டு, மூன்று அடிகள் வரையிலேயே அந்தத் தாவரங்களின் பசுமை மேல் தெரிந்தது. பசுமைக் கூட்டத்தை விலக்கி - அவற்றிடையிடையே வளைந்து நெளிந்து அமைந்த சிறிய சிறிய நீரோடைகள் அந்தக் கண்டல் காடுகளின் அழகை அதிகப்படுத்தியிருக்கின்றன. அந்தக் குறுகிய - சிற்றோடைகள், குகைப் பாதைகள் போன்ற அமைப்பை ஞாபகமூட்டின. எப்போதுமே அமைதி சூழ்ந்திருக்கின்ற அந்த இடம் இயற்கை அழகின் உச்சம்தான்.





### பட்சிகளின் வாழ்விடம்

கடலோடு அதிகம் தொடர்புபடாத வகையில் அமைந்திருந்தாலும் வற்றுக் காலங்களில்கூட அந்தக் கண்டல் காட்டுப் பகுதிகளில் நிலைத்திருக்கின்ற நீர் நிலை காரணமாகக் குறிப்பிட்டளவில், சிறிய சிறிய கடல் வாழ் உயிரினங்கள் அங்கு வாழ்கின்ற தன்மை காணப்படுகின்றது. இறால், நண்டு, சிறிய சிறிய் மீனினங்கள் சில என அந்தப் பகுதியில் வளர்ந்து பெருகுகின்றன. ஆனால், இவற்றைவிட இந்தக் கண்டல் காடுகளில் அதிகம் தங்கியுள்ளவை பறவைகளே.

பல வகையான பறவை இனங்கள் இந்தக் காட்டுத் தொகுதிக்குள் கூடமைத்துக் குடி கொண்டு விட்டன. இரண்டு, மூன்று அடி வரையில் வளர்ந்திருந்த இந்தத் தாவரங்களின் வளர்ச்சியும் இன்றைக்கு எட்டுத் தொடக்கம் பத்து அடிக்கு மேலாகிவிட்ட நிலையில் அந்தப் பறவைகளின் பெருக்கம் அதிகரித்துவிட்டது. சில பருவ காலங்களில் வெளிநாட்டுப் பட்சிகளும் இங்கு வந்து தங்கிப் போகின்றன என்று சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அந்தக் காடுகளுக்கு மேலாக வட்டமிட்டு ஆர்ப்பரிக்கின்ற பல வகைப் பறவைகளின் கீச்சொலிகளைக் காலையிலும் மாலையிலும் நாம் அங்கு இரசிக்கலாம்.

கண்டல் தாவரங்களின் மேலாகப் பறவைக் கூட்டங்கள் பறந்து ஆர்ப்பரிக்கின்றன. சில கிளைகளில் அமர்கின்றன - பின் உந்தி எழும்பிச் சிதறிப் பறக்கின்றன. வேறு சில தமது கூடுகளை இனங் கண்டுவிட உள்ளேயே புகுந்துவிடுகின்றன. அதில் சில ஒன்றுக் கொன்று இடமளித்துத் திரும்பவும் வானத்தில் மிதக்கின்றன. சில முரண்பட்டு முடிவில் இணக்கமடைகின்றன. இரவாக இரவாக எல்லாமே அந்தத் தாவரங்களுக்குள் அடங்கிப் போய்விடுகின்றன. ஒரு மாலைநேரத்தில் காணக்கிடைத்த அழகிய காட்சி இப்படி நீள்கிறது.



### இடையூறளித்தல் கூடாது

நாட்டில் பல்வேறு பகுதிகளில் கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. அந்தப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் - தீவுப் பகுதிகளில் காணப்படுகின்ற கண்டல் காடுகள் சிறிய அளவிலானவையே. அத்தோடு மற்றைய கண்டல் காடுகளைப்போலல்லாமல் மண்டை தீவுக் கண்டல் காடு கடலோடு நேரடியாகத் தொடர்புபடாத வகையில் அமைந்திருப்பது. கடல் வாழ் சாகித்திய - உயிரினச் சூழலுக்குப் பெருமளவில் உந்துதல் அளிக்காதது. ஆனாலும் அது தனக்கென ஓர் உயிரினச் சூழல் தொகுதியை உருவாக்கியிருப்பது கவனத்துக்குரியது. அவ்விடத்தில் கடல் வாழ் உயிரினங்கள், பறவைகள் எனப் பல தரப்பட்ட உயிரினச் சூழமைவு உருவாகிப் பெருக்கமடைந்து வருகின்றது. இந்தப் பெருக்கத்துக்கும் அவற்றின் வாழ்தலுக்கும் இடையூறு அளிக்காத வகையில் மனிதர்களின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொள்வது இனி அவசியம்.

“மற்றைய கண்டல் காடுகளைப்போலல்லாமல் மண்டை தீவுக் கண்டல் காடு கடலோடு நேரடியாகத் தொடர்புபடாத வகையில் அமைந்திருப்பது. கடல் வாழ் சாகித்திய - உயிரினச் சூழலுக்குப் பெருமளவில் உந்துதல் அளிக்காதது. ஆனாலும் அது தனக்கென ஓர் உயிரினச் சூழல் தொகுதியை உருவாக்கியிருப்பது கவனத்துக்குரியது.”

### மனிதர்களின் தொழில் நடவடிக்கை

மண்டைதீவுப் பகுதியில் அவதானித்ததில் அங்கு ஒரு சிலர் அவ்வப்போது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வீச்சு வலை மூலம் வீதியை அண்மித்த நீர் நிலைகளில் காணப்படுகின்ற மீன்களைப் பிடிப்பதுடன் மட்டுப்படுகிறது அவர்களின் தொழில் நடவடிக்கை. வேறு சிலர் வீதியிலிருந்து சற்றுத் தூரம் வலை; இறால் கூடுகள் அமைத்து இறால் பிடிப்பில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் சற்றே நீளமான மீன் வலைகளுடன் கண்டல் தாவரச் சூழலை நெருங்கிச் சென்று தொழில் நடவடிக்கைகளுடன் ஈடுபடுகின்றனர். அவ்வப்போது தொழிலில் ஈடுபடுகின்ற இவர்களின் தொழில் முயற்சியும் மிகச் சிறியளவிலேயே

(16ஆம் பக்கம் பார்க்க)

# வேப்பம் பூ சூப்

வேப்பம் பூவிலும் சிறு தேன் துளி உள்ளதடி! இது தென்னிந்தியத் திரையிசைப் பாடலொன்றில் வரும் அடி. வேம்பின் இலை, காய், தண்டு, பட்டை என எல்லாமே கசப்புச் சுவை மிகுந்தவை. ஆனால் நாம் வேப்பம் கனியை மிருதுவாக உமிழும்போது அது இனிக்கச் செய்யும். அதைப்போலவே கசப்புச் சுவையுடைய வேப்பம்பூவில் இருக்கின்ற தேன் துளி இனிக்கச் செய்யும்.

ஆனாலும் வேப்பம் பூ கசப்புச் சுவையுடையதே. அதனால், அதைப் பலரும் விரும்புவதில்லை. ஆனால், அது பல நோய்களுக்கு மருந்து. அதனால் அதைச் சிலர் உண்கிறார்கள். வேப்பம் பூக்களைச் சேகரித்து, உலர்த்தி வடகம் செய்து, பொரித்த பண்டமாக்கி உணவுடன் சேர்த்து உள்ளெடுத்துக் கொள்கின்றனர்.

முதியவர்கள் உள்ள வீட்டில் வேப்பம் பூக்கள் கிடைக்கும் பருவங்களில் இந்த வடகங்கள் தட்டிக் காயப்போடுகின்ற செயற்பாடுகளைச் சர்வசாதாரணமாகக் காண முடியும். மருத்துவத் தன்மை மிக்கதும் உடல் ஆரோக்கியத்துக்கு உதவுவதுமான வேப்பம் பூக்களைக் கொண்டு செய்கின்ற சூப் பற்றி இப்போது பார்ப்போம்.



### தேவையான பொருள்கள்

வேப்பம்பூ - 4 மேசைக்கரண்டியளவு, கொள்ளு - 50 கிராம், மிளகு - 2 மேசைக்கரண்டி, அன்னாசிப் பூ - 5 கிராம், நல்லெண்ணெய் - 25 மில்லி லீற்றர், கடுகு, மஞ்சள் தூள் ஆகியன சிறிதளவு, உப்பு - தேவையான அளவு, உள்ளி - 50 கிராம்.

### எப்படிச் செய்வது?

கொள்ளுவை நன்றாக வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளுங்கள். நல்லெண்ணய்யில் வேப்பம் பூவை வறுத்துக்கொள்ளுங்கள். ஒரு பாத்திரத்தில் ஒரு லீற்றர் அளவில் நீரை விட்டு நன்றாகக் கொதிக்க வையுங்கள். அதில் மஞ்சள் தூள் சேர்த்து, கொள்ளுப் பொடியைக் கொட்டிக் கட்டியாக விடாது கரைத்துச் சேருங்கள். இப்போது வறுத்த வேப்பம்பூவையும் உப்பையும் சேருங்கள். மிளகு, அன்னாசிப் பூ ஆகியவற்றை நன்றாக அரைத்தெடுங்கள். ஒரு சட்டியில் எண்ணெய் விட்டு, அதில் கடுகைத் தாளித்து, உள்ளி, அரைத்த மிளகுக் கலவையைச் சேர்த்துக் கலக்குங்கள். இந்தக் கலவையைக் கொதிக்கும் சூப்பில் கொட்டி, கலக்கி இறக்குங்கள். வேப்பம் பூ - கொள்ளு சூப் இப்போது தயார்.

இந்த சூப் குடிப்பதால் குடல் புழுக்கள் நீங்கும். வயிற்றில் புண், கிருமித் தொற்று இருந்தால் சரியாகும். பசியைத் தூண்டி, செரிமான ஆற்றலைக் கொடுக்கும். உடலுக்கு புத்துணர்வைத் தரும்.


### ஆசை இராசையா...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஏதாவதொரு அதிசயம் நிகழ்ந்தாலொழிய நாம் உயிர் தப்ப வாய்ப்பில்லை என்ற நிலை இக்கலவரத்தின் போது வேலையை, இழந்து வருமானமின்றி என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வழி தெரியாது நின்ற கையறு நிலை, இவற்றைச்சித்தரிக்கும் 'ஊழிக்காலம்' என்ற ஓவியம் கலைமுகத்தில் பிரசுரமான முக்கிய ஓவியங்களிலொன்று. எங்களுடைய போராட்டத்தால் ஏற்பட்ட விளைவுகளைக் குறித்து 'சிலுவை சுமத்தல்' என்கிற ஓவியத்தை வரைந்திருக்கின்றேன். 'பாலன் பிறப்பு' என்கிற தலைப்பில் இடப்பெயர்வுகளைச் சந்தித்து நிற்கிற கர்ப்பிணிப் பெண் பிள்ளையைப் பெற்றெடுக்கின்ற வலியின் ஆழத்தைக் குறிக்கும் ஓவியமும் என்னால் வரையப்பட்டது. - என்றிருந்தார் இராசையா.

இந்த உலகத்தில் தனியே வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் எப்படி வாழ வேண்டும் என்பதை நோக்கியதாக என்னுடைய வாழ்க்கை அமைந்திருக்கின்றது. தனிமைப் படுத்தப்பட்ட வாழ்கையையே நான் உணருகிறேன்.

கலை ஞனாக இருக்கின்றவன் பகுத் தறிவுவாதியாகவும் இருக்க வேண்டும். அதிக மூடநம்பிக்கைகள் இருக்கின்ற இடத்தில் கலைஞனால் இருப்பது சாத்தியம் இல்லை. என்னுடைய உறவுகளும் அந்த மூட நம்பிக்கையில் நாட்டம் கொண்டிருக்கின்றபோது என்னைப் புரிந்துகொள்வது மிகவும் சிரமம். எனவே, அவர்களுடன் தொடர்ந்தும் இருப்பது சாத்தியங்கள் இல்லை - இதுவும் ஆசை இராசையா அவர்கள் கூறியதுவே. சமூகத்தால் தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய பெருமனிதர் தனித்து வாழ்ந்து மடிந்ததைக் கூறுவதாகவே அந்தக் கூற்றை நான் உணர்கிறேன்.

# மாறுபட்ட கோணம்



சபை கூடிற்று
அமைதியின் அழகு தெரிந்தது
எல்லோர் உடலிலும் இருட்டுப் படிந்திருந்தது
நீதிபதி அமர்ந்தார்
மரச் சுட்டியல் மண்டையடித்தது
வழக்கு ஆரம்பம்
கறுப்பு கோட் சூட் எழுந்தது
தகவல் படித்தது
முதலாம் குற்றவாளி
காவலர் காவலில் கூண்டேறினான் ஒருவன்
கத்தும் குரலில் குற்றப் பத்திரிகை படித்தான் ஒருவன்
பெயர் - பரந்தாமன்
வயது - ஐம்பத்தாறு
குற்றம் - களவு
விளக்கம் - ஒற்றை மூடை அரிசி
களஞ்சிய சாலையிலிருந்து காணாது போயிற்று
வாதம் ஆரம்பமாகிற்று
இவன் பக்க வாதம் ஊமை கண்டது
இளகிய இரும்பென அறிந்தான் எதிரணி வக்கீல்
வாய் காது வரை கிழிந்தது
ஓ... அற்பனே
களவின் கனமறிவாயா
குறிப் பெடுத்துக் கொள்
குர் ஆன் படித்ததுண்டா?
படித்திருக்காய்
களவு கொடியதாம்
பைபிள் படித்தாயா?
பார்த்திருக்காய்
திருட்டுக் கசையடிக் குற்றம் தெரிந்துகொள்
கீதை பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?
கீழ்ப் புத்திக் காரன் உனக்கெங்கே தெரியும்
புத்த பெருமானின் போதி மரம்
பொறு பொறு போதையைத் தவிர
வேறென்ன தெரியும் உனக்கு?
மூச்சு...
மூச்சு முதன் முதலாய் மூச்சு வாங்கிற்று
நிலவு தொட்ட பெருமையாய் வழக்கறிஞர்
கதிரை தொட்டார்
சிறியதொரு மௌனம்

உன் பக்கம் எதுனது?
நீதிபதி கேட்டார்
கூண்டுச் சட்டம் பார்த்த கண்கள்
நீதிச் சட்டம் பார்த்தது

இப்போது இவன் பக்க வாதம்
நிமிர்ந்தான்... நோக்கினான்...
மொழிந்தான்...
குர் ஆன் படித்ததில்லை
பைபிள் படித்ததில்லை
கீதை, போதிமரம் கேள்விப்பட்ட
ஞாபகமில்லை
பாரதி மட்டும் பார்த்தேன் ஐயா!
சபையின் காதுகள் கூர்மை கண்டன

விளங்கச் சொல் மனிதனே!
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜெகம் அழிக்கச் சொன்னார்
நான் கொலை விடுத்துக் களவெடுத்தேன்
தவறுளதோ?

மீண்டும் சட்டம் பார்த்தன கண்கள்
சுவரில் தொங்கிய பாரதி மீசை
கம்பீரம் காட்டிற்று

அமைதி இப்போது அழகற்றதாயிற்று...

- சி.ப.வேந்தன்

# சாதனை படைத்த இரங்கல் இது!

ஹொலிவூட் திரையுலகில் மார்வெல் கலையகத்தின் வெளியீடாக வந்து வசூலை அள்ளிக் குவித்த படங்களில் ஒன்று 2017ஆம் ஆண்டில் வெளியான 'பிளக் பாந்தர்'. அதன் நாயகன் நடிகர் சாட்விக் போஸ்மேன் குடற் புற்றுநோய் காரணமாக அண்மையில் இறந்திருந்தார்.




2016ஆம் ஆண்டு வெளியான 'கப்டன் அமெரிக்கா சிவில் வோர்' படத்தில் பிளக் பாந்தராக அறிமுகமாகிய அவர் 2017ஆம் ஆண்டில் பிளக் பாந்தரில் நடிப்பதற்கு முதலிலேயே பெருங் குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். படம் நடித்துக்கொண்டிருந்தவாறு தனது நோய்க்கான சிகிச்சையையும் மேற்கொண்டு வந்த போஸ்மேன் தனக்குப் புற்றுநோய் இருப் பது குறித்து வெளி உலகத்துக்கு அறிவிக்க வில்லை.

நான்கு ஆண்டுகள் சிகிச்சையின் முடிவில், ஓகஸ்ட் 28ஆம் திகதி அவர் இறந்தார். ஹொலிவூட் திரையுலகை மாத்திரமன்றி உலகம் முழுதுமுள்ள மார்வெல் கலையக ரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது அவரது இறப்பு. பலரும் தமது இரங்கலைத் தெரிவித்தனர்.

அந்த வகையில் கீச்சகத் தளத்தில் வெளியான இரங்கல் செய்தி ஒன்றே சாதனை புரிந்துள்ளது. அவருடைய மறைவு குறித்து அவரது குடும்பத்தினர் அவரது அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் அவருடை ஒளிப்படம் மற்றும் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். இதன் மூலமே அவரது மறைவு வெளியே தெரியவந்தது. இந்தப் பதிவு தான் பெரும் சாதனை புரிந்துள்ளது. கீச்சகத் தளத்தில் அதிகம் பேர் லைக் செய்த பதிவாகியுள்ளது இது. ஓர் அரசனுக்குப் பொருத்தமான அஞ்சலி இது என்று கீச்சக நிர்வாகமும் பெருமைபடத் தெரிவித்தது.



# எங்கே போகிறோம்?



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும். தொடர்

இசை தெய்வீகமாக இதமாக இருந்ததால் தான் அந்தக் காலத்தில் தீராத நோய் கண்ட எமது முன்னோர்கள், முதியவர்கள் சந்நிதிக்குப் போகிறோம் என்று வீட்டை விட்டுக் கிளம்பி தொண்டமானாறு ஆலய மடங்களில் தங்கி நிம்மதியாக நீண்ட காலம் வாழ்ந்த வரலாறோ? இன்றும் அங்கே பலரை அவ்வாறு காண முடிகிறது.

இசை கேட்பதையே தொழி லாகக் கொண்டால் நேரம் விரயமே. அத னைப் பின்னணியில் உலாவவிட்டு கருமங்களை ஆற்றினால் நேரத்தை அது மீதப்படுத்தித் தரவல்லது.

சாவு வீடுகளில் மன அழுத்தம் உச்சத்தில் இருக்கும். அதை மீறிய பறை ஒலி அதிர்வு ஒரு முள்ளை முள்ளால் எடுக்கும் முயற்சியே. அதனை உணர்ந்த எமது முன்னோர்கள் பற்றிய அறிவியல் எவ்வளவு ஆழமானது. ஆனால் இன்று ஒரு பக்கம் சோகம் என்றால் மறுபக்கம் கும் மாளம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது.

அகால இழப்புகளை ஏற்க முடியாத சூழலில் இடிந்து போயிருக்கும் உறவுகளின் அதிர்ச்சி நிலமை ஒரு பக்கம் என்றால், அங்கே கூடும் அளவுக்கதிகமான கூட்டம் போடும் கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கி அலறல்கள், பாரம்பரியமற்ற மேற்கத்தைய இசைக்கருவிகள், சரமாரியான வெடிகொளுத்தல்கள், அளவிற்கு மீறிய அலங்காரங்கள், உச்ச மதுப் பாவனை என்று இதை விட்டால் கொண்டாடச் சந்தர்ப்பம் கிடைக்காது என்கின்ற போக்குகள் வளர்ச்சி கண்டு வருகிறன. யாராவது ஆலோசனை சொல்லப் புகுந்தால் அது பெரும் கலகத்தை, உணர்ச்சிக் கொந்தளிப்பை, சினத்தை வெளிப்படுத்துகிறது.

சினம்! என்னும் சேர்ந்தாரை கொல்லி.

கோபம் தனக்கே ஆபத்தான ஓர் உணர்வு. குருதிக் கொதிப்பினை ஏற்படுத்துகிறது. உளவியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், அதனை ஆராய்ந்து அணுகியாக வேண் டும்.


தன்னைத் தான் காக்கில் சினம் காக்க காவாக்கால், தன்னையே கொல்லும் சினம்.

இன்றைய வாழ்க்கையில் அவசர யுகத்தில் மன அழுத்தம் அதிகம். இதனால் ஏற்படும் அமைதியின்மை கோபமாக வெளிப்படுகிறது. அதனை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் அயலில் உள்ளவர்களுக்கு அமைந்து விட்டால் பிரச்சினை இல்லை. கோபத்தை கோபித்து அடக்க முடியாது. ஏதுமறியாத சின்னஞ் சிறிய சிறார்கள் மீதே பொறுமை இழந்து சினம் கொள்பவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வாகனச் சாரதியை பிறிதொரு சாரதி இயல்பாக முந்திச் சென்றாலும் முதலாமவருக்கு ஒரு பொறாமை வந்து விடுகிறது. எப்படியாவது அந்த வாகனத்தை முந்திவிடல் வேண்டும் என்று ஒரு போட்டி மனப்பாங்கு வருகிறது. கலைத்துப் பிடித்து அவர் இடம் கொடுக்காத போது கோபம் மேலிடுகிறது. இதனால் பல விபத்துக்கள் இடம்பெற்ற வரலாறு உண்டு.

அந்த இரண்டு வாகனங்களுமே நூற்றுக்கணக்கான பயணிகளை கொண்ட பேரூந்துகள் என்றால் பயணிகளின் நிலமை என்னாவது?

கடைசியில் தொடருந்துக் கடவையில் வைத்து ஆதல் முந்தப் போய் விபத்து இடம் பெறுகிறது.



8

பக்கத்து வீட்டில் பசுவோ, ஆடோ, நாயோ பாவம் வாயில்லா சீவன் வளவுக்குள் நுழைந்து விட்டால் பத்திக்கொண்டு வருகிற கோபம், வயிற்றில் கன்றோடு நின்ற பசுவை கொல்லும் அளவிற்கு போகலாமா? இவ்வளவு ரோசம் என்றால் அது வருகின்ற வழிகளை முதலே அடைத்து வைத்து இருக்கலாமே. பல நாய்ச் சண்டைகள் மனிதக் கொலைகளில் முடிந்து இருக்கின் றன.

சிலருக்கு கோபமே வருவதில்லை. இயல்பாகவே நடப்பது எல்லாம் நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விடுகிறார்கள். அவர்களுக்கு சில ஓமோன்கள் சுரப்பதில்லை.

கோபத்தை தூண்டும் ஓமோன்களான adrenalin, cortisol என்பன சிலருக்கு எப் போது சுரக்கலாம் எனக் காத்துக் கிடக்கின்றன போலும். இதனால் குருதி அழுத்தம் அதிகரிக்கிறது. சுவாச வேகம் சூடு பிடிக்கிறது. அப்படியான உயரதிகாரியோ, வாழ்க்கைத் துணையோ கிடைத்து விட்டால் நிலமை பரிதாபம்தான்.

என்னதான் பொறுமை சாந்தம் என்று தத்துவங்கள் பேசினாலும் கோபம் சூழலில் எப்படியும் ஓர் அமைதியின்மையை ஏற்படுத்தவல்லது. கோபம் என்பது மற்றவர்கள் விடுகின்ற தவறுக்காக தனக்குத் தான் கொடுக்கும் தண்டனை என்று ஒரு விளக்கம் சொல்லப்படுகிறது. எல்லா இடங்களிலும் அந்த விளக்கம் பொருந்தாது. சிலர் காரணமின்றி எப்போதும் சுள் சுள் என்று இருந்தால் சுற்றவர இருப்பவர்களின் நிலமை பரிதாபமே.

எதையும் நிதானமாக அமைதியாக அணுகப் பழகினால், ஒருவரிடம் தவறு கண்டவுடன் அவசரப்பட்டு உடனடித் தீர்வினை எதிர்பாராது, தண்டனையை, தீர்ப்பினை திணித்து விடாது சற்றே பொறுமையைக் கடைப் பிடித்து, பின்னர் புரிய வைப்பது இருவருக்கும் ஆரோக்கியமானது.

பிரச்சினைகளை அடுத்தவர்களின் கோணத்தில் நின்று பார்க்க ஒவ்வொருவரும் பழகிக் கொண்டால் இலகுவாகப் பல பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

பெண்களுக்கு உரிய தனித்துவமான சிக்கல்களை அவரவர் கோணத்தில் சிந்தித்து அணுக வேண்டிய கடப்பாடு ஆண்களுக்கே உரியது.

கோபம் தலைக்கேறி யதும் சிலர் மௌனமாகி விடுகிறார்கள். அதனை அவதானித்துச் சரி செய்யத் தவறும்போது அது எரிமலையாக வெடிக்கும் வாய்ப்புக்களே அதிகம். ஒருவருக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டால் பொறுமை இழந்து விரக்தி கோபமாக வெடிக்க வாய்ப்புள்ளது. அங்கே காரணமே ஆராயப்படவேண்டும்.

யாரிடமாவது கோபம் பொத்துக் கொண்டு வந்தால் உடனடியாக வீர வசனங்களை பட்டுத் தெறித்தாற்போல் கொட்டித் தீர்க்காமல் பொறுமையை கடைப்பிடித்து ஆகவேண்டும். ஒரு கணம் நின்று நிதானித்து நன்றாக மூச்சை உள் இழுத்து, சற்று அவகாசம் எடுத்து சிந்தித்து பதில் சொல்வதே சிறப்பு. மனமாற ஓர் அவகாசம் கொடுத்து ஆறுதலாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கு அடங்காத வேளைகளில் மனதுக்குள் திட்டித் தீர்த்துக் கொள்வது சற்றே கோபத்தை தணிக்கவல்லது.

# கண்டியில் கவலை?

இலங்கையின் மத்திய பகுதியான கண்டி, மத்திய மாகாணத்தின் முக்கிய நகரம். அந்நியர்களின் ஆட்சியால் அதிகளவில் பாதிக்கப்படாத பௌத்த தேசம் என்றும் கண்டியைச் சொல்லலாம். தலதா மாளிகை என்கிற பௌத்தர்களின் பீடமும் அங்குதான் உள்ளது. கண்டியில் அண்மைக்காலங்களாக அடிக்கடி நில அதிர்வுகள் பதிவாகி வருகின்றன என்று செய்திகள் வெளிவந்தமுள்ளன.

கண்டி நகரையொட்டிய பகுதிகளில் ஏற்படுகின்ற இந்த நில அதிர்வுகளினால் அந்தப் பகுதி மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். அத்தோடு கண்டி நடுங்குவது அதிகரித்து வருவதால் மக்களின் அச்சம் உச்சம் தொட்டிருக்கிறதாம். இதன் காரணமாகக் கண்டி ஏன் இவ்வாறு நடுங்கத் தொடங்கியிருக்கிறது என்கிற ஆய்வில் பலரும் இறங்கியிருக்கிறார்கள்.

கண்டி நகரை அண்மித்துள்ள திகண, அநுரகம, ஹரகம, சிங்ஹாரகம, மயிலபிட்டிய உள்ளிட்ட பல பகுதிகளில் பெரிய சத்தத்துடன் நில அதிர்வுகள் பதிவாகி வருவதாக அந்தப் பகுதி வாழ் மக்கள் தெரிவிக்க, அது குறித்து ஆராய்வதற்காகக் களத்தில் குதித்துள்ளது இலங்கையின் புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகம். இந்த நிலையில், கடந்த 29ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் முதல் தடவையாக பெரிய சத்தத்துடன் நிலஅதிர்வொன்று பதிவாகியிருந்தது. இந்த அதிர்வினால் குறித்த பகுதிகளிலுள்ள பல வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் சேதமடைந்தன.

ஆனால், இது நில நடுக்கமல்ல நில அதிர்வு என்று ஆராய்ச்சிப் பணியகம் அறிக்கை விட்டுள்ளது. பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சச்சன டி சில்வா இந்த் விடயத்தை உறுதிப்படுத்தியும் கருத்துரைத்தார். கண்டியில் உணரப்பட்ட நில அதிர்வுகளுக்குக் காரணம் புவிக் கவசத் தகடுகளின் அசைவல்ல என்றும் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அண்மையாகப் பெரியளவிலான சுண்ணாம்புக் கற் பாறைகள் வீழ்ந்ததன் எதிரொலியே காரணம் என்றும் தெரிவிக்கிறது அந்தப் பணியகம்.

ஆனாலும் கண்டி நடுங்குகின்றது என்று மக்களின் பதற்றம் தொடர்ந்து நீடிப்பதால், அந்தப் பகுதிக்கு விசேட குழுவொன்றை ஆய்வுகளுக்காக நியமித்துள்ளார் சச்சன டி சில்வா. இது நில நடுக்கமல்ல நில அதிர்வு என்று கூறினாலும் ஏன் இந்த நில அதிர்வு ஏற்படுகின்றது என்று தகுந்த தரப்பினர் குறிப்பிடாததால் கண்டியில் கவலை நீடிக்கிறதாம்!

# சொற்களின் உலகம்

மழைச் சொற்கள் சிலிர்ப்பானவை
குடை வீசி நனையலாம்
நனைய நனைய இதயம் மழை பொழியத் தொடங்கும்
சுடக்கூடிய வெயிற் சொற்களும் உள்ளன
வெப்பம் விழாமல் குடை பிடிக்க வேண்டும்
புல்லாங்குழல்
குயிற் குக்கூ இரண்டுக்கும் அன்னை, தந்தை
மழலைச் சொல்லினிமை
புல்லாங்குழல் இசையிலிருந்து சொற்கள் பிரித்தெடுத்தால்
வண்ண மலர் நிறங்களும் பல்வகை வாசமும் பெறலாம்
வீணை ஆட்டிலிருந்து சொற் பால் கறந்தெடுத்தால்
சுவையின் தாயெனத் தோன்றும்
வரிசையாக வருகின்ற சொற்கள் எறும்புகளின் ஆசான்கள்
விரைவாக வருகின்ற சொற்கள் தேன்பூச்சிகள்
வகுப்பறையில் பிறந்திருக்கவேண்டும்
பூனைக் குட்டிச் சொற்கள் எப்போதுமே காலடியில்தான் கிடக்கும்
எலிப்பொருள் பிடிக்க அது பதுங்கும் அழகே தனி
கிளிச் சொற்கள் சொற்களுடன் மனம் விட்டும்
இதயம் தொட்டும் பேசும்
பழச் சொற்கள் தேடி நா மரக் கிளையில் அவை அமரும்
கிளிச் சொற்களுக்குப் பிடித்தமானவை இனிப்புச்
சொற்கள் மட்டுந்தான்
நிழல் தருகின்ற சொற்கள் ஆறுதல் தரக் கூடியவை
''நாணிக்கின்றேன் கவலைப்படாதே'' என்று சொல்லும்
வாய் விதை

சொல்லைக் காற்றிலும் காதிலும் நடுகிறது
அது இதயத்தில் முளைத்துப் பூக்கிறது
அல்லது முன்னாய் வளர்கிறது
விதை சரியாக இருந்தால் சொல் மலர்
விதை பிழையாய் இருந்தால் சொல் முள்

- ராஜகவி ராகில்


லயன் காமிக்ஸ் முத்து காமிக்ஸ்
Lion Comics & Muthu Comics
உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி
தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944
https://www.facebook.com/tamilcomics/
லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்




| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

Scan Here
https://www.facebook.com/UniqueteesSriLanka
Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)
விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944
யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

தமிழ்




# மேலதிக மூளை புகும் ஆச்சரிய அறிவியல் இது!

உடலில் வியக்கத்தக்க உறுப்புகளில் ஒன்று மூளை. மூளையே உடலின் அனைத்துச் செயற்பாட்டுக்கும் காரணம் ஆதலால் அதுகுறித்த ஆராய்ச்சிகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. மனித முளையின் செயற்றிறன் போதாது என்று கருதப்படுவதால், அதை இயந்திரத்துடன் இணைத்துச் செயற்படுத்தும் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர் எலன் மாஸ்க் புதியதொரு தொழில்நுட்பப் புகுத்தலைக் கண்டுபிடித்துள்ளார். அதாவது மூளையுடன் "சிப்" ஒன்றைப் புகுத்தி இணைத்துத் தொழிற்பட வைக்கின்ற புதிய முறை அது. பரிசோதனை முயற்சியாக அதைப் பன்றி ஒன்றுக்குப் புகுத்தியுள்ளார் அவர்.

அந்தப் பன்றியின் பெயர் 'கெர்ட்ரூட்'. கைகளில் அணியும் வகையிலான அந்தக் கருவியைப் பன்றியின் மூளைக்குள் புகுத்திச் சிறு வயர்களால் அதனுடன் இணைத்துள்ளதாக எலன் மாஸ்க்



தெரிவிக்கிறார். அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவுக்கு விண்கலங்கள், ரொக்கெட்டுகள் போன்ற பல பொருள்களைத் தயாரித்து வழங்கியும், நாசாவின் விண்வெளித் திட்டங்கள் பலவற்றுக்கு முதலீடு செய்துமிருக்கின்ற உலகின் முன்னணிப் பணக்காரர்களில் ஒருவரான இவரது நியூராலிங்க் என்னும் புதிய நிறுவனத்தின் மூலமே மனித மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் இந்தத் தொழில் நுட்பத்தை அவர் உருவாக்கியிருக்கிறார். இந்தத் தொழில்நுட்பத்தை மனிதர்கள் மீது பரிசோதித்துப் பார்ப்பதற்கு அனுமதி கோரிக் கடந்த ஆண்டு இந்த நிறு



வனம் விண்ணப்பித்திருந்தது. அதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்பட்டிருக்காத பட்சத்திலேயே பன்றியை வைத்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

மனித மூளையையும் இயந்திரங்களையும் இணைக்கும் இந்த இடைமுகத் திட்டமானது, நரம்பியல் குறைபாடு உள்ளவர்கள் தங்களது மூளை மூலம் திறன்பேசிகள் அல்லது கணினிகளைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யும் என்று மாஸ்க் கூறுகிறார். அதுமட்டுமின்றி மறதி நோய், பார்கின்சன் நோய் மற்றும் முதுகெலும்புக் காயங்கள் போன்ற நிலைமைகளைக் குணப்படுத்த இந்தத் தொழில் நுட்பமானது எதிர்காலத்தில் பயன்படலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.



இந்த திட்டத்தின் நீண்டகால நோக்கமே, 'மனிதர்களுக்கு மேற்பட்ட அறிவாற்றல் யுகம்' என்கிற ஒரு யுகத்துக்குள் நுழைவதுதான் என்று கூறப்படுகிறது. அத்தகைய ஒரு யுகத்தில் செயற்கை நுண்ணறிவு மனித குலத்தை அழிக்கும் அளவுக்குப் பலம் பெற்றுவிடும் என்றும் அப்போது அதை எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராக வேண்டும் என்றும் மாஸ்க் குறிப்பிடுகிறார்.

முதற்கட்டமாகப் பன்றி மீது பரிசோதிக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம் குறித்த விளக்கம் கடந்த வெள்ளிக்கிழமை இணைய வழியில் நடைபெற்றது. அதில், மூளையில் 'சிப்' பொருத்தப்பட்ட பன்றியான கெர்ட்ரூட்டின் நரம்பியல் செயற்பாடுகள் கணினி வாயிலாகக் கண்காணிக்கப்பட்டன. அந்தப் பன்றி தனக்கு முன்பாக இருக்கும் உணவைப் பார்க்கும்போது அதன் உடலில் ஏற்படும் நரம்பியல் செயற்பாடுகள் குறித்த தகவல்கள் அதன் மூளையில் பொருத்தப்பட்டுள்ள சிப் அனுப்பும் சமிக்ஞைகள் வாயிலாகப் பெறப்பட்டன. அது குறித்து ஆராய்ச்சியாளர்களால் விளக்கங்களும் அளிக்கப்பட்டன. மண்டை ஓட்டில் மிகவும் நன்றாகப் பொருந்தும் வகையில் அமைக்கப்பட்ட குறித்த கருவி, தலைமுடியின் கீழ்ப் படையில் இருக்கும். அதை இலேசாகக் கூட உணர முடியாது. தலைமுடியை விட மெல்லிய நெகிழ்வான வயர்களால் இணைக்கப்பட்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்முனைகளைக் கொண்ட இதன்மூலம் ஆயிரம் மூளை நரம்பணுக்களின் செயற்பாட்டைக் கண்காணிக்க முடியுமாம்.




> மனித மூளையையும் இயந்திரங்களையும் இணைக்கும் இந்த இடைமுகத் திட்டமானது, நரம்பியல் குறைபாடு உள்ளவர்கள் தங்களது மூளை மூலம் திறன்பேசிகள் அல்லது கணினிகளைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யும் என்று மாஸ்க் கூறுகிறார்

## தொல்லியல் ஆய்வில் 'திகில்'!



இந்தியாவின் கீழடி, கொந்தகைப் பகுதிகளில் நடந்துவருகின்ற தொல்லியல் ஆய்வுகள் இந்தியச் சினிமாவில் தாக்கம் ஏற்படுத்தாமல் இருக்குமா என்ன? ஆம்! இந்தியச் சினிமாக்குள் அந்த அகழாய்வுகள் திகில் பாணியில் கருப்பொருளாகப் புகுத்தப்பட இருக்கின்றன என்று கதைகள் பரவத் தொடங்கியிருக்கின்றன. பரணி சேகரன் இயக்கத்தில் உருவாகி வருகின்ற தாழ் திறவா படத்தில் இந்தத் தொல்லியல் ஆய்வுதானாம் கதைக் களம். இந்தப் படம் குறித்து இயக்குநரிடம் கேட்டபோது, இது மர்மங்கள் நிறைந்த திகில் படம். கதாநாயகனாக ஆதவ் கண்ணதாசன், நாயகியாக வாணி போஜன் நடிக்கிறார்கள். இவர்களுடன் சுரேஷ் மேனன், சுப்பு பஞ்சு என நிறைய நடிகர்கள் நடிக்கிறார்கள்.



கதை என்னவென்றால், ஒரு தென்னகத் தமிழ் கிராமம். அங்கே தொல்லியல் ஆய்வு நடக்கிறது. நாயகன் தொல்லியல் ஆய்வாளன். ஆய்வுக் களத்தில் கீழடி போன்ற மறைந்திருக்கும் நாகரிகம் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார்கள். அங்கே பழைய முதுமக்கள் தாழி ஒன்று கிடைக்கிறது. அதை அவர்கள் திறக்க முற்பட்டு அதனால் ஏற்படும் விபரீதங்களைக் கற்பனையாகக் கூறியிருக்கிறோம். இதில் ஒரு ஸ்பெஷல் கேரக்டர் வருகிறது. அது சஸ்பென்ஸ். படத்தில் கிராஃபிக்ஸ் காட்சிகளின் பங்கு முக்கியமானது. ஆயிரத்தில் ஒருவன் , கடாரம் கொண்டான் உள்ளிட்ட பல படங்களுக்குக் கிராஃபிக்ஸ் செய்தவர்கள் தான் தனது படத்துக்கும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுள்ளார்!

■ பேர் அறிஞன்

# சித்தி வீதத்தை உயர்த்துதல் தவிர்க்கவியலாக் கேள்விகள்...

ஆக, முற்கூறிய ஒரு மூடிய சிறிய தொகுதியினரின் கோட்பாட்டு அறிவானது அவர்கள் சார்ந்த ஒரு சிறிய தொகுதிப் பயனாளிகளுக்கே பொருந்தும் நிலையில் அவர்களின் திட்டங்கள் பெருந்தொகுதி முழுமைக்கும் ஏற்றுக்கொண்டு பின்பற்றும் மனநிலையைத்தானும் தோற்றுவிக்குமா? என்றால் நிச்சயமாக இல்லை.

முதற் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்ட விடயத்தை இவ்விடத்தில் மீளவும் வலியுறுத்த வேண்டியுள்ளது. அதாவது கல்வி என்பது தேர்வில் தேறியவனுக்கும் தேறாதவனுக்குமான வாழ்க்கைத் திறன்சார் அறிவானது எந்தளவுக்கு வழங்கப்படுகின்றது என்பது பற்றிய் யதார்த்தம் மறக்கப்பட்டோ மறைக்கப்பட்டோ இருக்கின்ற நிலையில் உள்ளமை கண்கூடு.

இந்த நிலையில் தவறானது அல்லது பயனற்றதெனக் கொள்ளக்கூடிய ஒரு விடயத்துக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவமும் அதற்காகச் செலவிடப்படும் பெரும் தொகையும் ஏன்? அது ஓர் ஆழமான ஆய்வுக்குரியது. திட்டங்களின் ஒரு பகுதி உரிய தரப்பினருக்கு இலாபமாவதை விட வேறொன்றுமில்லை என்பதையே கடந்த காலத் திட்டங்களும் அறிக்கைகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அதையே தொடர்ந்தும் முன்னெடுக்க முயல்வது ஏன்?



### பின்னடைவுக்கான அர்த்தம்

பின்னடைவு என்கின்ற ஒற்றைச் சொல்லிற்கான அர்த்தம் விளங்கிக் கொள்ளப்பட்டுத்தான் உபயோகிக்கப் படுகிறதா? பின்னடைவு என்பது பிற மாகாணங்கள் - மாவட்டங்கள் வலயங்களுடனான ஒரு ஒப்பீடுதான். இதன்போது, வெளியாகிய பெறுபேற்று முடிவு மற்றும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட கணிப்புகளே மேற்கொள்ளப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக 2009ஆம் ஆண்டு இறுதித் தேர்வுநாடிகள் பாடசாலையுள் கால்வைத்தது 2009ஆம் ஆண்டிலாகும். முன்னேற்றம் - பின்னடைவு குறித்து ஆராய முற்படுவோர் 2009 ஆம் ஆண்டில் தரம்-1ற்கு அனுமதியாகிய மாணவர்களின் தொகை, 2014ஆம் ஆண்டில் தரம் 6இலிருந்த மாணவர்களின் தொகை, 2017ஆம் ஆண்டில் தரம் - 9 இலிருந்த மாணவர்களின் தொகை, 2019ஆம் ஆண்டு முதலாந் தவணையில் இருந்த மாணவர்களின் தொகை, பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தொகை மற்றும் பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை என்பன தொடர்பான தரவுகள் தகவல்களோடுதான் உள்ளனரா என்பது கேள்விக்குரியதுதான். கண்டிப் பாக மேற்கூறியவற்றிற்கான கணிப் பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண் டும். ஏனெனில் இடைவிலகல் என் பது மிக முக்கியமானதொன்று.

### இடைவிலகலால் பாதிப்பு

வறுமை, கல்வி தொடர்பான விழிப்புணர்வின்மை, பிற சமூகக் காரணிகள் காரணமாக இடைவிலகல் போதியளவு நடைபெறுகிறது. இடைவிலகுவோரில் தொழிற்பயிற்சி நெறிகளில்- (தரம் - 9 தகுதியுடன்) இணைவோரும் உள்ளனர். தொழிலகங்கள் வேலைத்தளங்கள் மற்றும் நிறுவனங்களில் (கடை, உணவகம், வெதுப்பகம், விடுதிகள், திருத்தகங்கள் உள்ளிட்டவை) தொழில் பயிலுனர்களாக அல்லது ஊழியர்களாக இணைவதுமுண்டு. சிலர் எந்த முயற்சியுமில்லாமல் பிறர் சார்ந்து (உள்ளூர் மற்றும் புலம்பெயர் உதவிகள்) வாழவும் முற்படுகின்றனர். இத்தொகுதியில் (அதாவது இடைவிலகல் மாணவர்) அனேகமாக முழுதும் அல்லது சற்றுக் குறைவான தொகையினர் ஏட்டுக்கல்வி மீதான நாட்டமின்மையைக் கொண்டவர்கள் என்பதும் அவதானிக்கக்கூடியது. இந்நிலையில் இடைவிலகியவர்களை மீளவும் பாடசாலைகளுக்குள் கொண்டுவருதலும் மிக மும்முரமாக பலதரப்பாலும் போட்டியாக முன்னெடுக்கப்படுகிறது. இங்கு இச்செயற் பாட்டொழுங்கள் கவனிக்கப்பட வேண்டிய ஆனால் கவனிக்கப்படாத பல விடயங்கள் உள்ளன.

### மீளிணைப்பதில் சிக்கல்கள்

மீளிணைக்கப்படுகின்ற மாணவரது குடும்பப் பொருளாதாரம் பின் தள்ளப்படுவதனூடாக போசாக்குநிலை வீழ்ச்சி உள்ளிட்ட பெரும் எதிர்மறை விளைவுகள் ஏற்படுவது மறக்கடிக்கப்படுகிறது. அதேவளை தன்னால் நடைமுறையிலுள்ள கல்வியில் கவனம் குவித்துத் தொடரமுடியாத ஒருவன் வாழ்வாதாரத்துக்கான ஒரு தொழிலைக்கற்று தொழில் திறனில் தேர்ச்சியுள்ள ஒருவனாவது தடுக்கப்படுகிறது. இதனூடாகச் சான்றிதழுமற்ற தொழிற்றிறனுமற்ற ஒருவனாக அவன் மாற்றப்படுகிறான். இவ்விடயங்களை விடவும் தன் வயது சாராத தொழில்சார் இடங்களில் பழகியவர்களினது தவறான முன்னுதாரணங்களாலும் சில பழக்க வழக்கங்களாலும் ஈர்க்கப்பட்ட ஒருவனாக மீளவும் வகுப்புக்குள் வரும் அவனால் சக மாணவர்கள் கவனம் கலைக்கப்படுகிறார்கள். இதனால் ஒழுங்காக வகுப்பிலிருந்த மாணவர்களதும் கல்விசார் கவனம் திசைமாற்றப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே கல்வி நாட்டம் மிகக்குறைந்த நிலையில் கற்றல் செயலொழுங்குடன் இணைந்து பயணிக்க முடியாத குறித்தவொரு மீளிணைக்கப்பட்ட மாணவன் தொடர்ச்சியறுந்த வகுப்பறைச் சூழல் மற்றும் கலவிசார் செயற்பாடுகளில் எந்வளவுக்கு இயல்பாக ஈடுபடமுடியும்? மீளிணைப்பு மற்றும் கட்டாயக் கல்வி தொடர்பான சிந்தனைகளில் இவையேதும் கவனிக்கப்பட்டதாக இல்லை.

### அறிக்கைகள் தயாரிப்பதால் பயனில்லை

இவ்வாறான களயதார்த்தம் உள்ள நிலையில் இவை பற்றிய எந்தவிதமான கவனமுமின்றித் திட்டங்களை வகுப்பதாலும் கட்டாயப்படுத்தி அவற்றைத் திணித்து அறிக்கை தயாரிப்பதில் கவனம் முழுதையும் செலுத்துவதாலும் ஆக்கபூர்வமான மாற்றங்களேதும் நிகழ்ந்துவிடுமா? அதிபர்களுக்கூடாக ஆசிரியர்களிடம் சித்தியின்மைக்கான விளக்கத்தைக் கோருவதனால் ஏதும் மாற்றமுண்டாகுமா? மேலும் குறித்த கொள்ளளவுக்கு மேலதிகமாகத் திணித்துவிடுவது சாத்தியமானதா? தனியாள் வேறுபாடு பற்றிய உளவியல் கற்றவர்களாக இருந்து கொண்டுதான் கணிப்பீடுகள் மதிப்பீடுகளைச் செய்கிறார்களா? பதிலற்ற அல்லது பதிலைக் கண்டடைவது கடினமான அல்லது முடியாத கேள்விகளால் நிறைகிறதா எமது கல்வியுலகம்?


(கேள்விகள் தொடரும்)

### மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

2

A) 5512
B) 5511
C) 5023
D) 5522



சரியான விடை யாது?

---

## தொங்கு பாலத்தில் பெண் செய்த செயல்!



பிரான்ஸைச் சேர்ந்த வெள்ளையினப் பெண் ஒருவர் ஆலயத்தில் செய்த செயலால் அவரைப் பிடித்துச் சிறையிலடைத்துள்ளனர் காவல்துறையினர். அப்படி என்னதான் செய்தார் அந்தப் பெண் என்று தேடிப் பார்த்தால்... இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள ரிஷிகேஷில் இருக்கும் லக்ஷ்மண் ஜூலா எனும் தொங்கு பாலத்தின் மீது நிர்வாணமாக நின்று தன்னைத் தானே காணொலி எடுத்திருக்கிறார் அவர். கங்கை நதி மீது அமைந்துள்ள லக்ஷ்மண் ஜூலா தொங்கு பாலத்தை இந்துக்கள் புனிதமானதாகக் கருதுகிறர்கள். அதன் மீது நிர்வாணமாக நின்றதாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இத்தகைய செயல்கள் பிரான்சில் வேண்டுமானால் தவறாகக் கருதப்படாமல் இருக்கலாம். ஆனால் இங்கு, அதுவும் இந்துக்களின் புனிதத் தலத்தில் இவ்வாறு செய்தது தவறு என்று காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். ஆனாலும், தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் அந்தப் பெண். தனது நகைத் தொழிலை இணையத்தில் பிரபலப்படுத்துவதற்காக அவ்வாறு காணொலி எடுத்தேன் என்று விசாரணையின்போது அவர் தெரிவித்துள்ளார். ஆனாலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்று ஆண்டுகள் வரை அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்க வாய்ப்புள்ளது என்று அலசல் புரசலாகக் கதைகள்!

# போர்க் களம் நோக்கி...

■ காயா

"வீட்டிலை ரீவியில தொடர் நாடகங்கள் பாக்கிறம். பொதுப்பட்ட முறையில நாட்டுக்கூத்துகளை வெளியில வைக்கேக்க பாருங்கோ... தொடர் நாடகம் பாக்கோனுமெண்ட ரசனை மக்களிட்ட இருக்குது. நாட்டுக்கூத்து ரசனை குறைவு. ரீவியலாலை நாட்டுக் கூத்துக்குக் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான். தொடர் நாடகங்கள ஏன் சனம் நாடுது எண்டு பார்த்து நாங்கள் நாடகங்களைக் குறுக்கினம். முந்தியெல்லாம் நாட்டுக்கூத்து மூண்டு நாலு இரவுகள் படிச்சிருந்தவை."

வஸ்தியாம்பிள்ளை ஜேக்கப் ஐயா ஒரு முதுபெரும் நாட்டுக் கூத்துக் கலைஞர். பாசையூர் அவரது பூர் வீகம். புராதனக் கலைகள் மங்கிப் போய்விட்ட தால் ஜேக்கப் ஐயாவையும் நாடுவோர் இப்போது அரிது. ஓய்வைச் சுவைத்துக் கொண்டிருந்த அவரை அணுகி செம்மண்ணுக்காக அனுபவங்க ளைப் பகிர்ந்து கொண்டோம். முதுமைக்கு ஆட்பட்டுக்கொண்டிருந்த அவர் அன்பாகப் பேசினார். நாட்டுக்கூத்துத் தனது உயிர்நாடி என்றும் அதற்கு, தான் முடிந்தளவுக்கு உயி ரூட்டினார் எனவும் அவர் பகர்ந்தார். அந்தக் கலையில் ஈடுபாட்டுடன் இயங்கியதால் பாராட்டு களையும், பரிசில்களையும், விருதுகளையும், மதிப்புகளையும் சம்பாதித்தவர் தான் என்று பெருமைபட்டார். ஆனாலும் பல ஞாபகங்களைத் தொலைத்து நிற்க, அவரது உடல் இயலாமையை யும் தொட்டு நின்றது. மெல்ல மெல்ல நடந்து வந்து வெளி விறாந்தையில் உள்ள நாற்காலியில் அமர்ந்த அவரிடம் உரையாடினோம்.

நீங்கள் கூத்துப்போடத் தொடங்கின காலம் ஞாபகமிருக்கா ஐயா? என்று நாம் கேள்வி தொடுக்க ஆரம்பித்ததும், அவரது மூளையின் எங்கோ ஓர் ஓரத்தில் மழுங்கிக் கிடந்த ஞாப கங்களைத் தட்டி எழுப்பினார். சேர்வுற்ற குர லில் மெல்லப் பதிலளித்தார்.


"என்னுடைய அப்பா ஒரு அண்ணாவியார். பெயர் வஸ்தியாம்பிள்ளை. நாடகங்கள் பழக்கிற வர். அப்ப நான் சின்ன ஆள். எனக்கு நடிக்க ஆசை இருந்துது. அவர் புனிதவதி எண்டு சொல்லி, ஒரு நாடகத்தைச் சின்னப் பிள்ளயளைக் கொண்டு பழக்கிறதுக்காக, என்னையும் அதுக்கு எடுத்தார். அப்ப எனக்குப் 13 வயசு. அரசனுக்குத் தான் நான் முதல் படிச்சனான். அரசனுக்குப் படிச்சதிலையிருந்து எனக்கு நல்ல மதிப்பும் புக ழும். பாசையூர் அந்தோனியார் கோவிலுக்கு முன்னால மேடையேறின கூத்து அது. எனக்கு இப்ப 81 வயசு" என்று சொல்லிவிட்டு அமைதி யைப் படரவிட்டார்.

1953ஆம் ஆண்டில் புனிதவதி நாட்டுக் கூத்துடன் ஆரம்பமாகியிருக்கிறது அவரது கலை வாழ்வு. 1955இல் தேவசகாயம்பிள்ளை கண்டி அரசன், 1957இல் வீரபாண்டியக் கட்டப் பொம்மன், சங்கிலியன், பண்டாரவன்னியன், 1959இல் தியாகராகம், செபஸ்தியார், போர்க் களம் நோக்கி, 1960இல் வீரத் தளபதி பபு லீனப்பர், 1961இல் மனம்போல் மங்கல்யம், கனக சபை, சற்குணாநந்தன், 1963இல் கலாவதி, ஞானரூபன்... என வரிசையாகத் தொடர்கிறது அவர் நடித்த - பாடிய நாட்டுக்கூத்துகளின் பட்டி யல்.

"பாட்டு , நடிப்பு ரெண்டும் என்னட்ட இருக் கிற திறமை. 67 நாடகங்கள் வரையில படிச்சிருக் கிறன். புனிதவதி நாடகத்த நான் பிறகு மாத்திய மைச்சு நெறியாள்கை செய்தனான். பண்டார வன்னியன் நெறியாள்கை செய்தனான். ரெண்டு நாடகங்கள்தான் நான் நெறியாள்கை செய்தது. அதோட பழக்கிற எல்லா நாடகத்திலையும் நான் படிச்சிருக்கிறன். சங்கிலியன் நாடகத்தில சமய வேற்றுமை வாறது. பண்டார வன்னியனில அது வாறதில்ல. அரசனுக்குத்தான் பெரும்பாலும் படிச் சிருக்கிறன். இல்லாட்டில் கதாநாயகனுக்குப் படிச்சிருக்கிறன். வேடனுக்கும் நடிச்சிருக்கிறன். நாட்டுக்கூத்திலை எனக்கு மூத்த ஆக்களில்லை எண்டுதான் நினைக்கிறன். கலை என்றால் எங் கட ஊர்தான் அதிலை முன்னணி எண்டு நான் நினைக்கிறன். எங்கட ஊருக்காக ஏராளமான திறமையான கலைஞர்கள் இஞ்ச இருக்கிறார்கள். கலையில நல்ல முன்னேற்றம். பந்தடி தொடங்கி..." என்று கூறினார்.

அவரது பழுத்த பேச்சில் அமைதியும் சாந்த மும் லயித்திருந்தது. குரலில் தளர்வு தெரிந்தது. இப்போதெல்லாம் கூத்துகள் போடுவது குறைந்து கடமைக்காக ஆங்காங்கே அது வளர்க்கப்படு வது குறித்தும் அவர் சுட்டினார்.

"ஏஜி ஒவ்பீசால கிட்டடியில பண்டார வன்னி யன் நாடகம் வைச்சவக! அதிலதான் கடைசி யாப் படிச்சது. வைத்தீஸ்வராக் கொலிஜ்சில நான்தான் போய்ப் பழக்கிறது. எல்லா ஊர் ஆக் களையும் சேத்துப் பழக்கி நான்தான் பண்டார வன்னியனுக்குப் படிக்கிறது. நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைச்சுது. பரிசுகள் எல்லாம் தந்தினம். வீட்டிலை ரீவியில தொடர் நாடகங்கள் பாக்கிறம். பொதுப்பட்ட முறையில நாட்டுக்கூத்து களை வெளியில வைக்கேக்க பாருங்கோ... தொடர் நாடகம் பாக்கோனுமெண்ட ரசனை மக்களிட்ட இருக்குது. நாட்டுக்கூத்து ரசனை குறைவு. ரீவியலாலை நாட்டுக் கூத்துக்குக் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான். தொடர் நாடகங்கள ஏன் சனம் நாடுது எண்டு பார்த்து நாங்கள் நாடகங்களைக் குறுக்கினம். முந்தி யெல்லாம் நாட்டுக்கூத்து மூண்டு நாலு இரவுகள் படிச்சிருந்தவை. ஐயாட காலத்தில சொல்லுவார். மூன்டிரவு படிச்சது பிறகு ரெண்டிரவு படிச்சது பிறகு ஒரிரவு படிச்சது. பிறகு இப்ப இந்த ரீவி யள் வந்தபிறகு சோர்ட்டா வைக்கிறதில இன் றஸ்ற் கூடவா இருக்கு. ஆனதால நாடகங்கள் இப்ப ரெண்டு மணித்தியாலத்துக்கு மேல இருக் காது. அந்தளவில இப்ப நிக்குது. இப்ப நாங்க ஒரு மணித்தியாலயக் கூத்தும் வைச்சிருக்கி றோம்" தொலைக்காட்சித் தொடர்களின்பால் மக்களுக்கு இருக்கின்ற ஈர்ப்பு பாரம்பரி நாட்டுக் கூத்துகளின்பால் இல்லாமல் போனதால் அதற்குரிய இரசிகர் பரப்புக் குறைந்து தான் போய்விட்டது. அதனால் அந்தக் கலையை இரசித்துப் பார்ப்போர் குறைவு. மக் களை நாட்டுக் கூத்தை நோக்கி ஈர்ப்பதற்காக நீளமாகவிருந்த நாட்டுக்கூத்தைச் சுருங்கிய வடிவத்தில் மேடையேற்ற முனைந்திருக்கிறார் அவர்.



"நாடகத்தை வசனத்தால குறுக்கி,... ஒராளுக்கு எட்டடி என்றிருந்த பாட்டை மாற்றி ஆளுக்கு ஒரடி ரெண்டடியாக வைச்சம். கூத்து ஒரு மணித்தியாலம் எண்டு சொன்னா ஒரடி அல்லது ரெண்டடிக்கு மேல வைக்கிறதில்ல. வசனங்கள், பாட்டுகளால குறைச்சுக் கொண்டு கதைய அதுக் குள்ள அடக்கினம்" கூத்தை மக்கள் ரசனைக்க ளிப்பதற்காக அதைச் சுருக்கியதால் அதன்பாரம்ப ரியத் தன்மையில் இழப்பு ஏற்பட்டது குறித்தும் மனம் நொந்தார்.



நீங்கள் பாடிய, உங்களால் மறக்க முடியாத புதுவித நாட்டுக் கூத்து என்று எதைக் குறிப்பிடு வீர்கள் என்றதும், "போர்க் களம் நோக்கி எண்டு சொல்லி ஒரு கூத்து. இயக்க நாடகம் அது. கலை பண்பாட்டுக்காரர்எழுதித் தந்தவை. ஊர் ஆக்கள் எல்லாருமா நடிச்சனாங்கள். அது ஒரு புதுவித நாட கம். இனப் பற்று, எங்கள் மொழி அவசியமானது என்று சொல்லுற நாடகம். அதிலை நான் பிரபுக்குப் படிச்சனான். அது படிச்சிப்ப இருபத்தஞ்சு வருச மிருக்கும்... முக்கா மணித்தியாலய நாடகம்... வன்னித் தேசம் எல்லாம் கொண்டுபோன நாட கம்." என்று சொல்லிய கையோடு சிறிது அமைதி கொண்ட அவர் தன்னையறியாமல் பெருங்குர லெடுத்துப் பாடினார். அந்தக் குரலின் கம்பீரத்தில் அந்த இடமே அதிர்ந்தது. அவரது குரலின் கணீர் ஒலியில் எம்மால் உணர இயலாத ஒருவகைத் தாள லயம் பளிச்சிட்டது. உச்ச ஸ்தாயியிலும், திடீரென்று அமைதி நிலையை அடைந்தும் அவர் பாடினார்.

*புலியின் வீர சாதனை பாருமையா...*
*தமிழீழத்தை மீட்டிடப் போர்க்களம்*
*சென்றிடும் புலியின் வீர சாதனை*
*பாருமையா...*
*வேங்கைப் படை போர்க்களம் நோக்கியே...*
*வேங்கைப் படை பேர்க்களம் நோக்கியே*
*எதிர்ப் படைகளை வேரோடழித்திட்ட*
*புலியின் வீர சாதனை பாருமையா!*
*நெல்லியடிக் காம்பை மில்லர் குறுப்பினர்*
*துல்லியமாய்த் தகர்த்தர். அன்று வல்லைக்*
*கடலிலே காந்த ரூபன் குழுவினர் கப்பல்களைக்*
*கவிழ்த்தர்.*
*வானில் வலம் வந்து பங்கர் அதிர்ந்திடக்*
*குண்டு பொழிந்திட்ட சீனச் சகடையைக்*
*கண்ட புலி சுட்டுக் குண்டுபட்டுச் செட்ட*
*பிஞ்சு தொங்க அங்கு அஞ்சி மறைந்ததே...*
*புலியின் வீர சாதனை பாருமையா!*

ஐயாவின் சோர்வு இப்போது ஓடி மறைந்திருந்தது. அவர் பாடிய விதத்தில்,

*முத்தைத்தரு பத்தித் திருநகை*
*அத்திக்கிறை சத்திச் சரவண*
*முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்*

என்று நீள்கின்ற திருப்புகழ் அடிகளிலுள்ள இசை இழையோடியிருந்தது.

சிறுகதை

# தலைமுறை தாண்டிய தரிசனங்கள்

கே.எஸ்.சுதாகர்

பல்கலைக்கழகத்தின் கிழக்குப்புறப் படிக் கட்டுகளின் ஒரு அந்தத்தில், புத்தகங் களைப் பரப்பியபடி காத்திருந்தாள் கரோலின். கரோலின் அவுஸ்திரேலியா நாட்டு வெள்ளை இனத்துப் பெண். மருத்துவம் பயில் வதில் மூன்றாம் ஆண்டில் இருந்தாள்.

அடோனி அவளைக் கடந்து போகும் தருணங் களில் தன் வசம் இழந்து விடுவாள். புத்தகத்தைச் சற்றுக் கீழ் இறக்கி, மாரளவில் பிடித்துக்கொண்டு, கடைக்கண்ணால் ஒருதடவை அவனைப் பார்ப்பாள். 'ஏதாவது கதையேன்' என்பது போன்று அந்தப் பார்வை இருக்கும். அடோனி ஒரு அபொறியினல், திரு டப்பட்ட தலைமுறையைச் சார்ந்தவன். மேற்கு அவுஸ்திரேலியாவில் இருந்து படிப்பதற்காக மெல்பேர்ண் வந்திருந்தான்.

இப்படித்தான், அன்று அடோனி அவளைக் கடந்து செல்கையில், திடீரென கரோலின் தன் இருப்பை விட்டு எழுந்து நின்று புன்னகைத்தாள். எத்தனை நாள் தான் கடைக்கண்ணால் வெட்டு வது? அடோனி பயந்தே போய்விட்டான். பளிங் குக்கண்கள், மெல்லிய கீற்றுப் போன்ற புருவங்கள், கூரிய நாசி, காற்றிலாடும் பறவையின் மெல்லிய பொன்நிற இறகுகளாகக் கூந்தல், பரிதி வட்டம் போன்றதொரு ஓலைத்தொப்பி. ஏதோ ஒரு பெயர் தெரியாத சென்றின் நறுமணம் ஒன்று அவளிட மிருந்து பிரிந்து வந்து அவனைச் சூழ்ந்து கொண்டது. இவை எல்லாமுமாகச் சேர்ந்து அவனைப் பொறி போல அப்பிக் கொண்டது. அதுவே அவர்களின் மூச்சு முட்டும் தூரத்திற்குள்ளான முதல் அறிமுகம்.

'ஹலோ' பட்டெனப் பேசும் ஆசாமி கரோலின். அப்பாவி என எழுதி ஒட்டியிருக்கும் தன் அகன்ற விழிகளால் அடோனி அவளை முழுசிப் பார்த் தான். போய்விட்டான்.

பூர்வீகக்குடிகளும், அவர்களுக்குப் பிறந்த கலப் பினத்தவரும் படிப்பதற்கு வருவதே குறைவு. அடோனி மருத்துவம் படிக்க வந்தது பலருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. அவுஸ்திரேலியாவில் பூர்வீகக்குடிகளின் உடல் ஆரோக்கியம் ஏனைய வர்களைக் காட்டிலும் குறைவாக இருந்ததும், அவர்கள் இள வயதிலேயே மரணமடைந்து வரு வதையும் பள்ளியில் படிக்கும்போது அடோனி அறிந்திருந்தான். அதுவே அவனை மருத்துவம் படிக்கத் தூண்டியிருக்கலாம்.

'கரோலின் என்னை விரும்புகின்றாளா?' அடோ னியின் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. முதற் குமுழி ஒன்று அவன் அடிமனதில் இருந்து மேலெழுந்து நடனமிட்டது.

தற்செயலாக ஆரம்பித்த இந்தச் செயல், நாள டைவில் அவர்களின் அன்றாட காரியங்களுள் ஒன்றாகிவிட்டது. 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்ற பட்டறிவு அடோனிக்கு வரும்போ தெல்லாம், 'அடிக்கிற கை தான் அணைக்கும்' என்று சொல்ல வருபவன் வருண். அவனே அவர் கள் இருவருக்குமான நெருக்கத்தைச் செறிவாக்கி எண்ணெய் ஊற்றி வளர்ப்பவன்.

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இரண்டு குழுக்களாக இருந்தார்கள். கிழக்காசியாவைச் சேர்ந்தவர்கள் ஒருபுறம்; அது தவிர்ந்த ஐரோப்பா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இன்னொரு புறம். இரண்டிலும் சேராத பிரகிருதிகளும் உண்டு, கரோலின், அடோனி போல. இரண்டு குழுக்க ளென்று சொல்வதால் - அவர்களிடையே சண்டை சச்சரவு என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. பழக்க வழக்கங்கள், உணவு முறைகள் சார்ந்து தானாக உருவாகிய குழுக்கள் இவை.

'அடோனி! நான் நாளைக்கு விரிவுரைகளுக்கு வரமாட்டேன்' என்றாள் கரோலின். அடோனி! என்ற அவளின் அழைப்பு மற்றவர்கள் கூப்பிடு வது போல் அல்லாமல் சற்றே வித்தியாசமாக இருந்தது அன்று. குருவி ஒன்றின் உதடுகளுக் கிடையே எழுந்து அமுங்கும் கீச்சிட்ட குரல் போல் இருந்தது. சொல்லிவிட்டு அடோனியை உற்றுப் பார்த்தாள். மொட்டையான அந்த வார்த்தைகளில் ஏதோ பூடகமாக ஒளிந்திருப்பதை உணர்ந்தான் அடோனி. கரோலின் முன்னர் விரி வுரைகளுக்கு வராத சந்தர்ப்பங்களில் இப்படி அவனுக்குச் சொல்லியிருந்ததில்லை.

'ஏன்?' என்று கேட்க நினைத்தான் அடோனி. ஆனால் கேட்கவில்லை. குனிந்து அவளின் முகத் தைப் பார்த்தபடி நின்றான்.

'வீடு மாறுகின்றோம்' கவலையுடன் சொல்லி விட்டு தலையைக் குனிந்து கொண்டாள் கரோ லின். ஒருவர் ஒரு இடத்தில் பலகாலம் வாழ்ந்து விட்டு, அந்த இடத்தைவிட்டுப் பிரிந்து போவது கவலை தரும் செய்திதான். அதுவும் மெல்பேர் ணில் 'ரூறாக்' என்ற செல்வந்தர்கள் வசிக்கும் அந்த அற்புதமான இடத்தைவிட்டுப் பிரிவதென் றால்...?



'புதிய வீட்டிற்குப் போகவேண்டும் என்ற ஆசையும் இருக்கின்றது. அதே நேரத்திலை இப்ப இருக்கிற வீட்டையும் அயலில் உள்ளவர் களையும் விட்டுப் பிரிகின்றோம் என்ற கவலை யும் இருக்குது' அவள் கண்களில் கண்ணீர் கோர்த் தது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் கரோலினின் தாத்தா---அப்பாவின் அப்பா---இறந்துவிட்டார். செத்தவீட்டிற்கு சகமாணவர்களுடன் அடோனி யும் போயிருந்தான். தாத்தா தனது எண்பத்தி யெட்டாவது வயதில் காலமாகியிருந்தார். செத்த வீட்டிற்கு பல்கலைக்கழகத்தின் முதல்வர், விரி வுரையாளர்கள், இராணுவ அதிகாரிகள், அரசி யல் பிரமுகர்கள் என பல பெரிய புள்ளிகள் வந்திருந்தார்கள். தாத்தாவுக்காகத்தான் எல்லா ரும் அந்தப் பழைய வீட்டில் வாழ்ந்து வருவதாக முன்பொருநாள் கரோலின் சொல்லியிருந்தாள். பழைய வீடென்றாலும் பெரிய மாளிகை அது. வீட்டின் முன்புறத்தில் ஒரு 'செக்கியூரிட்டிப் பொயின்' றும், பின்புறம் பூந்தோட்டம், நீர்த்தடாகம் என்பனவும் இருந்தன. வீட்டைச் சுற்றி உயர்ந்த மதில் ஒன்று முடிவிடம் தெரியாமல் ஓடியது. அவர் அந்த வீட்டைப் பார்த்துப் பார்த்துக் கட்டியிருந்தா ராம். முதல் பார்வையில் அந்த வீட்டைப் பார்ப்ப வர்கள் ஒரு அரண்மனையின் தன்மையை உணர்ந்து கொள்வார்கள்.

அதற்கு முன்னரும் அடோனி, கரோலினின் வீட்டிற்குப் போயிருக்கின்றான். அவளின் பிறந்த தினத்திற்குப் போனபோதுதான் ஒருநாள், கரோ லின் தனது பெற்றோருக்கு முதன்முதலில் அவனை அறிமுகம் செய்திருந்தாள். கரோலினிற்கு `கிறிஸ்ரல்' என்ற ஒரு தங்கையும் இருக்கின்றாள். பெயருக் குற்ற விதத்தில் அவள் ஒரு பளிங்கு. தந்தையார் ஏதோ பிஸ்னஸ் செய்வதாகச் சொல்லியிருந்தாள். அப்போதெல்லாம் தாத்தா அடோனியை இடை மறித்துக் குறுக்குக் கேள்விகள் கேட்பார். முகத்தை ஒரு விறுமாண்டி போல வைத்துக்கொண்டு அவர் கேட்கும் கேள்விகள் அடோனிக்குப் பிடிப்ப தில்லை. தாத்தாவிற்கு அவன் மீது ஒரு வெறுப்பு இருந்ததாகவே அவன் உணர்ந்தான்.

கரோலினும் அடோனியின் வீட்டிற்கு நண்பர் களுடன் வந்திருக்கின்றாள். கரோலினை முதன் முதலாக அடோனி தன் பெற்றோர்களுக்கு அறி முகம் செய்தபோது, அவர்கள் மனதினுள் ஏதோ ஒருவித பயம் அப்பிக் கொண்டது. கரோலின் வெள்ளைக்காரி ஆயிற்றே! நாட்டிற்குள் நுழைந் தது முதல் - தம் இனத்தவரை அடித்துத் துரத்திய தும், ஆக்களைக் கெடுத்து, பெண்களின் கற்பைச் சூறையாடி, பிள்ளைகளை அள்ளிக் கொண்டு போனதும் அடோனியின் பாட்டிக்கு நினைவிற்கு வந்தன. அவை கொதிக்கும் எண்ணெயில் கொப்பளங்களாக வெடித்து வெடித்துச் சிதறின.

பள்ளி வாழ்க்கையின் போது இப்படிப்பட்ட ஆண் - பெண் தொடர்புகள் இல்லாதிருந்ததும், பல்கலைக்கழகம் போனதன் பின்னர்தான் இத்த கைய தொடர்புகள் ஆரம்பித்திருப்பதையும் இரண்டு பக்கத்துக் குடும்பத்தாரும் அவதானித்திருந்தார் கள்.

கரோலின் வீடு மாறும் விடயத்தை மற்றவர்கள் ஒருவருக்கும் சொல்லாமல் தனக்கு மாத்திரம் தான் சொல்கின்றாளா?. ஒருவேளை தன்னிடம் ஏதாகி லும் உதவியை எதிர்பார்க்கின்றாளா? அடோனி யின் மனம் குழம்பியது.

'நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமா?'

'இல்லை. தேவையில்லை. எல்லாப் பொருட்க ளும் பெட்டிகளில் போட்டு வைத்துவிட்டோம். அப்படியே தூக்க வேண்டியதுதான். அப்பப்பா வின் உடமைகள்தான் ஏராளமாக உள்ளன. அவற்றைத்தான்....'

'நான் சனிக்கிழமை வருகின்றேன்' என்றான் அடோனி. அதற்கு அவள் மறுப்புத் தெரிவிக்க வில்லை.

சனிக்கிழமை கரோலினின் வீட்டிற்குச் சென்ற போது, அவர்களுடன் படிக்கும் விசாவும் எலிச பெத்தும் வருணும் அங்கே நிற்பதைக் கண்டான் அடோனி. அவர்கள் ஏற்கனவே உதவி செய்து கொண்டிருந்தார்கள்.

'வா... வா... உன்னைத்தான் கரோலின் தேடிக் கொண்டிருக்கின்றாள்' என்றான் வருண் புன்ன கைத்தபடியே.

அந்த வீட்டில் ஒரு நிலக்கீழ் அறை இருந்தது. அவுஸ்திரேலியாவில் முதன்முதலாக அன்றுதான் நிலக்கீழ் அறையை அடோனி கண்டுகொண்டான்.

'அப்பா இருக்கும்வரை ஒருவருக்குமே அந்த அறைக்குள் போவதற்கு அனுமதி கிடையாது'

என்றார் சிரித்தபடி கரோலினின் அப்பா.

வியாபார நிமித்தம் அங்கு இங்கு என அலையும் கரோலினின் தந்தை அன்று நின்றிருந்தார். வீடு மாறுவதற்காக ஒருகிழமை லீவில் நிற்பதாகச் சொன்னார்.

எல்லாரும் நிலவறைக்குள் இறங்கினார்கள். எங்குமே சிலந்தி வலைகளும் ஒட்டடைகளுமாக இருந்தன. பெட்டி பெட்டியாக தூசி படிந்த தாத்தாவின் ஆவணங்கள், உடைமைகள் நிறைய பரவி இருந்தன. ஆளுக்காள் முகத்தைப் பொத்தியபடி 'அச்சூம்' போட்டார்கள். எலிசபெத் 'மிஸ்டர் பீன்' போல் கையை முகத்தினின்றும் எடுத்து, உதட்டிற்குக் கீழ் வைத்து மெதுவாக 'அச்சும்' என்றாள். எல்லோரும் சிரித்தார்கள்.

'உங்கள் தாத்தா என்ன வேலை செய்தார்?' திடீரெனக் கேட்டாள் லிசா. அவளின் அந்தக் கேள்வியினால் கரோலினின் முகம் திடீரென கரு கருவென மாறுவதை அடோனி கண்டுகொண்டான்.

"உஷ்! பிறகு சொல்கின்றேன்' சுட்டுவிரலினால் தன் உதட்டை அழுத்தினாள். படிக்கட்டுகளின் அடியில் நின்றபடி மேலே எட்டிப் பார்த்தாள்.

'அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு உளவு நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தவர்களில் எனது தாத்தாவும் ஒருவர். **The Australian Security Intelligence Organisation**' மெல்லிய குரலில் தயங்கியபடி சொன்னாள். அதன் பின்னர் கரோலின் ஏதோ சொல்ல முற்பட்டதையும், சொல்ல வந்ததை முழுமையாக முடிக்காமல் விட்டுவிட்டதையும் அடோனி கவனித்தான்.

அவளைச் சூழ்ந்து நின்ற அனைவரும், படிக்கட்டின் வழியே ஓடும் கம்பியை ஒருமுறை பிடித்து தமது சுய உணர்வைப் பரிசோதித்துக் கொண்டனர். அவுஸ்திரேலியாவின் ஒரு பெருங்குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடனா தாங்கள் படித்துக் கொண்டிருக்கின்றோம், பழகிக் கொண்டிருக்கின்றோம் என வியப்பில் ஆழ்ந்தனர் அவர்கள். ஆனாலும் கரோலினில் இவை ஒன்றுமே தெரியவில்லையே?

கரோலினும் லிசாவும் எலிசபெத்தும் நிலவறைக்குள் நிற்க, வருணும் அடோனியும் படிக்கட்டுகளின் வழியே மேல் ஏறி நடுவில் நின்றார்கள். பெட்டிகள் கீழிருந்து மேலே சென்றன. பெட்டிகளைக் கொடுக்கும்போது வேண்டுமென்றே அடோனியின் கைவிரல்களைச் சீண்டினாள் கரோலின். குறுகுறுத்தபடி அவன் கரோலினைப் பார்த்தான். கரோலினின் கண்களில் ஒருவித மயக்கம் மிதந்ததைக் கண்டுகொண்டான். அந்த மயக்கத்தில் அடோனி சிலிர்த்துப் போனான்.

'கரோலின்! இங்கே ஒருக்கால் வா. அம்மா கூப்பிடுகின்றார்' மேல் இருந்தபடியே தந்தை கூப்பிட்டார். அவர்களிடையேயான அந்த ஊடலை அவர் கண்டிருக்கக் கூடுமா? குசினிக்குள் அம்மா தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார். குசினிக்குள் சென்ற கரோலின் நீண்ட நேரமாக வரவில்லை. கரோலினின் இடத்தை நிரப்ப கிறிஸ்ரல் அங்கே வந்தாள்.

'அடோனி! நீங்கள் கீழே போங்கள். நான் மேலே நிற்கின்றேன்' என்றாள் கிறிஸ்ரல்.

அடோனி வருணைப் பார்த்தபடி, படிகளின் வழியே கீழ் இறங்கி நிலவறைக்குள் சென்றான். நிலவறைக்குள் ஒரு மின்சார பல்ப் மாத்திரம் எரிந்து குருட்டு வெளிச்சம் போட்டுக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் தூசிப்படலம் மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

கடைசிப் பொதிகள்---ஏறக்குறையப் பத்திற்கும் மேல்---சற்றே வித்தியாசமாக இருந்ததை அடோனி அவதானித்தான். அவற்றின் மேல் எழுதப்பட்டிருந்த பெயரும் வேறாக இருந்தது. அடோனி ஒரு பேப்பரை எடுத்து பெட்டிகளின் மேல் எழுதியிருந்த பெயர்களைக் குறித்துக் கொண்டான்.

கரோலின் ஒரு தட்டில் கோப்பியும் பிஸ்கெற்றும் கொண்டு வந்தாள். எல்லோரையும் மேலே ஏறி வரும்படி கூப்பிட்டாள்.

அதன் பின்பு அங்கே பெரிதாக வேலை இருக்கவில்லை. அடோனிக்கும் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. தலை வலிக்கின்றது எனச் சொல்லியபடி உடனடியாகக் களம்பிவிட்டான்.

அடுத்துவந்த திங்களும் செவ்வாயும் அடோனி யூனிக்குப் போகவில்லை. மனம் பாராங்கல்லாய்க் கனத்தது. அறைக்குள் தனிமையில் தவித்தான். கரோலின் பற்றி அவனால் தெளிவாக எதுவும் புரிந்துகொள்ள முடியவில்லை. பாட்டியார் சொன்னதைத் தவிர, வேறந்த எண்ணங்களும் தலைதூக்கவில்லை. கரோலினைப் பிடிக்காமல் போனதற்கு, அவள் 'வெள்ளைக்காரி' என்பதைத்தவிர வேறெந்தக் காரணமும் இருக்கவில்லை. வெள்ளைக் காரரை ஏன் பிடிக்கவில்லை என ஆராயப்போனால் நாம் பின்னோக்கி இருநூறு வருடங்களுக்கும் மேல் போய் அங்கிருந்து வரவேண்டியிருக்கும்.

வெள்ளைக்காரர்கள் பற்றிய கதைகளை - தனது மூதாதையருக்கு நடந்த துயரங்களை - தமது இனத்தின் அடையாளத்தை அழித்ததை - அடோனி சிறுவயதாக இருக்கும்போதே பாட்டியார் பல தடவைகள் அடோனிக்குச் சொல்லியிருக்கின்றாள். அவனது மனக்குழப்பம் உச்சத்தை அடைந்து கொண்டிருந்த வேளையில், காணாமல் போனவர்கள் பற்றியும், கவர்ந்து செல்லப்பட்டவர்கள் பற்றியும் பாட்டி பல கதைகளாக அவனுக்கு சொல்லியிருக்கின்றாள். அதுகுறித்து கனவு கண்டு விழித்து நடுங்கி இருக்கின்றான். அது காலந்தொட்டு அடோனிக்கு வெள்ளை இனத்தவர் மீது ஒரு வெறுப்பு வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றது. ஆனால் அவனது அம்மா வெள்ளைக்காரர்கள் பற்றி எதுவும் அவனிடம் சொல்லாதது அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஒரு வேளை அவள் பாதி வெள்ளையாகிவிட்டது காரணமாக இருக்கலாம்.



இதையெல்லாம் தவிர்த்து விட்டுப் பார்த்தால், கரோலின் ஒரு 'தங்கக் கட்டி' போலவே அடோனிக்குத் தென்பட்டாள். அந்தத் தங்கக் கட்டியைத் தூக்கி எடை பார்க்க ஆசையாகவும் இருந்தது அவனுக்கு. மாறி மாறிக் கொப்பளிக்கும் எண்ணங்களுடன் போராடினான் அடோனி.

அறையைப் பூட்டிவிட்டு - கரோலினின் வீட்டில் இருந்து எழுதிக்கொண்டு வந்த இரண்டு பெயர்களையும் கொம்பியூட்டரில் தேடினான். கூகிள் அவனுக்குத் திகைப்பான செய்திகளைச் சொன்னது. ஒன்று கரோலினின் தாத்தா. மற்றவர் தாத்தாவின் அப்பா, முப்பாட்டன். தாத்தாவைப் பற்றி ஏற்கனவே கரோலின் சொல்லிவிட்டாள். முப்பாட்டன் செய்த கொடுமை அதைவிடப் பன்மடங்கானது. தனது முன்னோர்கள் செய்தவற்றில் உடன்பாடு இல்லாததால்தான் கரோலின் எல்லாவற்றையும் மறைத்தாளா? அந்த இறந்துபோய் விட்ட இருவரும் கொடுத்த திகைப்பினால் அடோனிக்கு நிஜமாகவே காய்ச்சல் வந்துவிட்டது. காய்ச்சல் முற்ற அடோனி தனது மனதோடு பிதற்றினான். முரண்பட்ட எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டான்.

'கரோலினைத் திருமணம் செய்வது சாத்தியப்படுமா?'

'அப்போதெல்லாம் அவர்கள் எங்கள் பெண்களின் கற்பைச் சூறையாடினார்களே!'

அதன் பிறகு மனச்சாட்சி தொடர்ந்து அடோனியைப் பேசவிடாது தடுத்தது. தானே எல்லாவற்றையும் பேசிக் கொண்டது.

'கற்பைச் சூறையாடுவதற்கும் காதல் கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.'

'உன்னுடைய அப்பா கூட அவள் இனத்தவர்தானே!'

'பழி ஓரிடம் பாவம் ஓரிடமா?'

'இத்தனை வருடங்கள் காத்திருந்து, அந்தப் பரம்பரையில் இப்படியொரு பெண் முகிழ்த்திருக்கின்றாளே எனச் சந்தோஷப்படு.'

அடோனி தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

மாலையில் வருணும் கரோலினும் அவனைப் பார்த்துச் செல்ல வந்திருந்தார்கள்.

கரோலின் அடோனியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்து,

'ஓ... அனலாகக் கொதிக்கின்றதே!' என்றாள்.

அடோனி சீறி விழுந்தன். 'உனது முப்பாட்டன் அவுஸ்திரேலியாவில் நிற வெறிக்கொள்கையை அமுல்படுத்தியவர் அல்லவா! அதுதான் என் தலை கொதிக்கின்றது' கோபமாகச் சொன்னான்.

வருண் திகைத்துப் போனான்.

கரோலினின் முகம்குப்பென வியர்த்தது. அவள் மேல் ஒரு பாறாங்கல்லு விழுந்து உருண்டது போன்றிருந்தது. அந்த விடயங்களைப் பகிர்ந்துகொள்ள மனம் விரும்பாதவளாக, தடுமாற்றத்துடன் அறையைவிட்டு வெளியேறி வாசலில் நின்றாள்.

கரோலின் வெளியே போனபின்னர், நெடுநேரம் வரை தனது படுக்கையில் இருந்தபடி முகட்டில் பார்வையை ஓடவிட்டபடி இருந்தான் அடோனி. வருண் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

'வெளியே நிற்கின்றாள். கூட்டி வரவா?' அடோனியிடம் அனுமதி கேட்டான் வருண்.

'உம்' என்று பெருமூச்செறிந்தான் அடோனி.

உள்ளே வந்த கரோலினின் கண்கள் மின்னின. இருவரில் யார் முதலில் பேசுவது என்று காத்திருந் தார்கள். தங்களுக்குள் செருமி ஒத்திகை பார்த்துக் கொண்டார்கள். எந்த நேரத்திலும் ஒத்திகை நிஜமாகலாம் என எதிர்பார்த்தான் வருண்.

'மூட்டை மூட்டையாகக் கொண்டுபோன உங்கள் தாத்தா பூட்டனின் முதுசங்கள் என்ன வாயிற்று' கரோலினைப் பார்த்துக் கேட்டான் அடோனி.

'அந்தத் தரித்திரங்களை எல்லாம் எரித்துவிட்டார் என் அப்பா. அப்பாவிற்கு அரசியல் பிடிப்பதில்லை' என்றாள் அவள்.

அந்தக் கேள்வி பதிலினால் இருவரின் கண்களும் பனித்தன.

சிறிது நேரம் தான். படுக்கையில் இருந்து தாவிக் குதித்து கரோலினைக் கட்டிப்பிடித்தான் அடோனி. ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடியே தூக்கிச் சுற்றினார்கள். நோய்க்கு அருமருந்தாக மாறி மாறி முத்தங்கள் பொழிந்தனர்.

வருண் அந்தக் காட்சியைத் தவிர்க்க வேண்டி, ஜன்னலினூடாக வெளியே பார்வையை ஓடவிட்டான். 'நிறவெறியை அமுல்படுத்தியவர்களின் வாரிசுகளும், நிறவெறிக்கு உள்ளானவர்களின் வாரிசுகளும் இன்று மனமொத்து இணைகின்றார்கள்.' சிந்தனைவெளியில் சஞ்சரித்தான் வருண். அவனது வெளியை, வீட்டின் பின்புறம் ஒன்றுடன் ஒன்று விளையாடிக் கொண்டிருந்த பூனையும் எலியும் ஊடறுத்தன. கொழுத்த எலி ஒன்று பூனையின் மேலே ஏறிச் சவாரி விடுவதும், பூனை அதனைக் கீச்சுக் காட்டுவதுமான காட்சி தெரிகின்றது.

அப்போது வருணின் மொபைல்போனிற்கு ஒரு அழைப்பு வந்து, அடோனிக்கும் கரோலினிக்கும் இடையேயான இறுக்கத்தைத் தளர்த்தியது. சத்தம் வந்த திசை நோக்கி அடோனியும் கரோலினும் பார்வையைச் செலுத்தினார்கள். அங்கே வருணின் தொலைபேசியில் கிறிஸ்ரலின் முகம் பளிச்சிட்டது. அவர்கள் இருவருக்கும் அது அதிர்ச்சியாக இருந்தது.

இன்னொரு பூனை, இன்னொரு எலியுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கான அழைப்பு அது. வருண் தயக்கத்துடன், பச்சை பட்டனை அழுத்தி 'ஹலோ' என்றான். ■

கதிரேசன் காத்தவராயன்

# விலாசமடிச்சால் வருத்தம் பெரிசாகுமாம்... உண்மைதானோ ?

அண்டைக்கு அதிலை வாசிய சாலையிலை டொக்ரர்மாற்றை பிரச்சினையைப் பற்றிக் கதை கிளம்பிச் சமாளிச்சுக்கொண்டு வீட்டை போக அங்கை கதிரவேலு வாத்தி யார் இருக்கிறார். எனக்கெண்டால் ஒரு மாதிரியாய்ப் போட்டுது. அந்தாளுக்கு ஒரு பொடியனும் ஒரு பெட்டையும் டொக்ரல்லே? அந்தாளுக்கு அதாலை வலு பெருமை. அவருக்குப் பிள்ளையளே அதுகள் ரெண்டுந்தான். இப்ப ஆள் பென்சனெடுத்த பிறகு முழு நேரத் தொழிலே அதுகள் ரெண்டினரையும் வீடுகளைப் பராமரிக்கிறது தான். அதுகள் ரெண்டும் ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டாய் லண்டனிலை போய் செட்டிலாகிட்டுதுகள். அது கிடக்க இப்ப இந்தாள் ஏன் இஞ்ச வந்திருக்குது?

அதுக்கிடையிலை ஆரும் கதை காவிப்போட்டுதுகளோ?

சரி சமாளிப்பம்.

இப்ப நானென்ன பொய்யே கதைச்சுப்போட்டன்.

“இஞ்சார் கதிரேசு! என்னடாப்பா திகைச்சுப்போய் நிக்கிறாய்? வா... வா’’ எண்டு என்ரை வீட்டிலை இருந்து கொண்டு என்னையே வரவேற்றுது மனிசன்.

“ஓமோம்..ஓ..ஓ..’’ எண்டபடி உள்ள போய் இருந்தன்.

“இஞ்சார் கதிரேசு ஒரு உதவி தேவைப்படுகுது அதுதான் வந்தனான்’’ எண்டு விசயத்துக்கு வந்தார்.

“என்ன உதவி மாஸ்ரர்? உங்களுக்கில்லாத உதவியோ?’’ எண்டு நான் உசார் குடுத்தன்.

“ஒரு சின்ன ஒப்பிரேசன் செய்ய வேணுமாம் எனக்கு. அதுதான் கூட மாட ஆஸ்பத்திரியிலை ஒரு நாளைக்கு நிப்பியோ?’’ எண்டார்.

ஆஸ்பத்திரியிலையோ? எந்த ஆஸ்பத்திரியோ? கோதாரி! வருத்தமெண்டாலே போக விரும்பாத இடமாயெல்லே மாறிப்போயிருக்குது? எண்டு நினைச்சுத் திகைச்சுப் போனன் பாருங்கோ.

“கதிரேசு என்னப்பா யோசிக்கிறாய்? பெரியாஸ்பத்திரியிலை இப்ப பதிவு செய்தால்தான் ஒரு மூண்டு மாதத்துக்குப் பிறகு இடம் கிடைக்குமாம். இது பெரிய பிரச்சினையில்லையாம்... ஆனாலும் கெதியிலை செய்யிறதுதான் நல்லதெண்டு டொக்ரர் சொன்னதாலை பிறை வேற்றிலை தான்..’’ எண்டு நிப்பாட்டிச்சுது மனிசன்.

பாவமாக் கிடந்துது. வாழைப் பழத்திலை ஊசி ஏத்துற மாதிரி நைசாய் வெருட்டிப் போட்டாங்கள் போலை. ரெண்டு பிள்ளையள் டொக்ரர்... பக்கத்திலை நிண்டு என்ன ஏதெண்டு பாத்துச் செய்ய ஆளில்லை. காசு நிறையக் கிடக்குதெண்டாப்போலை சரியோ?

“இஞ்சார் மாஸ்ரர் பிள்ளையளோடை கதைச்சு என்ன பிரச்சினை ஒப்பிரேசன் கட்டாயம் தேவைதானோ எண்டு விசாரிச்சனீங்களோ?’’

“ஓ விசாரிச்சனான். அதுகள் அவசரமொண்டுமில்லை ஆறுதலாய் தாங்கள் வாற நேரத்திலை பாக்கலாம் எண்டுதுகள்... அதுகளை நம்பி இருந்துபோட்டு அனுபவிக்கிறது நான் எல்லே.. பிள்ளையளும் டொக்ரரோடை கதைச்சதுகள்.. ஆனால் டொக்ரருக்கு அது பிடிக்கேல்லைப்போலை.. என்னோடை கொஞ்சம் சினக்கிறார். அங்கையிருந்துகொண்டே உங்கட நிப்போட்டுகளைப் பாத்து மட்டும் முடிவெடுக்கேலாது நேரிலை சோதிச்சது நான்... சொல்ல வேண்டினதைச் சொல்லிப்போட்டன்...உடம்பு தென்பாயிருக்கேக்குள்ள செய்யாமல் விட்டுப் போட்டு என்னைக் குறை சொல்லக் கூடாதெண்டு சொல்லுறார். இஞ்சார் கதிரேசு ஒரு ரெண்டு மூண்டு லட்சத்தைப் பாத்து வருத்தத்தை அனுபவிக்கச் சொல்லுறியோ? அதுதான் செய்வமெண்டு சம்மதம் சொல்லிப் போட்டன்’’ எண்டு நிப்பாட்டி ஒரு பெருமூச்சை விட்டார்.

“சரிதான் மாஸ்ரர் இப்ப உங்களிட்ட காசு கிடக்குது செய்யிறியள்... இல்லாததுகளின்ர நிலை என்ன?’’ எண்டொரு கேள்வியைத் தயக்கத்தோடை தான் கேட்டும்விட்டன். அதுக்கு அந்தாள்.. “கதிரேசு... என்ர



பொடி ஏ.எல்லிலை நாலு ஏ எடுத்தவுடனை பேப்பர்க்காரர் வந்து பேட்டியெடுக்கேக்குள்ள என்ன சொன்னவன் தெரியுமே? எங்கடை சமூகத்துக்கு எங்கட மண்ணிலை நிண்டு உயிர் காக்கிற பணிசெய்யத்தான் மருத்துவம் படிக்கப்போறன் எண்டதுதான்... வேலையாகின மூண்டாவது மாதமே பிளேனேறினதுதான்.... கேட்டதுக்கு இஞ்சை தனக்குச் சரியான வசதியளைத் தரேல்லை எண்டொரு சாட்டோடை சரி.

கதைக்குள்ள கதிரேசு டொக்ரர்மாருக்கு தட்டுப்பாடெண்ட கதையும் அதுக்கான வழியும் பற்றின செய்தியொண்டு வந்தது பாத்திருப்பியோ தெரியாது. பாத்துப் போட்டு வயிறு வலிக்கச் சிரிச்சன். வேறை என்னதான் செய்ய? சொல்லு பாப்பம்? சரி அப்ப வரட்டே’’ எண்டபடி எழும்பிப் போட்டார்.

நான் உதவிக்கு வாறனெண்டது அந்தாளுக்குச் சந்தோசம் தான் போலை. காசோ, உதவியோ இல்லாததுகள் பாடு சரியான கஸ்ரம் தான் எண்டு நான் சொல்ல என்ர மனுசி சொல்லிச்சுது. உவர் மாஸ்ரர் விலாசமடிச்சதாலை தான் வருத்தம் பெரிசாகி அவசரமான ஒப்பிரேசன். தேவையானதெண்டு. அதுவும் சரி போலைதான் கிடக்குது இல்லையோ?



## சில நேசப்பொழுதுகளில்...

1
அந்தி அழைக்கிறது நிலவை விண்மீன்கள்
கண் சிமிட்டும் இந்த இரவில் ஓயாது பெருகும்
உன் நினைவுகளை
எங்கே ஒழித்து வைப்பேன் யாரும் அறியாமல்
கூந்தலால் போர்த்துகிறேன்
காற்று களவெடுத்து காவித்திரிகிறது
இரவு வெட்கமில்லாமல் அதை
இசை சேர்த்து பாடுகிறது...

2
உன் விழிகளில் வீழ்ந்து கிடக்கிறேன்
காதல் மென் கரம் தொட்டு தூக்கு
வாசலில் தினமும் வரம் பெற நிற்கிறேன்
அமுத மொழி சேர்த்து அழை
ஒரு துளிப்புன்னகையால் உயிர் ஊற்று
செல் என்று சொல்லாதே அன்பே
நில் என்று சொல்
இல்லை என்றால் என் உயிர்
கொல்லென்று சொல் ....

3
ம்ம் அகலாதே இன்னும் நெருங்கியிரு.
மென்மையான காற்றாய் என்னை தழுவு.....
அன்பே புன்னகையால் என்னை
புத்துயிர்க்க செய்
இந்த நீண்ட பயணதில் இணைந்திரு...
மின்னல் விழிகளால் வழிகாட்டு...
நட்சத்திரங்கள் உதிக்கிறநேரம்.
வானம் ஏன் சிவக்கிறது என்கிறாய்.
உன் கன்னம் சிவக்கிற கணங்களுக்கே
இன்னும் விடையில்லை என்கிறேன்.
தோள் சாய்கிறாய் பறப்பதாய் உணர்கிறேன்
அன்பே விலகாதிரு
இது அன்பினை எழுதும் இரவு.

- அஞ்சு

## எந்நாளும் நலம் வாழ

மருத்துவர்: கந்தையா சோதிதாசன் நீள் புகழ் நிலவேம்பு (சிறியாள் நங்கை)

சுரம் தணிக்கும், விஷமகற்றும் காமாலை
கொல்லும் மண்ணில் நலமளிக்கும்
தரமான மூலிகை தான் நிலவேம்பென்பேன்
கல்லீரல் நோயுடனே கடிசொறிகள் நீங்கும்
பனி மொழியே பலம் பெருகும் புழுக்கொல்லும்
பித்த மயக்கம் தீரும் இவையெல்லாம்
தணியுமடி குடிநீர் செய்து முன்னோர்
சொன்னபடி அருந்தி வரத் தானே!

**விளக்கவுரை**

டெங்கு உட்பட அனைத்து வகையான காய்ச்சலையும் தணிக்கக் கூடியதும் விசத்தை நீக்குவதும் காமாலையைக் குணப்படுத்தக் கூடியதுமான நன்மை மிகுந்த மூலிகை எது வெனக் கேட்டால் நான் நிலவேம்பு என்றே சொல்வேன். அதுமட்டுமன்றிக் கல்லீரலில் ஏற்படும் நோய்கள் மற்றும் சரும நோய்களையும் இது குணமாக்குகிறது. பனி போல குளிர் சொல் பேசும் பெண்ணே...! இது தாது பலத்தை அதிகரிக்கிறது. வயிற்றுப் புழுக்களையும் கொல்கிறது. எமது முனோர்களான சித்தர்கள் தமது நூல்களில் சொன்னபடி இதைக் குடிநீராகக் காய்ச்சி அருந்தி வர மேற்சொன்ன நோய்கள் யாவும் நீங்கும்



**நிலவேம்புக் குடிநீர்:** நிலவேம்பு, வெட்டிவேர், விளாமிச்சை வேர், பற்படாகம், பேய் புடல், கோரைக் கிழங்கு, சந்தனத் தூள், சுக்கு, மிளகு ஆகிய 9 பொருள்களையும் சம அளவு எடுத்துத் தூள் செய்ய வேண்டும். 2 தேக்கரண்டிக்கு 200 மில்லி லீற்றர் அளவில் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விட வேண்டும் 50 மில்லி லீற்றர் தண்ணீராக அது வற்றியவுடன் வடிகட்டி மிதமான சூட்டில் குடிக்க வேண்டும். இந்தக் கசாயத்தைத் தயார் செய்த 4 மணி நேரத்துக்குள் குடித்துவிட வேண்டும்.



## முஸ்டாங்



சர்வதேச அளவில் இணைந்து தயாரிக்கப்பட்ட நாடகத் திரைப் படம் முஸ்டாங். துருக்கிய-பிரெஞ்சு திரைப்பட இயக்குநர் டெனிஸ் காம்சே எர்கோவனின் முதலாவது படம். 2015 ஆம் ஆண்டில் வெளியானது. துருக்கியக் கிராமம் ஒன்றே இதன் கதைக் களம். பெற்றோர்களை இழந்த பதின்மவயதுப் பெண்கள் ஐவர் அவர்களின் பாட்டியோடும், மாமாவோடும் வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையையும், பழமைவாதச் சமுதாயத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சித்திரிக்கிறது படம். வெளியாகியவுடன் கேன்ஸ் திரைப்பட விழாவின் இயக்குநர்களின் ஃபோர்ட்நைட் பிரிவில் திரையிடப்பட்டு ஐரோப்பியச் சினிமாஸ் லேபிள் விருதை வென்றது. அத்தோடு 88ஆவது அக்கடமி விழாவில் சிறந்த வெளி நாட்டு மொழிப் படமாகப் பரிந்துரைக்கப்பட்டது. சிறந்த வெளி நாட்டு மொழி திரைப்படத்திற்கான கோல்டன் குளோப் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது. 41ஆவது சீசர் விருதுகளில் ஒன்பது பரிந் துரைகளைப் பெற்று, மேலும் சிறந்த முதல் திரைப்படம், சிறந்த திரைக்கதை, சிறந்த காட்சித் தொகுப்பு, சிறந்த இசை ஆகியவற்றுக் காகவும் பல விருதுகளைத் தனதாக்கிய படம் இது.

**கதை**

பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியில் தங்கள் வகுப்புத் தோழர்களுடன் கடற்கரையில் தண்ணீரில் விளையாடுகிறார்கள் அந்த ஐந்து பெண்களும். விளையாடி முடிந்து அவர்கள் வீட்டிற்கு வந்ததும், ஆண் தோழர்களுடன் இந்த வகையான உடல் ரீதியான தொடர்பைக் கொண்டதற்காக அவர்களைத் திட்டுகிறார் அவர்களது பாட்டி. அவர்களைத் தண்டிக்கவும் செய்கிறார். அவர்களின் மாமாவும் பெண்கள் மீது கோபப்படுகிறார். அப்போதிருந்து, அந்த ஐந்து பேருக்கும் வீட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்படுகிறது. படிப்பு நிறுத்தப்படுகிறது. அவர்களுக்குத் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. ஐந்துபேரும் என்ன செய்வதென்று தெரியாமல் வீட்டில் அடைக்கப்பட்ட நிலையில் திணறுகிறார்கள். வீட்டில் இருக்கும் அவர்களுக்கு அவர்தம் பெண் உறவினர்கள் சமைக்கவும், வீட்டைச் சுத்தம் செய்யவும், ஆடைகளைத் தைக்கவும் கற்றுக் கொடுக்கிறார்கள். அப்படியிருந்தும், மூத்த சகோதரி சோனே தனது காதலனைச் சந்திக்க அவ்வப்போது முற்படுகிறார். மற்றொரு பெண் அங்கிருந்து தப்பிப்பதற்குப் பல்வேறு வழிகளைத் தேடுகிறார். முதல் இரண்டு பெண்களுக்கு ஒரே நாளில் திருமணம் நடக்கிறது. மூன்றாவது பெண் திருமணத்துக்கு முன் தன்னை மாய்த்துக்கொள்கிறாள். பத்து வயது நிரம்பிய லாலே, நான்காவது பெண்ணைக் காப்பாற்றி இஸ்தான்புல் அழைத்துச் செல்கிறாள். அங்கு அவள் ஆசிரியையைச் சந்தித்து வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராகிறாள். பாடசாலைக்குச் சென்றுவந்த சிறுமிகள் மாணவர்களுடன் விளையாடினார்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களின் மகிழ்ச்சி, சுதந்திரம், கனவு என எல்லாமே அவர்களிடமிருந்து ஒரே நாளில் பறிக்கப்படுகிறது. அவர்களின் கன்னித்தன்மையை உறுதிசெய்யும் பரிசோதனை நடத்தப்படுகிறது; பின் வரிசையாகத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. திருமணத்துக்கு மறுநாள் படுக்கை விரிப்பில் அவர்களின் கன்னித் தன்மை சோதிக்கப்படுகிறது. சமூகத்தில் நிலவும் அவலங்களை இதைப் போன்ற காட்சிகள் இயல்பாக உணர்த்திச் செல்கின்றன.




**கதை கட்டமைக்கப்பட்ட விதம்**

சிறுமிகள் எதிர்கொள்ளும் சூழ்நிலைக் காட்சிகள் நகைச்சுவையாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றைப் பார்க்கும்போது வேதனை ஏற்படுகிறது. கன்னித் தன்மையை நிரூபிக்கும் பரிசோதனைக்கு உட்படுத்தப் படும்போது மருத்துவர் சொல்லாமலே சோதனைக்கு ஒத்துழைக்கிறார்கள் பெண்கள். அப்போது அவர்களது இயலாமையும் கோபமும் ஒருங்கே வெளிப்படுகின்றன. வீட் டுக்கு வந்தவுடன், 'இதற்கு உண்மையிலேயே தவறு செய்திருக்கலாம்' என்று அவர்கள் கசப்பாகச் சிரித்தபடி சொல்கிறார்கள். பாலியல் ஒழுக்கம் பற்றிப் பேசும் வளர்ப்பு மாமாவால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் சிறுமியின் தற்கொலை, சமூகத்தின் இரட்டை வேடத்தையும் அம்பலப்படுத்துகிறது. பெண்ணிய அக்கறையில் பல நாடுகளும் கொண்டுள்ள முன்னேற்றகரத்துக்கு மத்தியில் அதிக நாடுகளில் பெண்கள் ஒடுக்கப்படும் அவலமும் நிகழ்கின்றது என்பதை இந்தப் படம் 20ஆம் நூற்றாண்டிலும் வலுவாகச் சொல்லி நிற்கிறது.

# ஆறாவது குண்டு

கலியுக பித்தன்

நெடுங்கதை அத்தியாயம் 07

தொலைபேசியை அணைத்து விட்டு, ராகுலை ஏறிட்டான் கவிந்த். "ராகுல், இதப் பற்றி பிறகு விரிவா பேசுவம். இப்ப இந்த விஷயத்தைப் பற்றி யாரிட்டயும் கதைக்க வேண்டாம்" கவிந்த் சொன்னதை ஆமோதிப்பதை போல் தலையசைத்தான்.

"ஓகே பைன் மிஸ்டர் ராகுல்.. சீ யூ ருமாரோ... குட் நைட்" ராகுலிடம் விடை பெற்றுக்கொண்டு, அலுவலகம் நோக்கி தன்னுடைய மோட்டார் வண்டியை செலுத்த தொடங்கினான் கவிந்த். காற்றை கிழித்து கொண்டு வேகமாக பறந்தது வண்டி.

பதின்மூன்று நிமிடங்களிலேயே கவிந்த் அலுவலகத்தைச் சென்றடைந்து விட்டான். நேரத்தை பார்த்தான் இரவு எட்டு மணியாகி இருந்தது. வழக்கத்திற்கு மாறாக அலுவலகச் சூழல் மயான அமைதியாக இருந்தது கவிந்தை குழப்பத்தில் ஆழ்த்தியது. அலுவலகத்தின் உட்புறமும் எந்தவொரு வெளிச்சமும் இல்லாமல் இருளால் போர்க்கப்பட்டிருந்தது. "சந்துரு தான் நிக்கிறதாக சொன்னானே, அதுக்கான எந்த அறிகுறியும் இல்லையே" தனக்குள் கவிந்த் பேசி கொண்டான். ஆள்நடமாட்டம் குறைந்த பகுதியில் அலுவலகம் இருந்தாலும் இப்படியான ஒரு உணர்வு கவிந்திற்கு வந்தது இல்லை. எத்தனையோ இரவுகளில் தனியாக நின்று கேஸ் சம்மந்தமாக வேலை செய்திருக்கிறான். ஆனால் அப்போது இல்லாத அச்சம், தயக்கம் எல்லாம் இன்று அவனை ஆட்கொண்டு துன்பப்படுத்தியது.

மோட்டார் வண்டியை நிறுத்தி விட்டு அலுவலகக் கதவை நோக்கி நகர்ந்தான். தூரத்தில் கேட்ட நாய்களின் ஊளையிடல் கவிந்தை உலுக்கி போட்டு கொண்டே இருந்தன. ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் அவனுக்குள் தொற்றியிருந்த திகில் பன்மடங்காகி கொண்டே போனது. முன் வாசலை அடைந்தவன் தன்னுடைய கைத்தொலைபேசியை எடுத்து, வெளிச்சத்தைப் பிறப்பித்து, சூழ்ந்திருந்த இருளை விரட்ட முயற்சித்தான். மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தான். நீண்ட நேரமாக சார்ஜ் போடப்படாத கவிந்தின் தொலைபேசி செயலிழந்து போக, மீண்டும் இருள் அவனை கவ்வத் தொடங்கிற்று. திறந்த கதவின் வாசலின் நடுவில் தனிமரமாய் தத்தளித்து கொண்டிருந்தவன், தன்னுடைய பாக்கெட்டுக்குள் இருந்த லைட்டரை எடுத்து எரிய விட்டான். அது வேறு சரியாக எரியாமல் விட்டு விட்டு எரிந்து அவனை இம்சைப்படுத்தியது.

"சந்துரு... சந்துரு..." ஈனஸ்தாயியில் கூப்பிட்டான். நாய்களின் ஊளையிடலை தவிர எந்த சப்தமும் அவனுக்கு கேட்கவில்லை.

"சந்துரு எங்க இருக்கீங்க..?" மீண்டும் பேரமைதி. இடைக்கிட தட்டி பற்ற வைத்த போது லைட்டர் எழுப்பும் சப்தம் பேரிடியாக அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. லைட்டர் ஒளியின் உதவியுடன் மின்குமிழை உயிர்ப்பித்தான். அந்த ஒளி அறையில் பரவி இருந்த இருளை முழுவதுமாக விரட்டி அடித்தாலும், அங்கே பிணமாக இருந்த சந்துருவை பார்த்ததும் விரட்டப்பட்ட இருள் மீண்டும் கவிந்தின் முகத்தில் படர்ந்தது.

பார்த்த கணத்தில் கதிகலங்கி போய் நின்றான். அதிர்ச்சியில் இருந்து மீண்டு வர அவனுக்கு சில நிமிடங்கள் தேவைப்பட்டன. ஒரு பொலிஸ் ஆபீசருக்கு இந்த மாதிரி மேடர் சின்ன அதிர்ச்சி தான். ஆனால் வெளியில்



நடப்பதற்கும், ஒரு பொலிஸ் அலுவலகத்திற்குள்ளே, அதுவும் ஒரு பொலிஸ் ஆபீ சருக்கு நடக்கிறது என்பதற்கும் வித்தியாசம் இல்லாமல் இல்லை.

"இப்போதானே என்னோட பேசினான். அதுக்குள்ள எப்டி ..." அங்கு கண்ட காட்சியை அவன் மனம் ஏற்க மறுத்தது.

அறை முழுவதும் கண்களை சுழட்டி ஏதாவது தடயங்கள் இருக்கிறதா என்று ஆராய்ந்தான். ஏற்கனவே ஒரு மேடர் கேஸ், அதன் பின் ஒரு மிஸ்ஸிங் கேஸ், இப்போது ஒரு பொலிஸ் ஆபீசர் மேடர் கேஸ். கவிந்தின் தலைமேல் கடமைகள் கடும் சுமையாகி கொண்டிருந்தன. ஆனால் அவனால் ஒன்றை மட்டும் சரியாக ஊகிக்க முடியுமாயிருந்தது. இந்த மூன்று சம்பவங்கள் பின்னும் ஒருவனோ இல்லை ஒரு கும்பலோ தான் இருக்கிறது. அவனுடைய அடுத்த நகர்வு அந்த புள்ளியில் இருந்துதான் ஆரம்பிக்கப் போகிறது. ஆனால் அதை எப்படி ஆரம்பிக்க போகிறோம் என்பது பற்றி அவனிடம் இன்னும் எந்த திட்டங்களோ யோசனைகளோ இல்லை.

தலைமையகத்திற்குச் செய்தி அனுப்பி விட்டு அறை முழுவதும் தீவிர தேடலில் இறங்கினான் கவிந்த். செய்தி அனுப்பி இருபது நிமிடங்களில் ஒரு பொலிஸ்பட்டாளமே அந்த இடத்தைச் சுற்றி வளைத்து, தேடுதலிலும், வீதியால் செல்பவர்களிடம் விசாரணை செய்வதிலும் மும்மரமாக இறங்கியது. அங்கு வந்திருந்த இன்ஸ்பெக்டருக்கு நடந்த சம்பவங்களை மிகச் சுருக்கமாக கூறி விட்டு, தன் வேலையைத்தொடர்ந்தான்.

○ ○ ○ ○ ○ ○

கவிந்த் சென்றதும், இரவு சாப்பாட்டை முடிப்பதற்காக அறையை பூட்டி விட்டு வெளியில் சென்றான் ராகுல். இன்னும் மழை முழுதாக நிற்கவில்லை. இடைக்கிட தூறிகொண்டிருந்தது. மழை நனைத்து, இன்னும் கடும் கரியாக காட்சியளித்ததார் வீதியின் ஓரமாக நடந்து சென்றான். கும்மிருட்டில் ஆங்காங்கே மின்கம்பத்தில் பொருத்தப்பட்டு இருந்த மின்குமிழ்கள் குட்டி சந்திரனை போல் ஒளிர்ந்தன. அந்த இரவையும், வீதியையும் அழகாக்கி கொண்டிருந்தன.


அள்ளித் தெளிக்கப்பட்ட பல வர்ணப்பூச்சுக்கள் சுவரில் காட்டும் பல வர்ண ஜாலங்களை போல், இருளின் கறுப்பு, மின்குமிழின் ஒளி, வாகனங்களின் புழக்கம் எல்லாம் அந்த வீதியில் ஒரு வர்ண ஜாலத்தை தோற்றுவித்து இருந்தது. வீதியோரமாய் உள்ள கட்டடங்களின் பீலியில் இருந்து ஒழுகும் மழை நீர் தரையில் விழுந்து எழுப்பும் ஓசை அந்த இடம் முழுவதும் துள்ளல் இசையாய் ஒலித்துக் கொண்டிருந்தது. இத்தனை அழகையும் இரசித்துப் பார்ப்பதற்கு அவன் மனம் சரியான நிலைப்பாட்டில் இருக்கவில்லை.

பதினைந்து நிமிடத்தில் உணவை அருந்தி விட்டு அறைக்குத் திரும்பினான். அவன் தூரத்தில் வரும் போதே அறையின் வாசலில் யாரோ நிற்பதை அவதானித்தான் ராகுல். ஒரு கறுத்த உருவமாய் தெரிந்தது. ஐந்தே காலடி உயரம். குண்டாகவும் இல்லாத, மெல்லியதாகவும் இல்லாத, உடலை சுற்றி கறுத்த ஜக்கெட்டை தலையோடு சேர்த்து அந்த உருவம் அணிந்திருந்ததை ராகுலால் தெளிவாகப் பார்க்க முடிந்தாலும், முகம் தெளிவாகத் தெரியவில்லை. இவன் நெருங்க நெருங்க உருவம் அசைந்து தன்னை மெதுவாக இருட்டினுள் மூழ்கடித்து கொண் டிருந்தது. இவன் வேகமாக நெருங்கி வரவே, அவனை விட வேகமாக இருளில் கரைந்து காணாமல் போயிற்று அவ் உருவம்.

அந்த உருவம் கரைந்து போன திசையையே கண்வெட்டாமல் பார்த்து கொண்டிருக்க பின்னால் இருந்து "ராகுல்... ராகுல்..." என்று அவனை அழைக்கும் சத்தம் கேட்டது. சற்று கலக்கத்தோடு திரும்பி பார்க்க எதிரில் கவிந்த் நின்றான். "என்ன திரும்பவும் வந்துட்டீங்க" என்ற பாணியில் கவிந்தை ஆச்சரியமா பார்த்தான் ராகுல். "மிஸ்டர் ராகுல், தப்பா நினைக்காதீங்க. நாம அறைக்குள்ள போய் பேசலாமா" தயக்கத்தோடு கேட்டான். அந்த குரலில் ஏதோ தொய்வு இருப்பதை உணர்ந்த ராகுல், மேற்கொண்டு எதுவும் பேசாது, அறைக் கதவைத் திறந்து கவிந்தை உள்ளே வருமாறு சைகையால் காண்பித்து கதவை தாழிட்டு கொண்டான். "சேர்..." பவ்வியமாக ராகுல் பேச ஆரம்பிக்க, ஐந்து நிமிடங்களில் நடந்த சம்பவங்களை விளக்கமாக கவிந்த் கூறினான். அவன் முகத்தில் சோக ரேகைகள் பரவி இருந்தன. சமாதானம் கூறவா, இல்லை தானும் சேர்ந்து அதிர்ச்சியில் மூழ்கி கிடக்கவா என ராகுலால் முடிவெடுக்க முடியவில்லை. அடுத்ததாக கவிந்த் சொன்ன விஷயம் எந்த குழப்பங்களும் இல்லாமல் ராகுலை அதிர்ச்சியில் உறைய வைத்து விட்டது.

(தொடரும்...)

## மூளைக்கு வேலை




1

அடுத்து வரவேண்டிய எண் யாது?

# கொள்ளை அழகு தரும்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. சூழலைச் சிதைக்காத வகையில் பெருமெடுப்பில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாத வரையிலும் இந்த ஒரு சிலரால் அந்தக் கண்டல் காட்டு உயிரினச் சூழலுக்குப் பாதகம் நேராது என்றே எண்ணத் தோன்றுகிறது.

### கண்டல்களின் அழிப்பு

கடற்கரையை அண்மித்து அமைகின்ற கண்டல் காடுகளை மனிதர்கள் தமது தொழில் நடவடிக்கைகளுக்காக அழிப்பதே கண்டல் காடுகளின் அழிவில் அதிக தாக்கம் செலுத்துகின்றது. மண்டைதீவுக் கண்டல்காட்டுப் பகுதி பெரும் தொழில் நடவடிக்கைப் பகுதியாக இல்லை. அது அவ்வாறு அமையாத வரையிலும், மனிதர்களின் ஆதிக்கம் அங்கு அதிகரிக்காத வரையிலும் அதன் வளர்ச்சி துரிதப்படும். அந்தப் பகுதிக்கு அண்மையாகத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒருசிலர் கண்டல் காடுகளில் விறகு சேகரித்துச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. கண்டல் தாவரங்கள் நின்று எரியக் கூடிய நல்ல விறகு என்பதும் பலரது கருத்து. அங்கு தாவரங்களை அழித்து விறகு சேகரிக்கும் நிலை தோன்றாவில்லை. காய்ந்த விறகுகளைச் சேகரிக்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இருப்பினும் இது விடயத்தில் சற்றுக் கரிசனை தேவை. கணவாய் பிடிப்பதற்குக் குழை வைக்கின்ற தொழிலாளர்கள் கண்டல் தாவரங்களே அதற்குச் சிறந்தது என்று அவற்றை வெட்டிச் செல்கின்ற தன்மை தீவுப் பகுதியில் ஆங்காங்கே காணப்பட்டாலும் மண்டைதீவுக் கண்ணத் தாவரங்களுக்கு அந்த நிலை நேரவில்லை. இவ்வாறாகக் கணிசமான மனிதத் தாக்கங்களில் இருந்து தப்பித்து வளர்ந்து வருகின்ற இந்தத் தாவரச் சூழல் தொகுதியை வளர்த்தெடுப்பது குறித்துச் சூழலியலாளர்களும், இயற்கை ஆர்வலர்களும், அரசும் செயற்றிட்டங்களை இப்போதிலிருந்தே வகுப்பது சிறந்தது.

# ரஷ்யாவுக்கு ஏன் கொலை வெறி?

ரஷ்யாவின் எதிர்க் கட்சித் தலைவர் அலெக்ஸே நவால்னி. ரஷ்யா அதிபர் விளாடி மிர் புடினைக் கடுமையாக விமர்சிக்கின் றவர்களில் முதலிடத்தில் இருப்பவர். கடந்த சில நாள்களாக அவரைப் பற்றிய பேச்சு களே பன்னாட்டளவில் அதி கரித்திருக்கின்றன.

அலெக்ஸே நவால்னி உடல் நிலை பாதிக்கப் பட்டு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்டுள் ளார். அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அவர்



கோமா நிலைக்குச் சென்றுவிட்டார் என்றும் மருத்துவத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யா வின் டாம்ஸ்க் நகரி லிருந்து தலைநகர் மொஸ்கோவுக்கு விமா னத்தில் சென்றுகொண்டி ருந்தபோது அவர் திடீ ரென மயங்கியதால் அந்த விமானம் அவசரமாகச் சைபீரியாவின் ஓம்ஸ்க் நகரில் தரையிறக்கப்பட்டு அவர் அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் சுயநினைவு இழந்த நிலையில் இருக்கிறார் அலெக்ஸே. டாம்ஸ்க் விமான நிலையத்தில் அலக்ஸே தேநீர் அருந்துவதைப் போன்ற ஒளிப்படம் ஒன்று சமூக ஊடகத்தில் பரவி வருகிறது. அலெக்ஸின் உடல்நிலை குறித்த விவரங்களை வழங்கு வதற்கு மருத்துவமனை நிர்வாகம் மறுத்து வருவதாகத் தெரிவித்து அவரை அவசர கால விமானம் மூலம் ஜேர்மனிக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகிறது.

**ஜேர்மனிக்கு அழைத்துச் செல்வதில் சிக்கல்**

அலெக்ஸேக்கு விசம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு வதைத் தொடர்ந்து, அவரைச் சைபீரியாவி லிருந்து ஜேர்மனியில் உள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது என்று ரஷ்ய மருத்துவர்கள் தெரி வித்தனர். சைபீரியாவில் அலெக்ஸேக்குச் சிகிச்சை அளித்து வரும் மருத்து வக் குழுவினரின் தலைமை மருத்துவர், அலெக்க்ஸேயை வேறொரு இடத்திற்கு அழைத்துச் செல்லும் நிலையில் அவரது உடல்நிலை இல்லை என்றும் அதில் சட்ட ரீதியிலான சிக்கல்கள் உள்ளன என்றும் தெரி வித்தார். ஆனால், சைபீரியப் பொலி ஸார், அதிகாரிகள், மருத்துவர்கள் அனைவரும் அலெக்ஸே யைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டவில்லை என்று தெரிவித்து அலெக் ஸேயை ஜேர்மனிக்கு அழைத்து வந்து சிகிச்சை அளிப்பதற்காகத் தனி விமானத்தை அந்த நாட்டை சேர்ந்த செயற் பாட்டாளர்கள் அனுப்பி அவரைச் சைபீரியா விலிருந்து ஜேர்மனிக்குக் கொண்டு சென்றனர்.

இதற்கிடையில் சைபீரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவரது உடமைகளைப் பொலி ஸார் கைப்பற்றி, அலெக்ஸேயின் மனைவியைக்கூட அவரை நெருங்க விடவில்லை என்றும் குற்றச் சாட்டுகள்.

**அலக்ஸே நவால்னி அடிக்கடி கைது**

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸே நவால்னி அடிக்கடி கைது செய்யப்படுகின்ற ஒரு நபராக ரஷ்யாவில் இருந்திருக்கிறார். அவரது கைதுகளின் பின்னணியில் அரசியல் உள்நோக்கங் கள் இருக்கின்றன என்று கூறி ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் பல தடவைகள் கண்டனம் தெரிவித்துள்ளது.

அவருக்கு நஞ்சு வழங்கப்பட்ட விடயத்தில் இதனாலேயே புடின் தலைமையிலான அரசு மீது சந்தேகக் கண்கள் அதிகரித்தன. ஆனாலும் அவரைச் சுற்றிய பல வட்டாரங்களிலும்கூட அவருக்கு எதிரிகள்



இருக்கிறார்கள் என்று புடின் தரப்பிலிருந்து கருத்துகள் வந்த வண்ணமுள்ளன. 2012 முதல் 2014 வரை ஏழு முறை அலக்ஸே கைது செய்யப்பட்டார். அதன் பிறகும் அவர் பல முறை கைது செய்யப்பட்டார். ரஷ்யாவை விட்டு வெளி யேற நவால்னிக்கு அனு மதி மறுத்திருந்தது ரஷ்ய அரசு. புடினின் அரசு மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, 2011-12 ஆண்டு காலகட்டத்தில் மொஸ்கோவில் ஆர்ப்பாட் டங்களுக்குத் தலைமை தாங்கிய அலெக்ஸே நவால்னியின் பணி ஓய்வு வயதை அதிகரித்தி ருந்தது. அத்தோடு அதிபர் பதவிக்குப் போட்டியிடமுடியாத படியும் அலக்ஸே தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

**விசம் வழங்கியதற்கு ஆதாரம்**

அலெக்ஸே நவால் னிக்கு, நோவிசோக் எனப்படும் நச்சு இர சாயனம் கொடுக்கப்பட் டுள்ளது என்று ஜேர்மனி தெரிவிக்கிறது. ரஷ்யா வில் இருந்து ஜேர்மனிக் குக் கொண்டு செல்லப்பட் டுச் சிகிச்சை அளிக்கப் பட்டு வரும் அவருக்கு விசம் கொடுக்கப்பட்டது, நச்சுயியல் பரிசோதனை முடிவில் நிரூபிக்கப்பட் டுள்ளது என்று ஜேர்மனி அரசு தெரிவித்திருப்பது ரஷ்ய அரசியலில் பர பரப்பை ஏற்படுத்தி யுள்ளது. உலகளவிலும் அது கவனமீர்த்துள்ளது.


ரஷ்ய அதிபர் புடினின் உத்தரவின்பேரிலேயே அவருக்கு விசம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என நவால்னி யின் ஆதரவாளர்கள் கூறி வருவதால் அங்கு பர பரப்பு ஏற்பட்டுள்ளது. தன் மீதான குற்றச்சாட்டு களை ரஷ்ய அதிபர் மாளிகை மறுக்கிறது. தங்களுடைய மருத்துவ ஆய்வில் நவால்னிக்கு நோவிசோக் ரக ரசாயன விசம் கொடுக்கப்பட்டது நிருபணமானதால், அது குறித்து ரஷ்யா விளக்க வேண்டும் என்று ஜேர் மனி வலியுறுத்தியுள்ளது. நவால்னியின் மருத்துவ பரிசோதனை முடிவுகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ அமைப்பிடம் தெரிவிக்கப் படும் என்றும் ஜேர்மனி அரசு தெரிவித்துள்ளது.

**கிம் பாணியில் புடின்?**

தனது நாட்டின் எதிர்க் கட்சித் தலைவரை விசம் வைத்துக் கொல்லப் புடின் முயன்றிருக்கிறார் என்று புடின் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளதோடு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னோடு இணைத்துப் பேசப்படும் நபராகியும் இருக்கிறார் புடின்.

கிம் ஜோங் - உன்னின் ஒன்று விட்ட சகோதரர் கிம் ஜோங்-நாம் மீது மலேசியா விமான நிலையத்தில் வைத்து நச்சு இரசாயனம் தெளிக்கப்பட்டு அவர் கொல்லப்பட்டிருந்த விடயத்தில் கிம் ஜோங் உன் கொடூர மனிதாரகச் செயற்பட்டிருந்ததைப் போல புடினும் செயற்பட்டுள்ளார் என்று பரவலாகப் புடின் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன. கிம் ஜோங்-நாம் தன்னுடைய விமானத்துக்காகக் காத்திருந்த வேளையில், அதிக விசத்தன்மையுடைய விஎக்ஸ் என்கிற நரம்பு இரசாயனத்தை அவருடைய முகத்தில் பூசியதில் அவர் இறந்தார். 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி நடந்த சம்பவம் இது.

> எதிர்க் கட்சித் தலைவரை விசம் வைத்துக் கொல்லப் புடின் முயன்றிருக்கிறார் என்று புடின் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளதோடு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னோடு இணைத்துப் பேசப்படும் நபராகியும் இருக்கிறார் புடின்.



மருத்துவர் சி.யமுனாநந்தா

# பிரபஞ்சத்தைத் தேடும் மனிதம்

மெஞ்ஞானம் என்பதன் ஒரு பகுதியே விஞ்ஞானம். சடத்திற்கும் உயிருக்கும் உள்ள வேறுபாட்டில் மனிதன் உயர்வடைவதற்குக் காரணம் ஞானம்.

ஞானம் என்பது மனிதனின் ஐம்புலன்களால் அறியப்படுவதும் அவற்றின் உய்த்துணர்வும் ஆகும். மெய்ஞானம் என்பது மனிதனின் உடம்பு முதல் பிரபஞ்சம் வரை உள்ள மனிதனின் புரிதல் ஆகும். ஆன்மா அகக்கருவிகள் நான்கைப்பற்றி நின்று உலகப்பொருளைச் சிறப்பாக உணர்ந்து கொள்கின்றது. அவை மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன அந்த நான்கும். உயிருக்கு இயல்பாக உள்ளவை மூன்று அவையாவன: ஒன்றினை அறிதல் (ஞானாசக்தி), அதனை விரும்புதல் (இச்சா சக்தி), அதற்காக முயலுதல் (கிரியாசக்தி).

மனிதனின் சித்தத்தில் ஞானத்தைத் தேடுபவர்கள் சித்தர்கள், ஞானிகள் ஆவார்கள். பண்டைய காலத்தில் இத்தகைய சிந்தனைகளை தவஞானிகள் மனிதர்களுக்கு அருளினர். ஆதிகாலத்தில் பிரபஞ்சத்தை உணரும் வழிகளாகத் தவமிருத்தல், தியானித்தல், வேள்வி செய்தல், மந்திரம் ஓதுதல், பறை ஒலி பண்ணுடனான பாடல்கள் விளக்கின. அட்டதிக்குகளுக்கு எனச் சிறப்பான பண்ணுடனான தேவாரங்கள், வேத மந்திர ஓசைகள் அமைந்திருந்தன. பிரபஞ்சத்தின் அட்டதிசைகளும் வெவ்வேறு பண்களுக்கு அமைந்திருந்தன. அந்த அந்த நிலைகளுக்குரிய அதிர்வுகளுக்குரிய மந்திரங்களும் உச்சரிக்கப்பட்டன. காலம், சடப்பொருள் அது தானே செயற்படாது. இறைவனின் சக்தியாலேயே தனது காரியத்தைச் செய்யும். இவற்றை விஞ்ஞானமும் உறுதிப்படுத்துகின்றது. அதாவது அது பிரபஞ்சத்தில் பல்வேறு அகிலங்கள் வெவ்வேறு அதிர்வுகளில் இயங்குகின்றது. அவ்வதிர்வுகளுக்கூடாகவே அவ்வவ் அகிலங்களை நோக்கலாம்.

## சைவசமய உற்சவங்களில் தேவர்கள் அழைக்கப்படுவது யாகபூசையில்

ஆகுதியில் ஓமம் வளர்க்கும் போதும், தீப ஆராதனையின் போதும், மந்திர, தேவார பாராயணத்தின் போதும் நாதஸ்வர சுரங்களின் போதும் ஆகும். இவை பூலோகத்தவர்கள் தேவலோகத்தவருடன் இணைக்கும் ஆன்மீக உள்ளுணர்வுக்கு உட்பட்ட வழிபாடாகும். இதன்போது ஆன்மாவினது குண்டலினிசக்தி மணிபூரகம் வழியாக இறையுடன் ஒன்றிக்கும். இது பூமியில் ஆன்மாவின் பிரபஞ்சத் தேடலின் தவவழிபாடாகும்.

## பல பூமிகள்

வேதங்களில் கோடானு கோடி அண்டவெளிகள் உள்ளன என்றும், அவற்றில் பலபல உலகங்கள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது. சமஸ்கிருதத்தில் மனனம் செய்யப்பட்டு வந்த வேதத்தின் உட்பொருளே திருமூல நாயனார் அருளிய திருமந்திரம் ஆகும்.

*'பெறுபகிரண்டம் பேதித்த அண்டம்*
*எறிகடல் ஏழின் மணல் அளவாகப்*
*பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்*
*செறியும் அண்டாசனத் தேவர் பிரானே.'*

இது திருமந்திரத்தின் - **2297**ஆவது பாடல்.

அண்டவெளியில் அகிலத்தின் அமைவு பற்றிய இயற்பியல் ஆய்வுகள் பல கருதுகோள்களை முன் வைத்து உள்ளது. பௌதீகக் கணியங்கள் ஊடு அவதானித்து நிறுவக்கூடியவை. விஞ்ஞானத்தில் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் பௌதீகக் கணியங்களின் சார்புகளின் எல்லைப் பெறுமானங்களுக்கு அப்பால் விஞ்ஞானத்தின் எல்லை முடிவுறக் கருதுகோள்கள் உருவாகின்றன. இயற்பியலின் விஞ்ஞானக் கருதுகோள் தத்துவங்களும் இறையியலின் இயற்பியல் கருதுகோள் தத்துவங்களும் மனிதனின் சித்தத்தில் அவனது தேடலுக்கு விடைகூற முனைகின்றன. இவ்வாறு அண்டங்கள் அடங்கிய பிரபஞ்சங்கள் எட்டுத்திக்கிலும் உள்ளன.

இப்பிரபஞ்சங்களை வேதம், பிரமன் என்றும் ஹிரண்யகர்பன் என்றும் கூறுகின்றது. மேலும் முழுமுதல் இறைவனின் கர்ப்பத்தில் இவை உள்ளன எனவும் கூறப்படுகின்றது. இவை கணக்கிட முடியாத அளவில் உள்ளன. இவை எப்போது ஆரம்பித்தன, எப்போது முடிவடையும் எனக் காலத்தினால் நியதி இட முடியாது. இவை ஆதியும், அந்தமும் இல்லாதவை. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்தொழில்களும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டு உள்ளன. இதனை இன்றைய இயற்பியல் கருதுகோள்களின் உட்கிடக்கைகளிலும் அறியலாம்.

## சிதம்பர இரகசியம்

இயற்பியல் கருதுகோள்களே சைவசித்தாந்தத்தில் சிதம்பர இரகசியமாகக் கருதப்படுகின்றன. சிதம்பர நடராஜரின் ஆனந்தக் கூத்து அகில இயக்கத்தை விபரிப்பதாகவும், அகிலவெளி மாதிரியாகவும் உள்ளது. இன்றைய விஞ்ஞானக் கருதுகோள்கள் அகிலத்தை 5 அவத்தைகளாகப் பிரிக்கின்றன.

அவை:

1. ஆரம்ப அவத்தை - **Primordial Era**
2. தற்போதைய அவத்தை - **Still ferrous Era**
3. அழியும் அவத்தை - **Degerate Era**
4. கரும்துளைஅவத்தை - **Black hole Era**
5. இருள் அவத்தை - **Dark Era**

இவ் ஐந்து அவத்தைகளும் நடராஜப் பெருமானின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பனவற்றுக்கு முறையே உதாரணமாக அமைந்துள்ளன. அதுவே ஆத்மாவின் நடனமாகவும் உள்ளது. சிவலிங்க வடிவமும் அகிலத்தின் வடிவாக உள்ளது. அதுவே ஆன்மா மணிபூரகத்தில் சிவனுடன் சேரும் அமைவாகவும் உள்ளது.

## இறைவனுடையது கால் பங்கு மாத்திரம்



சிதம்பரசக்கரம் அகிலத்தை இரு பரிமாணங்களில் விளக்குகின்றது. மேலும் சிதம்பரசக்கர அமைப்பிலேயே ஆன்மா உடலில் ஐந்து நிலைகளில் பக்குவப்படுகின்றது. அகிலமும் எல்லா உயிர்களும் இறையாட்டம் ஆடல் என்பதனை உணர்த்தும் திருமந்திரப் பாடல்.

*'மெய் வாய் கண் மூக்கு செவி என்னும்*
*மெய் தோற்றத்து*
*அவ்வாய அந்தக் கரணம் அகிலமும்*
*எல்லா உயிரும் இறையாட்ட ஆடலால்*
*கைவாய் இலாநிறை எங்கும் மெய்கண்டத்தே'*

திருமந்திரம் **(2586)**

வேதத்தில் 'புருஷ சூக்தம் கூறுவது யாதெனில் இறைவனே படைத்து வியாபித்து இருந்தாலும் தோன்றியவை எல்லாம் அவருடைய கால்பங்கு மட்டுமே' அவரது முக்கால் பங்கு அழிவற்றதான விண்ணில் இருக்கின்றது. இதனைத் திருமந்திரத்தில் காணலாம்.

*'ஆகாசமாம் உடல் அங்கார் முயலகன்*
*4*
*ஏகாசமாம் திசை எட்டும் திருக்கைகள்*
*மோகாய முக்கண்கள் மூன்று ஒளிதானாக*
*மாகாய மன்றுள் நிடம் செய்கின்றானே'*

திருமந்திரம் **2774**

பரம்பொருளின் முக்கால் பங்கு மேலே விளங்குகின்றது. எஞ்சிய கால் பங்கு மீண்டும் பிரபஞ்சமாகத் தோன்றியது என புருஷசூக்தம் 3ஆம், 4ஆம் சுலோகங்கள் கூறுகின்றன. பிரபஞ்சத்தின் வடிவை இன்றைய விஞ்ஞானம் **Topological Model** வெவ்வேறு பரிமாண மாதிரிகளில் ஆராய்கின்றது.

*'வெளியை அறிந்து வெளியின் நடுவே*
*ஒளியை அறியின் உளி முறியாமே*
*தெளிவை அறிந்து செழுநந்தி யாலே*
*வெளியை அறிந்தனன் மேல் அறியேனே.'*

திருமந்திரம் - **839**

இதுவரை காலமும் விஞ்ஞானத்தில் அகிலத்தின் எல்லையை ஒளியலைகளின் பண்பினை வைத்தே வரையறை செய்தனர். இதற்கு அல்பேட் ஜன்ஸ்டைனின் சார்ப்புக் கோட்பாடுகள் பயன்பட்டன. வில்லைகள் ஊடான காட்சிகள் ஒளியியில் மாயத் தோற்றத்தில் **(Optical illusion)** மனிதனை வைத்து இருந்தது.

தற்போது ஒளியலைகளுக்குச் சமானமாக ஈர்ப்பு அலைகள் **(Gravitational Quantum)** கண்டறியப்பட்டுள்ளன. இவ்வீர்ப்பு அலைகளின் துணையுடன் பலமில்லியன் கணக்கான நட்சத்திரத் தொகுதிகள் **(Galaxies)** மற்றும் கருந்துளை வான் பொருள்கள் (சூரிய ஆதித்தன்) ஞரயளயசஓ ஆராய்ந்தபோது அகிலத்தின் விரிவில் கருஞ்சக்திகளின் பங்கும், அகிலத்தின் பரிமாணம் ஒடுங்குவதும் **(wrap up)** அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது அகிலத்தினை வரையறை செய்ய ஈர்ப்பு அலைகளின் பௌதீகக் கணியமும் அதன் எல்லைவரை பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. இது மிக அண்மைக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பிரதிபலனாகும்.

## கருந்துளைகள் கருஞ்சக்திக் கோட்பாடுகள்

கருந்துளைகள், கருஞ்சக்திக் கோட்பாடுகள் அகிலத்தின் அமைப்பை வரையறுப்பதில் தனது எல்லைவரை விளக்கத்தினைக் கொடுக்கின்றன. ஒளியலைகள் மூலமாக முப்பரிமாணத்தில் அகிலம் விரிவடைவது கருதுகோளாக்கப்பட்டது. போல் ஈர்ப்பு அலைமாயத் தோற்றத்தில் **(Gravitational illusion)** அகிலம் தளவடிவில் அமையலாம். இதனை எளிதில் விளக்குவதாயின் கொதிக்கும் எண்ணெய் தாழியில் பொரியும் 'பப்படங்கள்' போன்றதே அண்டவெளியில் காணப்படும் அகிலங்கள். அகிலத்தின் வடிவு என்பது பௌதீகக் கணிய மாயை ஆகும் ஆயின் காலம் எனும் கணியத்தின் வடிவம் அகிலத்தின் வடிவின் சார்பானதே ஆகும்.

அகிலத்தின் சார்பிற்கு அப்பால் காலம் என்பது நிலையானது ஆகும். அதாவது எமது சூரிய மண்டலத்துக்கு வெகுதொலைவில் உள்ள யாதேனும் கருந்துளை வான்பொருளில் **(Quasar)** ஈர்ப்பலை சார்பாக எமது சூரியமண்டலத்தில் உள்ள அனைத்துப் புள்ளிகளும் ஒரே பெறுமதியில் இருக்கும். அவ் வான்பொருளின் சார்புப் பௌதீகக் கணியத்தில் எமது சூரியமண்டலத்தின் காலம் எப்பொழுதும் மாறாது காணப்படும். இதுவே காலத்தின் ஒடுக்கத்திற்கான விளக்கமாகும். தட்டையான பப்படம் கொதிக்கும் எண்ணெயில் வீங்கிப் பருமனடைவதுபோல் அகிலத்தின் விரிவும் வெவ்வேறு பௌதீகக் கணியங்களில் மாற்றமடையும். அதேபோல் அகிலத்தின் வடிவும் அவ்வவ் பௌதீக கணியங்களின் சார்பிலேயே கருதப்படும்.

## பூமியின் இயக்கமும் நாத அதிர்வும்

அகிலத்தின் இயக்கங்கள் நாத அதிர்வுகள் போல் அமையும். இதனை நடராஜப்பெருமானின் உடுக்கை ஒலியின் நாதமாக சைவசித்தாந்தம் விளக்குகின்றது. இதுகாறும் ஒளியலைகளின் சார்பிலேயே விரிவும், காலம் வெளித் தத்துவமும் அமைந்து இருந்தது. அண்மைய கண்டுபிடிப்புகள் குறிப்பாக ஈர்ப்பு அலைகள் மற்றும் கரும்துளைகள் தொடர்பான அவதானிப்புகள் காலம் வெளி ஒடுங்கும் புள்ளிகளை எடுத்துக் காட்டியுள்ளது.

இவை அகிலம் தொடர்பான சார்புநிலைகளில் புதிய கோட் பாடுகளை உருவாக்க உறுதுணையாக உள்ளது. காலமும் வெளியும் சில ஆள்கூறுகளில் ஒரே நேர்கோட்டில் அமையலாம். அவ்வாள்கூற்றுக் கணிப்பில் வெளிமாறாது இருக்கலாம். இதனையே சைவசமயத்தில் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதி என மணிவாசகர் குறிப்பிடுகிறார்.

## சக்கரவடிவப் பிரபஞ்சம்

வேதத்தில் பிரபஞ்சத்திற்குச் சக்கர வடிவ அமைப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. உபநிஷ தத்தில் இந்தப்

(20ஆம் பக்கம் பார்சுக்க)

● பார்த்தீபன், கொட்டடி.

# வானுக்குள் அமர்ந்திருந்த பேய்!




2 கதை

அது 2001ஆம் ஆண்டு. கொழும்பில் நிரந்தரமாக வசித்த நான் கையேஸ் வான் ஒன்றை வைத்து வாழ்வாதாரம் நடத்திய காலம். எனது வானில் கதிர்காமம், நுவரெலியா, வவுனியா என நீண்ட தூரம் பலரும் வாடகைக்கு அமர்த்துவதன் நிமித்தம் செல்வதுண்டு. ஏ9 வீதி பூட்டப்பட்டிருந்ததால் யாழ்ப்பாணம் செல்ல முடிவதில்லை. வவுனியா வரையே செல்ல அனுமதி இருந்தது. பாஸ் அனுமதி பெற்று பயணம் செய்ய வேண்டிய நிலை இருந்ததால் வவுனியாவுக்குக்கூட நான் கண்டபடி செல்வதில்லை.

ஒரு நாள் மதிய வேளையை அண்டி ஓர் ஓட்டம் வவுனியாவுக்கு வந்தது. இறந்த ஒருதுவரது சடலத்தை வுனியாவுக்கு ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. சவப் பெட்டியுடன் சடலத்தை வானின் பின்பக்கமிருந்த இரண்டு இருக்கைகளையும் கழற்றிவிட்டு உள்ளே வைத்தேன். முன்பாக இருந்த இருக்கைகளில் அவர்களது உறவுக்காரர்கள் சிலரை ஏற்றிக் கொண்டு வவுனியாவுக்குப் புறப்பட்டேன். இரவு பத்து மணியளவில் வவுனியாவை அடைந்து உரிய இடத்திரல் அவர்களையும், சவப்பெட்டியையும் இறக்கிவிட்டேன்.

திரும்புப்போது வவுனியாவிலிருந்த கடை ஒன்றில் இரவு உணவு உண்டேன். இரவு 11 மணியளவில் கொழும்புக்குப் புறப்பட்டேன். நான் மட்டுமே வானில் இருப்பதால் வானின் எல்லாக் கதவுகளையும் பூட்டிவிட்டு வானை ஆறுதலாக ஓடிக் கொண்டிருந்தேன். மதவாச்சி நகரத்தைத் தாண்டி வான் போய்க் கொண்டிருந்தது. வானின் பின் பகுதியைச் சாரதிகள் பார்க்கும்படியாக முன்பக்கம் பூட்டப்பட்டிருந்த கண்ணாடியில் பார்த்தபோது, பின்னாலிருந்த இருக்கை யில் வெள்ளைச் சேர்ட் போட்ட தாடி வளர்த்த கறுப்பு நிற மனிதர் ஒருவர் இருப்பது தெரிந் தது. அவர் இருக்கைகளின் இரண்டு பக்கங்களிலும் தனது கைகளை ஊன்றியவாறு இருந்தார். நான் பயந்து விட்டேன். உடல் நடுங்கியது. வியர்வை வர ஆரம்பித்தது. வாகனம் செலுத்திக் கொண்டிருந்த நான் தடுமாறிப் போய்விடவில்லை. என்னைச் சுதாகரித்துக் கொண்டேன்.

> இந்த உலகம் பற்றியும் அதன் மர்மங்கள் பற்றியும் கௌதம புத்தர் குறிப்பிடும்போது, கடவுள் அல்லது பேய், ஆவி என்பன பற்றி அதிகம் ஆராயப் போக வேண்டாம். அது மனித வாழ்க்கையின் நிம்மதியைக் கெடுத்துவிடும் என்கிறார்.

நம்பாவ சந்தி தாண்டி கல்குளம் வீதியில் வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தேன். அந்த உருவத்தையும் இடையிடையே கவனித்தேன். அது என்னைப் பார்த்துக்கொண்டிருந்ததே தவிர என்னை நோக்கி வரவில்லை. என் கழுத்தில் அது பிடிக்கக்கூடும் என்ற பயம் எனக்கிருந்தது. வானை மிக வேகமாகச் செலுத்தினேன். நம் பாவ வீதியும் அனுராதபுர வீதியும் சந்திப்பதற்கு முன்னதாக ஒரு சிறிய கோவில் இருந்தது. பயணங்களின்போது சிலவேளைகளில் அங்கு வானைச் சிறிது நேரம் தரித்து நின்று சென்றிருக்கிறேன்.

நான் கண்ணாடியில் தெரிந்த அந்த உருவத்தை இடையிடையே பார்த்தபடி, வீதியையும் அவதானித்துக் கொண்டு வாகனத்தை ஓட்டினேன். வேறு மனிதர்களோ, வாகனங்களோ அந்த நேரம் தென்படவில்லை. வேகமாகக் கோவில் பகுதிக்குள் வானைச் செலுத்தி நிறுத்திவிட்டு இறங்கி ஓடிப்போய் அந்தச் சிறிய கோவிலுக்குள் படுத்துவிட்டேன். மறு நாள் எழுந்து பார்த்தபோது வானுக்குள் எதுவும் தெரியவில்லை. வானை எடுத்துக்கொண்டு கொழும்புக்குப் போனேன். எனக்கு அந்தப் பயணத்தை ஒழுங்கு செய்து தந்தவரைச் சந்தித்து இறந்தவர் எப்படியான தோற்றத்தை உடையவர் என்று விசாரித்தேன். இறந்தவர் குறித்து அவர் கூறிய அங்க அடையாளங்களும் முதல் நாள் இரவு வானில் நான் பார்த்த உருவமும் ஒன்றாக இருப்பதை உணர்ந்தேன். அன்று வானில் என்னுடன் பயணம் செய்தது பேய் என்பதைத் திடமாக உணர்கிறேன். இப்போதும் அதை நினைத்தால் பயமாக இருக்கிறது. ■

யாழ் முற்றம்
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மீண்டும் விரைவில் யாழ் நகரில்..!
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை



பனைசார் உற்பத்திப் பொருட்கள் · தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள் · இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள் · இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள் · மட்பாண்டம் · பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள் · கடல் உணவுப் பொருட்கள்
இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் · சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)
உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

# பிரபஞ்சத்தைத் தேடும்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபஞ்சம் பிரம்மச்சக்கரமாக உள்ளதாக கூறப்படுகின்றது. இச்சக்கரத்தில் கர்மம் என்ற பாசக்கயிற்றில் கட்டப்பட்டு ஆன்மா சுழன்று வருகின்றது. மீண்டும் மீண்டும் சுழலுகையில் பிரம்ம ஸ்வரூபத்தைப் புரிந்துகொண்டு இச்சக்கரத்தில் சுழலச் செய்யும் பிறவிப்பிணியில் இருந்து முடிவில் விடுபடுகின்றான். அதாவது சிவசித்தன் ஆகின்றான்.

*'அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்...'*
திருமந்திரம் 2806

சுழலும் சக்கரவடிவுடைய பிரபஞ்சம் ஆதியும் அந்தமும் இல்லாத அமைப்பாகும். சக்கர அமைப்பில் எங்கு தோன்றி எங்கு முடியும் என்று கூற முடியாது இருக்கும். இவ்வாறு கணக்கிட முடியாத சக்கரங்கள் இருக்கும். இவை ஒன்றை அடுத்து ஒன்றும், ஒன்றின்மேல் ஒன்றுமாக அமையும். இவற்றின் அதிர்வுகள், பண்கள் வெவ்வேறானவை. ஆலய உற்சவங்களில் அட்டதிக்குப் பாலகர்களுக்கான மந்திரம், தேவாரங்களுக்குரிய பண்கள் இதனை எமக்கு மெய்யுணர்வில் உணர்த்துகின்றன.

## முக்கால் பங்களவில் தோன்றாதவை

காலநேமி என்ற உபநிஷச் சொல்லும் பிரபஞ்சத்தின் தோற்றம் என்றும் நிலையில் கால் பங்கு நிலையில் உள்ளன என்றும் முக்கால் பங்கு என்றும் தோன்றாமை எனக் குறிக்கின்றது. இந்த அமைப்பில் உலகங்கள் நுண்ணணுத் துகழ்களாகக் காணப்படும். வெளிப்பாடு இல்லாத முக்கால் பகுதியில் சுற்றிவரும் தோற்றம் இருக்கும். கால் பகுதியில் தெரியாத நிலையில் இருந்தும் தெரி நிலைக்கு மாறித் தோற்றம் அல்லது படைப்பு என் றும் பகுதிக்குள் விரையும். இதனை இன்றைய விஞ்ஞானத்தில் மீநுண்மின் அணுக்களின் பௌதீகம் (Quantum Physics) அகிலத்தின் சக்தித் துணிக்கைகளையும் சக்தியற்ற துணிக்கைகளையும் ஆராய்கின்றது. இது திருமந்திரத்தில் பிரணவப் பொருளாக ஓம் எனும் ஒலியில் குறிக்கப்படுகின்றது. மேலும் நாதவிந்து மண்டலமே அகிலமாகும்.

*'நாதத்தில் விந்துவும் நாத விந்துகளில்*
*தீதற்று அகம் வந்த சிவசக்தி என்னவே*
*பேதித்து ஞானங்கிரியை பிறத்தலால்*
*வாதித்து இச்சையில் வந்தெழும் விந்துவே.'*
திருமந்திரம் 382.

பரம்பொருளின் சர்வ வியாபகம் உடலாய், உயிராக, அது உணரும் உணர்வாக உள் ஒளிரும் தீச்சுடராய் அண்டம் முழுவதுமாய் அருளுதலைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

*'ஊனாய் உயிராய் உணர் அங்கியாய் முன்னம்*
*சேணாய் வான் ஓங்கித் திரு உருவாய் அண்டத்*
*தாணுவம் ஞாயிறும் தண்மதியுங் கடந்து*
*ஆள்முழுது அண்டமும் ஆகி நின்றானே.'*
திருமந்திரம் 374.

சிவநடனமான நடராஜர் உருவ அமைப்பு நாட்டியத்திலும், சிற்பக்கலையிலும் சில அளவுப் பிரமாணங்களை உடையது. இது ஒரு வட்டத்தினுள் இரு முக்கோணங்களை மேலும் கீழாக அடக்கிய அமைப்பாக உள்ளது. இதுவே சிதம்பரசக்கரம் ஆகும். பிரபஞ்சம் பற்றிய சிதம்பர இரகசியமும் இதுவே ஆகும்.

நடராஜரின் மேல் இரண்டு கைகளில் ஒன்றில் உடுக்கையும், மற்றொன்றில் அக்கினியும் உள்ளது. இவ்விரு கைகளையும் நடராஜ திருவுருவின் நாபியுடன் இணைத்துக் கோடுகளை நீட்டினால் அவை சக்கரத்தை 90 பாகை இல் நான்கு சமகூறுகளாகப் பிரிக்கும். வேதத்தில் கூறப்படும் பிரபஞ்சத்தின் அமைப்பு இதுவே ஆகும்.

வலதுகை உடுக்கையிலிருந்து இடதுகை அக்கினிவரை இருப்பது தோன்றும் பிரபஞ்சமாகும். அக்கினியில் இருந்து இடக்கைவரை வெளிப்படாத பிரபஞ்சமாகும். அதன் மையப்பகுதி அந்தக்காரம் எனும் ஆதி இருட்டு. இது முயலகன் எனும் அசுரனை மிதித்து அடக்குவதைக் காட்டப்படுகின்றது.

*'பரமாண் டத்து ஊடே பராசக்தி பாதம்*
*பரமாண் டத்து ஊடே படர் ஒளி ரூடவ்சன்*
*பரமாண் டத்து ஊடே படர் தரு நாதம்*
*பரமாண் டத்து ஊடே பரன் நடமாடும்.'*
திருமந்திரம் 2734

நடராஜர் தன் இடதுகாலை வீசி உயர்த்திய வீச்சு காட்டுப்பகுதி முதல்

தோற்றத்திற்குத் தயராகிற இன்னும் உருவம் கொள்ளாது பிரபஞ்சத் துகள்கள் இடித்தும், வெடித்தும் அழிவின்மூலம் ஆக்கம் நோக்கிப் பாயும் பிரபஞ்சப் பகுதியைக் குறிக்கும். அப்பகுதியில் மற்ற இரு கைகளின் முத்திரைகளும் விசை எதிர் விசைத் தத்துவங்களாகச் சிவம் - பார்வதியாகக் காட்டுகின்றது. உடுக்கை அடிக்கும் கைப்பகுதியை நெருங்க நெருங்க ஊர்த்துவ முகமான மேல் நோக்கிய கை செல்லும் பாதையைக் காட்டி ஓம்கார நாதத்திலிருந்து உலகங்கள் பிறக்கின்றன.

## சிவனுக்கு வேலை இல்லை

உடுக்கை முதல் மறுகையில் அக்கினிவரை இருக்கும் பகுதி சக்கரத்தின் கால்பகுதியாகும். இதுவே புருஷசூக்தம் என்றும் மீண்டும் மீண்டும் தோன்றி வரும் கால்பங்கு பிரபஞ்சம். உடுக்கைப்பகுதியில் படைப்புக் கடவுளான நான்முகப் பிரமனின் வேலை தொடங்குகின்றது. இங்கே சிவனுக்கு வேலை இல்லை. மேலும் கீழும் எல்லையில்லாத இந்தப் பகுதியில் பல பிரமன்கள் பல்வேறு பிரபஞ்சங்களின் படைப்புக்கு ஆதாரமாக விளங்குகின்றார்கள். இங்கே சிவனும் தென்படுவதில்லை. விஸ்ணுவும் தென்படுவதில்லை. படைப்புத் தொடங்கியவுடன் அது விஸ்ணுபதம் ஆகிறது. உடுக்கைப் பகுதி முதல் அக்கினிப் பகுதிவரை விஸ்ணுவின் காக்கும் பகுதியும் காலமும் ஆகும்.

இது பிரமனின் ஆயுளில் 100 வருடங்கள். அதாவது 31104000,00,00,000 மனித வருடங்கள் இன்று நாம் பிரமனின் 50 வருடங்கள் தாண்டி முதல் நாள் மத்தியானத்தில் உள்ளது. (காலத்தின் அளவு) அதாவது நடராஜரது தலை உச்சி காட்டும் பகுதியில் உள்ளோம். இன்னும் பாதிக் காலம் சென்றால் இப் பிரபஞ்சம் அக்கினிப் பகுதியைச் சென்றடையும். படைத்துக் காத்த இந்தப் பிரபஞ்சம் முழு அழிவைச் சந்திக்கும் இடம் அது. அங்கு பிரமனுக்கும் வேலை இல்லை. விஸ்ணுவுக்கும் வேலை இல்லை.




# போதைக் கடத்தல்காரர்களின் நிழல் அரசு!

■ வி.அருணாசலம்

நீர்கொழும்புச் சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ குருநாகல் நகரில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் கைது செய்யப்பட்ட சம்பவத்தை நகரின் ஒரு பகுதியிலிருந்த ஒரு சி.சி.ரீ.வி. கமரா படம் பிடித்திருக்கிறது. இந்தச் சம்பவங்கள் அடங்கிய படத்தைச் சிங்களத் தொலைக்காட்சிகள் பின்னர் வெளியிட்டன.

மிகப் பெரிய காவியமான மகாபாரதத்தின் சாராம்சத்தைக் கிருஷ்ணர் தேரோட்டும் படத்துக்குள் அடக்கி அந்தக் காவியத்தையே சித்திரிக்குமாறு வரைந்து முடித்தற்கு ஒப்பானதாக அந்தக் காட்சிகள் அமைந்தன. பாதாள உலகக் குழு, போதைப் பொருள் கடத்தல்காரர்கள், பொலிஸார், சிறை நிர்வாகம், அந்தத் தொடர்களின் வங்கிப் பணப் பரிவர்த்தனை என இலங்கை அரசுக்குச் சவாலாக ஒரு நிழல் அரசையே நடத்தி வந்திருக்கிறார் அவர். அவரைச் சூழப் பெரியதொரு போதைக் கடத்தல் கட்டமைப்பு உருவாகியிருப்பது தென்னிலங்கையில் திகைப்பை ஏற்படுத்தியிருக்கிறது.


### இத்தாலிய மாபியர்கள்

கி.பி. 14ஆம் நூற்றாண்டிலிருந்து இத்தாலியில் பரம்பரை பரம்பரையாகக் கைமாற்றப்பட்டு இன்று வரை எவராலும் அழிக்க முடியாத அளவுக்கு மாபியா என்ற அமைப்பு செயற்பட்டு வருகிறது. அவர்களின் செயற்றிறன் மூலம் எந்த விடயத்தையும் கையில் எடுக்கத்தக்க வல்லமை அவர்களிடம் இருப்பதால் 'மாபியா' என்ற சொல் அவர்களுக்குரியதாகவிருக்கிறது.

ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டவிரோத குற்றக் குழு என இதைக் குறிப்பிடலாம். குற்றச்செயல்களில் தெரிந்து திட்டமிட்டு ஈடுபடும் அவர்களைப்போல இலங்கையிலும் பல வகையான மாபியாக்கள் உருவாகி விட்டனர். மணல் வரையில் இவர்கள் பரவிய நிலையுள்ளனர். அதிகார பலம், கள்ளத் துப்பாக்கிகள், அடியாள் பலம், பண பலம் எனப் பல விடயங்கள் இந்த மாபியாக்களிடம் இருக்கும். இவர்களின் கட்டமைப்புப் பற்றிப் படரக்கூடியது. இந்த நிலையே இலங்கையில் போதைப்பொருள் மாபியாக்களிடம் உணரப்பட்டிருக்கிறது.

### மறைகாணிப் பதிவில்...

அனுருத்த சம்பாயோவின் கைதின்போது பிடிக்கப்பட்ட சி.சி.ரீ.வி பதிவில், நீர்கொழும்பு காவல் நிலையத் தலைமை அதிகாரி குருநாகல் நகரில் காவல் வாகனம் ஒன்றுடன் காத்திருக்கிறார். சற்று நேரத்தில் சிவப்பு நிற பஜிரோ வாகனம் ஒன்று வந்து காவல் வாகனத்தின் பின்புறமாக நிறுத்தப்படுகிறது. காவல் அதிகாரி முன் ஆசனத்தில் இருந்து இறங்கி ஜீப்பின் பின்புறமாகச் செல்ல, வெள்ளை நிறத்திலான முழுக்கைச் சேர்ட்டுடன் ரை கட்டியபடி அனிருத்த சம்பாயோ அந்தப் பஜிரோ வாகனத்தில் இருந்து இறங்கி வந்து, காவல் அதிகாரியுடன் கைகுலுக்குகிறார். காவல் அதிகாரி அவரின் தோளில் கைபிடித்தபடி கதைக்கிறார். இருவரும் கதைத்துக் கொண்டிருக்க, சம்பாயோயாருடனோ தனது கைத்தொலைபேசியில் தொடர்பு எடுத்துக் கதைத்து விட்டுத் தொலைபேசியை காவல் அதிகாரியிடம் கதைக்கும்படி கொடுக்க காவல் அதிகாரியும் கதைக்கிறார். பின்னர் காவல் வாகனத்தின் பின்புறமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றுக்கு அருகில் (சாதாரண உடையணிந்த) இருந்து 3 நபர்கள் வந்து சம்பாயோவுடன் கை குலுக்கிக் கதைக்கிறார்கள். (அவர்கள் மூவரும் பதாள உலகக் குழுவைச் சேர்ந்த போதை வியாபரிகளாக இருக்கலாம் என்று ஊடகங்கள் அனுமானிக்கின்றன) பின்னர் சம்பாயோ காவல் வாகனத்தில் பின்னால் ஏறி அமர்கிறார். பொலிஸ் அதிகாரி முன் ஆசனத்தில் ஏறிக் கதவைச் சாத்திப் புறப்பட ஆயத்தமானபோது கறுப்பு ரீ சேட் அணிந்த ஒருவர் சம்பாயோ அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகில் சென்று தனது கைத்தொலைபேசியில் சம்பாயோ கூறுவதை (கதவுக் கண்ணாடியைப் பதித்து) ஒலிப்பதிவு செய்கிறார். பின்னர் காவல் அதிகாரி மீண்டும் வகாகனத்தில் இருந்து இறங்கி சம்பாயோவைக் கதைக்க வேண்டாம் எனத் தடுத்துவிட்டுக் காவல் வாகனத்தை எடுத்துச் செல்கிறார்.






### பெரியதொரு வலைப்பின்னல் இது

இந்த ஒரு சம்பவம் பாதாள உலகக் குழுவினர், காவலர்கள், சிறைச்சாலை நிர்வாகம் என ஒரு பெரிய போதைப் பரிமாற்ற - கடத்தல் வலைப்பின்னல் உருவாகியிருப்பதை அடையாளம் காட்டுகிறது. நல்லாட்சி அரசின்போது பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள், நாட்டின் பாதுகாப்புப் பலவீனம் போன்றன போதைப் பொருள் கடத்தல்காரர்களின் கை ஓங்குவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன என்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். புலனாய்வுத் துறையினரின் செயற்பாடின்றி இருந்தமையே இத்தகைய விபரீதங்களுக்கும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கும் வித்திட்டது என்று மகிந்த அரசால் நிரூபிக்கப்பட்டு வருகிறது. இந்தப் போதைக் கடத்தல் கரர்களின் தலைமைச் செயலகமாகச் சிறைச்சாலைகளே இருந்திருக்கின்றன என்பதே இப்போது வியப்பு.

### அம்பலமாகிய விடயங்கள்

சிறைச்சாலை போதைக் கடத்தல்காரர்களின் தலைமையகமாக மாறியது, பிரபல போதைக் கடத்தல் கைதிகளுக்குச் சம்பாயோ நீர்கொழும்புச் சிறை அறைகளில் குளிரூட்டி வசதிகளைக் கூடச் செய்து கொடுத்து மாதாந்த வாடகை பெற்றது, போதைப் பொருள்களைக் கைப்பற்றுகின்ற சிறப்பு அதிரடிப் படைப் பிரிவினர் தாம் கைப்பற்றிய கெரோய்ன் போன்றவற்றை மீண்டும் கடத்தல்காரர்களுக்கு விற்றுப் பணம் சம்பாதித்தமை ஆகியவை தற்போதைய அதிபர் கோத்தபாய ராஜபக்சவின் அதிரடி நடவடிக்கைகளின் விளைவாக அம்பலமாகின.

இந்தக் காவல் குழுவினர் தற்போது கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போதைக் கடத்தல் சார் குற்றச்சாட்டில் கைதாகின்றவர்களின் குடும்பங்களுக்கு அந்த நபர்களின் செயற்பாட்டுக்கு ஏற்ப 10 ஆயிரம் தொடக்கம் பல லட்சம் வரை பணம் வழங்கப்பட்டிருப்பதும் தெரியவந்திருக்கிறது. அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்ந்தும் போதைப் பொருள் கடத்தலிலும் விற்பனையிலும் மறைத்து துவைப்பதிலும் ஈடுபட்டிருந்தமையும் தெரியவந்திருக்கிறது.

### இரகசிய நிழல் அரசு இது

பாதாள உலகக் குழுவினரும், போதைக் கடத்தல்காரர்களும் இலங்கையில் இத்தாலிய மாபியாக் குழுக்களைப்போல நீண்டகாலம் செயற்பட்டிருக்கிறார்கள். இலங்கை அரசுக்கு எதிராக மிக இரகசியமான நிழல் அரசு ஒன்றை அரச அதிகாரிகள், காவலர்கள், ஏனைய துறை சார்ந்தவர்களை வைத்து அவர்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தியு மிருக்கிறார்கள்.

அரச கட்டமைப்பைத் தமது தேவைகளுக்காக நுட்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை முடக்கி அதன் ஆணிவேரைப் பிடுங்கி எடுப்பது என்பது இலகுவானதல்ல. போதைக் கடத்தல்களுக்கு ஆதரவாகவுள்ள, போதைக்கு அடிமையாகிவிட்ட சிறைக் கைதிகள் சிலர் தமது பாவனைக்கு உரிய நேரத்தில் போதைப் பொருள்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் சிறைக்குள் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

> “ பாதாள உலகக் குழுவினர், காவலர்கள், சிறைச்சாலை நிர்வாகம் என ஒரு பெரிய போதைப் பரிமாற்ற - கடத்தல் வலைப் பின்னல் உருவாகியிருப்பதை அடையாளம் காட்டுகிறது. நல்லாட்சி அரசின் போது பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள், நாட்டின் பாதுகாப்புப் பலவீனம் போன்றன போதைப் பொருள் கடத்தல்காரர்களின் கை ஓங்குவதற்குக் காரணமாக அமைந் திருக்கின்றன என்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். ”

# காதல்

**குட்டிக் கதை**

சதாசிவம் தன் பேத்தியின் எதிர்காலத்தைப் பற்றி மகளிடம் எப்படிப் பேச ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இருபதை நெருங்கிக் கொண்டிருக்கும் பேத்தி தீபிகா தன்னோடு மியூசிக் கிளாஸ் படிக்கும் பரத்தைக் காதலிக்கிறாள். அது சதாசிவத்தின் மகள் காயத்ரிக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. அதனால் மியூசிக் கிளாஸுக்கும் தீபிகாவை தற்போது அனுப்புவதில்லை. அதனால்தான் தாத்தாவிடம் சொல்லி தங்கள் காதலை அம்மாவிற்குப் புரியவைக்க தூது விடுகிறாள் தீபிகா!

காயத்ரி ஆபிஸிலிருந்து வந்தவுடன் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் சதாசிவம்



'காயத்ரி! தீபிகா ஒரு பையனை விரும்புகிறாள். அந்த பையனையே கல்யாணம் பண்ணனும்னு சொல்கிறாள். என்னம்மா செய்யறது?'

'அப்பா இந்த வயசுல அவளுக்கு நல்லது கெட்டது எப்படிப்பா தெரியும்? சொன்னா கேட்கமாட்டேங்கிறா! அதுவும் அந்த பையனைப் பற்றி விசாரிச்சுட்டேன். நல்ல பையன் கிடையாது. நீங்களாவது சொல்லுங்கப்பா'

'எப்படிம்மா சொல்றது?! இதையேதான் இருபது வருஷத்துக்கு முன்னாடி நீ காதலிக்கும் போது நான் சொன்னேன். அப்ப நீ கேட்கல. ஒரே வருஷத்துல நீ அவனை டைவர்ஸ் பண்ணிட்டே! அதேமாதிரி தாம்மா அவ பிடிவாதம் பிடிக்கிறாள்'

சதாசிவம் பேச பேச, கண்கலங்கி தலை குனிந்தாள் காயத்ரி

**ஆர்.ரவிசங்கர்,**
**தமிழகம்**


## கார்ட்டூன்



## காதல் செய்யக் கற்றுக்கொள்...

காதல் செய்யக் கற்றுக்கொள்
காதலர் தினத்தில் மட்டுமல்ல
வாழ்வின் ஒவ்வொரு
கணங்களிலும்
காதலியை மட்டுமல்ல
காதலையும் மனையாளையும்
பெற்றவரையும் பிள்ளைகளையும்
உற்றவரையும் நண்பரையும்
குருவையும் தெய்வத்தையும்
மற்றவரையும்
மனிதத்தையும்....
அன்பு செய்வது
ஆர்வக்கோளாறல்ல
அது ஆன்மாவின் செயற்திறன்
காதல் செய்யக் கற்றுக்கொள்
காலம் காலமாகும்
வாழ்வு வசமாகும்.

- மோகன் சபாபதி




## கீர்த்தி சுரேஷ் மறுப்பு?

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் கீர்த்தி சுரேஷ். நடிகையர் திலகம் படத்தில் சாவித்திரி பாத்திரத்தில் நடித்துப் பிரபலமடைந்தவர். இந்த நிலையில் அவர் தயாரிப்பாளராகுவதற்கு முடிவு செய்திருப்பதாகத் தகவல் வெளியானது. ஆனால், இதற்கு கீர்த்தி சுரேஷ் மறுப்புத் தெரிவித்தார். எனது அப்பாவே தயாரிப்பாளராக இருந்தவர்தான். நான் பல படங்களில் நடித்து வருவதால், தயாரிப்பில் கவனம் செலுத்த எனக்கு நேரமில்லை என்றார்.

## மூளைக்கு வேலை விடைகள்

1) 2 - (4x3) = - 10    2) B) 5511

## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 2 | 9 | | | |
| | | | | | | 1 | 7 | |
| 7 | 9 | 6 | | | 3 | 2 | | |
| | | | | 1 | 5 | | 9 | |
| 3 | 6 | | | | | | 2 | 1 |
| | 4 | | 6 | 9 | | | | |
| | | 2 | 8 | | | 3 | 1 | 4 |
| | 1 | 8 | | | | | | |
| | | | 2 | 7 | | | 5 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 3 | 6 | 9 | 2 | 1 | 4 | 8 |
| 2 | 1 | 9 | 3 | 4 | 8 | 6 | 5 | 7 |
| 8 | 4 | 6 | 7 | 1 | 5 | 2 | 9 | 3 |
| 9 | 2 | 5 | 4 | 8 | 6 | 3 | 7 | 1 |
| 7 | 3 | 4 | 2 | 5 | 1 | 8 | 6 | 9 |
| 6 | 8 | 1 | 9 | 3 | 7 | 5 | 2 | 4 |
| 1 | 5 | 7 | 8 | 6 | 9 | 4 | 3 | 2 |
| 3 | 9 | 8 | 5 | 2 | 4 | 7 | 1 | 6 |
| 4 | 6 | 2 | 1 | 7 | 3 | 9 | 8 | 5 |


பிரேம்

# கிழக்குக் கரையில் மிதக்கும் ஆபத்து

## கப்பலில் தீயைக் கட்டுப்படுத்தாவிட்டால் பேரிடர் சூழும்

பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும் என்பதைப் போலப் போராலும் ஆழிப் பேரலையாலும் பாதிக்கப்பட்ட கிழக்கு மீண்டும் ஒரு பேராபத்தின் விளிம்பில் நிற்கின்றது.


கிழக்குக் கரையில் இருந்து 38 நோட்டிகல் கடல் தூரத்தில் பயணித்துக்கொண்டிருந்த பனாமா கப்பலில் ஏற்பட்ட தீ முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு, கப்பல் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு செல்லப்படாவிட்டால் அதிலிருக்கும் எண்ணெய் கடலில் சிந்தி மிகப் பெரும் இடருக்கு வழிவகுத்துவிடும் என்று அஞ்சுகின்றார்கள் வல்லுநர்கள்.



விபத்திற்குள்ளாகி இருக்கும் கப்பல் பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்டது.

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட எண்ணெய்க் கப்பல்கள் கடலில் விபத்துக்குள்ளாவதும் கடலியல் சூழலுக்கு பேரனர்த்தங்களை உருவாக்குவதும் அடிக்கடி நிகழ்கின்றன.

உலகக் கடல்வழிப் போக்குவரத்தில் கப்பல்களை இலகுவாகப் பதிவு செய்வதற்குப் பனாமா ஒரு வசதியான நாடு. அங்குள்ள சட்டங்களைப் பயன்படுத்திப் பாவனைக்கு



உதவாத சரக்குக் கப்பல்களும் பதிவு செய்யப்படுகின்றன என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே இருக்கின்றது.

இவ்வாறு பதிவு செய்யப்படும் கப்பல்கள் பெருந்தொகை



காப்புறுதி இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் வேண்டும் என்றே கடலில் கைவிடப்படுவதாகவும் சொல்லப்படுகின்றன.

இத்தகைய கப்பல்கள் பெரும்பாலும் சட்ட நடவடிக்கைகளில் இறங்காத சிறிய நாடுகளின் கடற்பரப்புகளில் விபத்துக்குள்ளாகிவருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்போது கிழக்குக் கடற்கரையில் எரிந்துகொண்டிருப்பதும் பனாமாவில் பதியப்பட்ட ஒரு எண்ணெய் தாங்கிக் கப்பல்தான்.

சுமார் இரண்டு மில்லியன் பீப்பாய்கள் மசகு எண்ணை இந்தக் கப்பலில் இருக்கிறது.

குவைத்தில் இருந்து இந்தியாவின் ஒரிஸாவில் உள்ள பிரதீப் எண்ணெய் உற்பத்தி கூட்டு நிறுவனத்துக்காக (**Paradip refinery**) மசகு எண்ணெய் ஏற்றிச் சென்ற 'நியூ டயமன்ட்' (**New Diamond**) என்ற கப்பலே அம்பாறைக் கரையில் இருந்து **38** கடல் மைல் தொலைவில் தீப்பற்றி எரிகின்றது.

கப்பலின் இயந்திரப்பகுதியில் ஏற்பட்ட வெடிப்பை அடுத்து மூண்ட தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இலங்கை, இந்தியக் கடற்படைகள் கூட்டாக ஈடுபட்டுள்ளன.

இலங்கைக் கடற்படை, வான் படை, துறைமுக அதிகார சபை, இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோரக் காவற்படை என்பன இணைந்து கப்பலில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க முழு முயற்சியை எடுத்து வருகின்றன.

எம்.ஐ. **17** உலங்கு வானூர்தி, கரையோர வானூர்தி என்பவற்றின் துணையுடன் கப்பலின் எரியும் பகுதிக்கு வானிலிருந்து தண்ணீர் கொட்டப்படுகின்றது என்று கடற்படை அறிவித்துள்ளது.

கடலில் கப்பல்களில் ஏற்படும் தீயை அணைப்பதில் நிபுணத்துவம் பெற்ற இந்திய கடற்படை சிறப்புப் படகு ஒன்றும் அதற்குத் துணையாக மற்றொரு படகும்கூட இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன என்றும் கடற்படை வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

அத்துடன் கரையை நோக்கி மிதந்துவரும் எம்.ரி. நியூ டயமன்ட் கப்பலை ஆழ் கடலுக்குள் இழுத்துச் செல்லும் முயற்சிகளும் எந்த நேரத்திலும் தொடங்கப்படும் என்றும் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது கடற்படை.

இந்த வெடிப்பினால் பிலிப்பைன்ஸ் நாட்டுக் கப்பல் பணியாளர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாலுமிகள் உட்பட **22** பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கப்பலில் மேலும் தீ பரவுவது கட்டுப்படுத்தப்படாவிடில் அண்மையில் மொறீசியஸ் கரையில் நிகழ்ந்தது போன்ற எண்ணெய்க் கசிவு பேரனர்த்தம் சிறிலங்காவின் கிழக்குக் கடலில் உருவாகலாம் என்று சூழலியலாளர்கள் அஞ்சுகின்றனர்.



கப்பலில் 'சிறிய அளவில் எண்ணெய்க் கசிவு அவதானிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்திருக்கும் சிறிலங்காவின் கடல்வாழ் சுற்றுச்சூழல் அதிகார சபையின் அதிகாரி தர்ஷானி லஹந்தபுர, 'நிலைமையை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தியக் கடலோரக் காவல் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கப்பலில் இருந்து எண்ணெய்க் கசிவு எதுவும் அவதானிக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

கப்பலின் இயக்கம் கைவிடப்பட்டுவிட்டதால் அது இப்போது அலைகளால் உந்தப்



பட்டுக் கிழக்குக் கரையோரத்தை அண்மித்து வருகின்றது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி அது கரையில் இருந்து **25** கடல் மைல் தொலைவில் இருந்தது.

கப்பலின் இயந்திர அறையில்



இருந்த சூடாக்கி (பொய்லர்) வெடித்ததால் தீ ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். இந்த வெடிப்பிலேயே பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கப்பற் பணியாளர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

கப்பலில் ஏற்பட்ட தீ அதன் எண்ணெய்க் களஞ்சியத்தை எட்டவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தாலும் அந்த எண்ணெய் கடலில் கொட்டினால் அது இலங்கைக்கு மட்டுமல்ல உலகம் முழுவதற்குமே ஆபத்தானது என்று எச்சரிக்கிறார் தர்ஷானி லஹந்தபுர. ■

# ஐ.பி.எல் பக்கம் கவனத்தை ஈர்த்துள்ள வீரர்களின் விலகல்...

குமரன்


நடப்பாண்டுக்கான ஐ.பி.எல் போட்டிகள் பல தடைகளுக்கு மத்தியில் எதிர்வரும் 19ம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. இந்த நிலையில் ஒவ்வொரு அணிகளும் தங்களுக்குள் பலப்பரீட்சை நடாத்தி தாம் ஒவ்வொருவரும் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை நிரூபிக்க காத்துக்கொண்டிருக்கின்றன. அதிலும் முக்கியமாக நடப்புச் சம்பியனாக நான்கு தடவைகள் கிண்ணம் வென்று அசைக்கமுடியாத இடத்தில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி மறுபுறம் எந்தப் போட்டியாக இருந்தாலும் எதிரணிக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும் தல டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆகிய இரு அணிகளும் தங்களில் யார் இம்முறை கிண்ணத்தை தமதாக்கிக் கொள்ளப்போகின்றோம் என்ற எதிர்பார்ப்பினை ரசிகர்கள் மத்தியில் வலுப்படுத்திவருகின்றது. எந்த போட்டிகளாக இருந்தாலும் இந்த அணிகள் விளையாடும் போட்டிகள் கண்ணுக்கு விருந்தே.




இந்த நிலையில் தான் மும்பை, சென்னை என்ற இரு பெரும் துருவங்களின் தூண்கள் என்று ரசிகர்களால் வர்ணிக்கப்படுகின்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளரும் நம்பிக்கை நட்சத்திரமுமான லசித் மலிங்கா மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சின்னத் தல என்று அழைக்கப்படும் சகலதுறை வீரரும் நம்பிக்கை நட்சத்திரமுமான சுரேஸ் ரெய்னா இருவரும் போட்டிகளில் கலந்து கொள்ள ஐக்கிய அரபு இராட்சியத்துக்கு சென்ற பின்னர் அவர்களுடைய தனிப்பட்ட சில தேவைகள் காரணமாக சொந்த நாடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

ஐ.பி.எல் போட்டிகள் தொடங்கியதில் இருந்து இடம்பெற்ற அனைத்துப் பருவங்களிலும் இந்த இருவரும் தாங்கள் அங்கத்துவம் பெற்றிருக்கும் அணிகளால் வெளியேற்றப்படாத நிரந்தர வீரர்களாக இருந்து வருகின்றனர். அந்த வகையில் சுரேஸ் ரெய்னா சென்னை அணிக்காக 193 போட்டிகளில் விளையாடி 5,368 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். அதன் அடிப்படையில் நடைபெற்ற அனைத்து போட்டிகளிலும் அதிக ஓட்டங்களை பெற்றவர்கள் வரிசையில் இரண்டாவதாக உள்ளார். தேவையான நேரங் களில் சூட்சுமமாக பந்து வீசி அணியினை வெற்றிக்கு அழைத்துச் செல்லும் திறமையும் கொண்ட இவர் ஐ.பி.எல் தொடரில் 102 பிடியெடுப்புகளை செய்து அதிக பிடியெடுப்புகளை செய்தவர் என்ற சாதனையை தன்னகத்தே கொண்டுள்ளார். இவரது திடீர் விலகல் சி.எஸ்.கே இற்கு ஈடுசெய்யமுடியாத ஒன்று.

இவருக்கு அடுத்தபடியாக மும்பை இந்தி யன்ஸ் அணியின் தூண் என்று வர்ணிக்கப்படும் லசித் மலிங்க பந்து வீச வந்துவிட்டாலே துடுப்பாட்ட வீரர்களுக்கு நடுக்கம் தொற்றிக்கொள்ளும், அந்தளவுக்கு எப்படி பந்துவரும்என்று தெரியாது. ஓட்டங்களை வாரி வழங்கினாலும் முக்கிய நிமிடங்களில்




இலக்குகளை சரித்துவிட்டு கர்ஜனையுடன் வலம்வருவார் மலிங்கா. ஐ.பி.எல் ஐ பொறுத்தமட்டில் அனைத்துத் தொடர்களிலுமாக 122 போட்டிகளில் விளையாடிய மலிங்கா 170 இலக்குகளை வீழ்த்தி முதலாவதாக உள்ளார். அதைவிட முக்கியமாக கடந்த ஆண்டின் இறுதிப் போட்டியில் கடைசி ஓவரில் சிறப்பாக பந்து வீசி அசைக்கமுடியாத வெற்றியை பதிவுசெய்து வெற்றி நாயகனாக வலம் வந்து கொண்டிருந்தார் மலிங்கா. அவரது இந்த விலகல் நிச்சயம் மும்பை அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியே தீரும்..

இவர்கள் இருவரதும் விலகல் இந்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகளில் ஈடுசெய்யமுடியாத ஒன்றாகவே காணப்படபோகின்றது. அத்துடன் சென்னை அணி சார்ந்த சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு போட்டிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடரும் விலகல்கள் அசைக்க முடியாத சம்பியன்களின் வரிசையில் மாற்றத்தை கொண்டுவந்து வேறு ஓர் அணி வெற்றிபெறுமா? என்கின்ற எண்ணத்தை ரசிகர்களிடத்தே ஊட்டியுள்ளதுடன் எதிர்பார்ப்புகளையும் பலப்படுத்தியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.. ■

